Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

விஷானி நகை மாளிகை



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை (18.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 079

















# உயர்நீதிமன்ற நீதிபதிகளால் விசாரணைகள் புறக்கணிப்பு

## பிரதம நீதியரசர் விவகாரம் காரணமா?

(கொழும்பு)

உச்சநீதிமன்றத்தில் நேற்றைய தினம் வழக்குகளை விசாரிக்க வேண்டிய நீதிபதிகள் மூவரில் இருவர் நீதிமன்றம் வராத நிலையில் வழக்குகள் ஒத்திப்போடப்பட்டுள்ளன.

நீதியரசர் ஷிராணி திலகவர்த்தனவுடன் சேர்ந்து நீதிபதிகள் சந்திரா ஏக்கநாயக்க, எஸ்.ஐ. இமாம் ஆகியோர் வழக்குகளை விசாரிப்பதாக இருந்தது.

தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான கண்டன பதவிநீக்க விசாரணைகளில் அவருக்கு எதிராக சாட்சியம் வழங்கியிருந்தவர் நீதிபதி ஷிராணி திலகவர்த்தன ஆவார்.

நீதிபதி திலகவர்த்தனவுடன் சேர்ந்து அமர்ந்து வழக்குகளை விசாரிக்கவிருந்த நிலையில், முன்னறிவிப்பு எதுவும் இன்றி நீதிபதிகள் ஏக்கநாயக்கவும் இமாமும் நீதிமன்றம் வரவில்லை.

இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் உச்ச நீதிமன்ற வழக்குகளை நீதிபதி ஒருவர் தனியாளாக விசாரிக்க முடியாது என்பதால் விசாரணைக்கு வந்த முப்பதுக்கும் மேற்பட்ட வழக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சியில் மேலும் இருவர் கைது

(வடமராட்சி)

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பகுதியில் மேலும் இருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு அண்மையில் வைத்தே இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆதிகோவிலடியைச் சேர்ந்தவர்களான சண்முகம் நகுலன் (வயது-26) மற்றும் கோவிந்தன் சுதர்சன் (வயது-29) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதுவரை வடமராட்சிப் பகுதியில் 11 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(116)

## விபத்தில் சிக்கிய முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு படுகாயமடைந்த நிலையில் . யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் நேற்று மதியம் உயிரிழந்தார்.

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் மகேந்திரன் (வயது-72) என்பவரே உயிரிழந்தவராவார்.

நீர்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. உடனடியாகவே அவர் யாழ்போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

# அரசியல், தொழில்நுட்ப உதவிகள் இலங்கைக்கு வழங்கப்படும்

## அவுஸ்ரேலியா அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்காக இலங்கைக்குத் தேவையான அரசியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான உதவிகளை அவுஸ்ரேலியா வழங்கும் என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான சகல தொழில்நுட்ப உதவி களையும் அவுஸ்ரேலியா வழங்கும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, இலங்கையில் நடைபெறவுள்ள மாநாட்டுக்குப் போக வேண்டாமென கனடா அழுத்தம் கொடுக்கும் நிலையில்

19 ஆம் பக்கம் பார்க்க

## மயிலங்காட்டில் மிதிவெடி குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் மயிலங்காடு வைரவர் கோவில் பகுதியில் மீள்குடியேறிய ஒருவர் தமது வளவைத் துப்புரவு

19 ஆம் பக்கம் பார்க்க

# கசூரினா கடலில் நீராடுவதை தவிர்க்க கோருகிறார் நீதவான்

(காரைநகர்)

தற்போதைய சீரற்ற கால நிலை காரணமாக காரைநகர் கசூரினா கடலில் இறங்கி நீராடுவதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை நீதவான் அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் குறித்த கடலில் நீராடிய இளைஞனொருவன் அலை அடித்துச் சென்று உயிரிழந்த நிலையில் நேற்றுச் சடலம் கரையொதுங்கியிருந்தது. சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்ட வேளையே நீதவான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் எமது செய்தியாளரிடம் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதைய அசாதாரண காலநிலையால் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுகிறது. எனவே இந்தக் காலப் பகுதியில் கடலில் இறங்கி நீராடுவது ஆபத்தை விளைவிக்கக் கூடும்.

எனவே, அநாவசிய உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் கடலில் இறங்குவதைத் தவிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (50)

# அரியாலையில் விபத்து இளைஞர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் நேற்று இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் மரண மடைந்துள்ளார். மேற்படி பகுதியில் ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இந்த இளைஞர் வீதியால் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோதுண்டமையால் மரண மடைந்துள்ளார். யாழ்.முத்தையா வெதுப்பக ஊழியரான யோ. டிலாகரன் (வயது-32) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று இரவு வைக்கப்பட்டிருந்தது.

இவர் சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், தற்போது நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உளவியல் பாதிப்பிற்குள்ளாகிய தமிழ் யுவதிகள் திருமலைக்கு



இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட, தமிழ்ப் பெண்கள் மத்தியில் கடந்த வாரம் ஏற்பட்ட திடீர் உளவியல் குழப்பத்தை அடுத்து, அவர்கள் திருகோணமலைக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள இராணுவத்தின் 6 ஆவது பெண்கள் படையணி முகாமில் இருந்த 15 தமிழ்ப் பெண் பயிலுனர்கள் கடந்த 11ஆம் திகதி நள்ளிரவு திடீரென உளவியல் குழப்பத்துக்கு உள்ளாகினர்.

இதையடுத்து படையினரால் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

சிகிச்சைகள் முடிந்த நிலையில் அவர்கள் மீண்டும் 6 ஆவது பெண்கள் படையணி முகாமுக்கே கொண்டு செல்லப்பட்டனர்.

இதையடுத்து, தொடர்ந்து அவர்களை படை முகாமில் தங்கவைத்திருப்பது மீண்டும் உளவியல் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்பதால், கடந்த 13, 14 ஆம் திகதிகளில் திருகோணமலைக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் பிரெட்றிக் கோட்டை, கோணேசர் கோவில், கிண்ணியா, நிலாவெளிக் கடற்கரை, கன்னியா வெந்நீரூற்று போன்ற இடங்களுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்ட 103 தமிழ்ப்பெண்களில் 96 பேர் மட்டுமே இந்தச்

19 ஆம் பக்கம் பார்க்க

# யாழில் சுகாதார மேம்பாட்டுத் திட்டம் சர்வதேச செம்பிறைச் சங்கம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, கோப்பாய் மற்றும் தெல்லிப்பளைப் பிர தேச செயலர் பிரிவுகளில் சர்வ தேச செம்பிறைச் சங்க சம்மேள னத்தின் நிதியுதவியின் கீழ் இலங்கைச் செஞ்சிலுவைச் சங் கத்தின் யாழ். கிளையினரினால் மேற்கொள்ளப்பட்டு வந்த குடி நீர் மற்றும் சுகாதார நலன்திட் டங்கள் பூர்த்தியடையும் நிலை யை எட்டியிருப்பதாக இலங் கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரிமாதம் ஆரம் பிக்கப்பட்ட இத்திட்டத்தில் குறி த்த பகுதிகளில் தெரிவுசெய் யப்பட்ட பயனாளிகளுக்கு மல சலகூடங்கள் அமைத்துக்கொடுத் தல், மலசலகூடங்களைத் திருத் திக்கொடுத்தல், குடிநீர் கிணறு களை அமைத்துக் கொடுத்தல் மற்றும் சுகாதார அறிவூட்டல் நிக ழ்ச்சித்திட்டம் போன்றன. செயற் படுத்தப்பட்டுவந்தன.

இத்திட்டம் இந்தமாதத்துடன் நிறைவுபெறும் வகையில் பூர் த்தி செய்யப்படுவதாகத் தெரிய வருகின்றது.

இதன்கீழ் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 131 வீடுகளில் புதிதாக மலசல கூடங் கள் அமைத்துக்கொடுக்கப்பட் டுள்ளதுடன் அப்பகுதியில் உள்ள 14 பாடசாலைகளில் 144 மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தப் பாடசாலை களில் 20 சிறுநீர் கழிக்கும் கூடங் களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பளைப் பகுதியில் 28 பொதுக்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் ஐந்து குழாய்க்கிணறுகளும் அமை த்துக் கொடுக்கப்பட்டிருப்பதா கவும் இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் அந்த அதிகாரி தெரி வித்துள்ளார். (பா)

# கசூரினா கடலில் மரணித்த இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)


காரைநகர் கசூரினா கடலில் குளித்துக்கொண்டிருக்கையில் காணாமற்போயிருந்த இளை ஞனது சடலம் அந்தக் கடற் பகுதியில் இருந்து காரைநகர் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று ஒப்படைக் கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் குப்பி ளானை சேர்ந்த உதயகுமார் நிரஞ்சன் (வயது - 21)என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள் ளது. இவர் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை தனது நண்ப ர்கள் நால்வருடன் கசூரினா கடற்கரைக்குச் சென்று கடலில் நீராடிக் கொண்டிருக்கையில் பிற்பகல் 1.00 மணியளவில் திடீ ரென்று காணாமல் போயிரு ந்தார்.

சம்பவத்தை அடுத்து அந்தக் கடலில் இருந்து நேற்று முன் தினம் நள்ளிரவு வரை அவர் மீட்கப்படவில்லை. இந்நிலையி லேயே நேற்றுக்காலை அவரது சடலம் கரையொதுங்கியதனை அடுத்து காரைநகர் பொலிஸாரி னால் மீட்கப்பட்டு பின்வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட் டிருந்தது. சடலம் விசாரணை களை அடுத்து நேற்றுப் பிற் பகல் உறவினர்களிடம் ஒப்படை க்கப்பட்டது.

குறித்த இளைஞர் கடலில் மூழ்கியே இறந்ததாகவும் விசார ணைகள் மூலம் தெரியவந்துள் ளது. (165,50,பா)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை மற் றும் பயிர்ச்செய்கைகள் பரவ லாக மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பயிரழிவை ஏற்படுத் தும் கட்டாக்காலி கால்நடைக ளைக் கட்டுப்படுத்தி செய்கை யைப் பாதுகாக்க வழிவகை செய்யுமாறு விவசாயிகள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இம்மாவட்டத்தில் உள்ள கண டாவளை, கல்மடுநகர் ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலி களாகத் திரியும் ஆடு, மாடுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுதானியப் பயிர்களை அழி த்து நாசமாக்குவதாகவும் இத னால் தாம் எந்தப் பயனையும் அடையமுடியாதுள்ளதாக விவசா யிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதைவிட இப்பிரதேசத்தில் திரியும் கட்டாக்காலிக் கால்நடை கள் வீதியில் திரிவதால் விபத் துக்கள் ஏற்படுவதாகவும் தெரி விக்கும் விவசாயிகள் இது தொட ர்பாக கமக்கார அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றனர்.(கே)

# இலவச மருத்துவ முகாம்

அண்மையில் இயக்கச்சி பிரதேசத்தின் 552 ஆவது படைப்பிரி வினர் பொதுமக்களின் நலன்கருதி மருத்துவ முகாமொன்றை நடத்தினர். இம் முகாமில் மக்களுக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டதுடன், மருந்துகளும் வழங்கிவைக்கப்பட்டது. 900க்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு பயனடைந்த இம் மருத்துவ முகாம் இயக்கச்சி அரச தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

விசேட நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள், மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் ஈ.சி.ஜி. தொழில் நுட்பவியலாளர்கள் உட்பட 30 பேரைக்கொண்ட மருத்துவ குழு இச் சேவையை மக்களுக்காக வழங்கினர். இதில் இக் கஷ்ட பிர தேசத்தைச் சேர்ந்த மக்கள் ஈ.சி.ஜி அறிக்கை, இரத்தப் பரிசோதனை மற்றும் ஏனைய பரிசோதனைகளை மேற்கொள்ளவும் வாய்ப்புக் கிட்டியது. இம் முகாமில் இராணுவத்தினர், போக்குவரத்து ஒழுங்கு வசதிகள் மற்றும் ஏனைய சேவைகளையும் வழங்கினர்

# பதவி உயர்வு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக தலைமைக் காரியா லய சிரேஷ்ட சமுர்த்தி முகா மையாளர் தி.யோகேந்திரன் சமு ர்த்தி அதிகாரசபையால் மாவ ட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமை யாளராகப் பதவி உயர்த்தப் பட்டு முல்லைத்தீவு மாவட்டத்தி ற்கு நியமிக்கப்பட்டு கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (01)

# கலந்துரையாடல்

கொமன்வெல்த் (பொதுநல வாய நாடுகள்) நாடுகளின் விளையாட்டு அதிகாரிகள் கிளி நொச்சி மாவட்டத்திலுள்ள விளை யாட்டு அதிகாரிகளுடன் இன் றைய தினம் காலை 10.00 மணி க்கு விளையாட்டினூடான சமா தானம் என்ற தொனிப்பொரு ளில் கலந்துரையாடல் ஒன்றினை அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண டபத்தில் நடத்தவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (142)

## இன்றைய நிகழ்வுகள்

# அமைச்சர் திஸ்ஸ இன்று கிளிநொச்சிக்கு

சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலி யத்த இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செய லகத்தில் கடமையாற்றுகின்ற சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர்கள் ஆகியோரைச் சந்திக்கவுள்ள துடன் மாவட்டத்தில் சிறுவர்கள், பெண்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பட்ட பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (142)

# சர்வதேச முதியோர் மாற்று வலுவுள்ளோர் விழா

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச முதியோர் மாற்று வலுவுள்ளோர் தினவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்குச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கரைச்சிப் பிரதேச செயலர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (142)

# தமிழ் இலக்கியவிழா இன்று

வடமாகாணப் பண்பாட்டலு வல்கள் திணைக்களம் நடத்து கின்ற தமிழ்விழா பல தடவை கள் பிற்போடப்பட்ட நிலையில் மீண்டும் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள நடராசா பரமேஸ் வரி மண்டபத்தில் இன்று காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இம்மாதம் 8, 9 ஆம் திகதிக ளில் நெல்லியடி மத்திய மகாவி த்தியாலயத்தில் இவ்விழா வினை நடத்துவதற்கு ஏற்பாடு கள் செய்யப்பட்ட நிலையில் தவி ர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டமை அறிந்ததே. இரண்டு நாள் நிகழ்வுகளும் ஒரு நாளில் காலை, மாலை நேரங் களில் நடத்துவதற்கான ஒழுங் குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலை அமர்வுகளில் கலை நிகழ் வுகளும், மாலை அமர்வுகளில் சிறந்த இலக்கிய நூற்தேர்வுகள் மற்றும் கலைஞர்கள் கௌரவிப் புகள் என்பனவும் இடம்பெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது.(142)

# சந்திப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு முன் பள்ளி நிர்வாகத்தினருடன் மரு தங்கேணி பிரதேச செயலர் திரு லிங்கநாதன் சந்திப்புக்களை மேற கொண்டு வருகின்றார்.

அதன்படி இன்று செவ்வா ய்க்கிழமை காலை 10.00 மணி க்கு வத்திராயன் மத்தி விக்னே ஸ்வரா முன்பள்ளியில் முன் பள்ளி சிறார்களின் பெற்றோர் களையும் நிர்வாகத்தினரையும் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இக்கூட்டத்தில் முன் பள்ளி சிறார்களுக்கு வழங்கப் படுகின்ற உணவு, பால்மா, போஷ குறைபாடுகளைக் 'கேட்டறிவ தற்கும் முன்பள்ளியின் தேவை கள் குறித்தும் கலந்துரையாடப் படவுள்ளது. (38)

# பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி மாவட்ட செய லக சிறுவர் நன்னடத்தைப் பிரி வின் ஏற்பாட்டில் மாவட்டத்தி லுள்ள சிறுவர் இல்ல முகாமை யாளர்களுக்கான ஒருநாள் பயி ற்சிப் பட்டறை இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செய லகத்தில் நடைபெறவுள்ள இந் தப் பயிற்சிப் பட்டறையில் சிறு வர் இல்லங்களின் முகாமையா ளர்கள், பொறுப்பாளர்கள் கல ந்துகொள்ளவுள்ளனர். (142)

# கஜமுக சங்காரம்

முழங்காவில் செல்லை யோக சித்திவிநாயகர் ஆலயத் தில் கஜமுகசூர சங்கார நிகழ்வு இன்று மாலை 400 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதனைத் தொட ர்ந்து விசேட அபிஷேக ஆரா தனைகள் இடம்பெறுவதுடன் நாளை பாறனை நிகழ்வும் இடம் பெறவுள்ளது.



கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழக நிதி அனுசர ணையில் கைதடி வடக்கு செல்வா சனசமூகநிலைய அங்கத துவ குடும்ப மாணவர்களுக்கான பாடசாலை உபகரணம் வழங்கும் நிகழ்வு நிலையத் தலைவர் இ.கந்தசாமி தலை மையில் நடைபெற்றபோது உதவிபெற்ற மாணவர் குழுவின ரைக் காணலாம். (90)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

உறுப்புரை - 16

1. முழு வயதடைந்த ஆண்களும், பெண்களும் இனம், தேசிய இனம் அல்லது சமயம் என்பவை காரணமாக கட்டுப்பாடெதுவுமின்றி திருமணம் செய்வதற்கும் ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணஞ்செய்யும் பொழுதும், திருமணமாகி வாழும் பொழுதும், திருமணம் குலைக்கப்படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமை உண்டு.

2. தம்பதியர்களாக வாழ இருப்போரது சுயாதீனமானதும் முழுமையானதுமான சம்மதத்துடன் மட்டுமே திருமணம் நிறைவேற்றப்படலாம்.

3. குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும், அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும் அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

# மக்களிடம் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் நாவலர் பெருமான்

## - கலாநிதி ஆறு.திருமுருகன்

(திருநெல்வேலி)

சைவத்தையும், தமிழையும் காப்பதற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் நாவலர் பெருமான். அவருக்கு சிலை அமைத்து வீதியுலாக் கொண்டு வந்து பெருமைப்படுத்திய மட்டக்களப்பு மக்களின் மகத்தான பணி போற்றுதற்குரியது என கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையும், அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நடாத்திய நல்லை நகர் நாவலர் பெருமானின் சைவ மாநாடு அண்மையில் களுவாஞ்சிக்குடி இராச மாணிக்கனார் மண்டபத்தில் நடைபெற்ற போது சிறப்புரை யாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரைநிகழ்த்திய செஞ்சொற்செல்வர்,

இருட்டிலே இருந்த சைவ நூல்களை நவீன உலகுக்கு பொருத்தமாக அரங்கேற்றிப் பாதுகாத்த பெருமை நாவலரையே சாரும்.

வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் முகம் கொடுத்த மட்டக்களப்பு சைவ மக்கள் எதிர்கால சந்ததி தொடர்பாக எடுக்கும் ஆன்மீக விழிப்புணர்வு செயற்பாடுகள் மிகவும் பாராட்டுக்குரியது.

நாவலர் பெருமான் தன்னைத் தியாகம் செய்து தன் சமூகத்துக்காக வாழ்ந்தவர். சுதேசிகளுக்கு சொந்தமாக சைவப் பாடசாலைகள் உருவாக வேண்டும் என அயராது பாடுபட்டவர்.

மட்டக்களப்பில் உள்ள சகல பாடசாலைகளிலும் சரஸ்வதி சிலை நிறுவி அறநெறிப் பாடசாலைகளை ஒழுங்குபடுத்தி ஆதரவற்ற சைவக் குழந்தைகக்கு இல்லம் அமைத்து சைவப் பண்பாடு காக்கும் அனைவருக்கும் சைவ உலகம் என்றும் நன்றிக்கடன்பட்டது.

போரில் பல பிள்ளைகளை இழந்த பிரதேசம் மட்டக்களப்பு. போரின் அனர்த்தங்களால் பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்கள் சமய உணர்வோடும், மொழிப் பற்றோடும் எதிர்கால சந்ததியின் நன்மை கருதி எடுக்கும் முயற்சிகள் மிகவும் பாராட்டுக்குியது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலை கலாசார நிகழ்வுரைகளும், கருத்தரங்குகளும் சிறப்பாக இடம் பெற்றன. நீண்ட இடைவெளிக்குப் பிறகு கிழக்கிலங்கையில் நாவலர் மாநாடும் எழுச்சி விழாவாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (137)

## பன்றித்தலைச்சி அம்மனுக்கு வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு காமதேனு வாகனத்திருவிழாவும், 25 ஆம் திகதி இரவு கைலாச வாகனத்திருவிழாவும், 26 ஆம் திகதி நண்பகல் வேட்டைத்திருவிழாவும், இரவு சப்பறத்திருவிழாவும், 27 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 10.00 மணிக்கு இரதோற்சவமும், 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 4.00 மணிக்கு கொடி இறக்கமும் இடம் பெறவுள்ளன.

கலாநிதி துன்னையூர் சிவசக்தி ஸ்ரீராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் இக் கிரியைகள் இடம்பெறவுள்ளன.

## சீரான மின்விநியோகத்தை வழங்க புதிய செயற்திட்டங்கள் முன்னெடுப்பு

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேசத்துக்கென பருத்தித்துறை மின்சார சபையினரால் மின் பாவனையாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு முன்னொருபோதும் இல்லாதவாறு உயிர் உடமைகளைப் பாதுகாக்கும் வகையில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை மின்சாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

வீட்டு மின்வயரில் இருந்து மின்கம்ப கம்பியை தொடுக்கும் இணைப்பு கம்பிகளில் காபன் பிடித்து வீட்டு மின்தடை ஏற்படாமல் இருக்க (HCLAMP) என்ற பாதுகாப்பு கிளிப் போடப்பட்டு வருகின்றது. இவ்வாறு மின்கம்பங்கள் ஊடாக செல்லும் இரு அவத்தை கம்பிகளுக்கு பொருத்தப்பட்டிருக்கும் வீட்டு மின்வயர்களையும் இணைத்து HCLAMP என்ற இரண்டு கிளிப் பொருத்தப்பட்டு வருகிறது.

பிரதானமாக கடற்கரையோரங்களில் காற்றுடன் கூடிய உப்புக்கறை படிந்து காபன் பிடிப்பதைத் தவிர்க்கவே இவை போடப்படுவதாகவும், இதனால் சுமார் 10 வருடங்களுக்கு காபன் பிடிக்காமல் வயர் பாதுகாக்கப்படுவதுடன் சீரான மின்விநியோகத்தையும் வழங்க முடியும்.

சட்டவிரோதமான முறையில திருட்டு மின்சாரம் பெறுபவர்களினால் ஏனைய மின்பாவனையாளர்களுக்கும் உயிர் உடமை சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்கவும் ஒரு கிலோமீற்றர் மற்றும் அரைக்கிலோ மீற்றர் தூரம் உள்ள வீடுகளுக்கு செல்லும் இடை ஒழுங்கையில் நாட்டப்பட்டிருக்கும் மின்கம்பங்களுக்கு உருகி (பீஸ்) இணைக்கப்பட்டு வருகிறது.

மேலும் மின்பாவனையாளர்களின் மின்பாவனையும் அதிகரிக்க அதிகரிக்க புதிய தரத்திலான மின்மாற்றிகளும் பொருத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக பருத்தித்துறை கற்கோவளம், அல்வாய் போன்ற பகுதிகளுக்கே கடந்த வருடம் தரம் கூடிய மின் மாற்றிகள் பொருத்தப்பட்டன. (116)

## சூரன்போர்

(தும்பளை)

தும்பளை மேற்கு பெரிய வளவு ஸ்ரீ வரதவிநாயகர் தேவஸ்தான கஜமுக சூரசம்கார நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சூரசங்காரம் நடைபெறவுள்ளது. (62)

## நெடுந்தீவு விவசாயிகளின் தேவைகள் குறித்து ஆராய்வு



(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச விவசாயிகளின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் ஆராயும் கலந்துரையாடல் அண்மையில் நெடுந்தீவு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளரும் ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளருமான தானியேல் றெக்சியன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களான வி.இளங்குமாரன், திருமதி சி.சிவதீபன் மற்றும் போதனாசிரியர்களான எஸ்.ராமநாதன், கோகுலராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநரின் பணிப்பின் பேரில் விவசாய மக்களுக்கான உடனடித்தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்தும் நெடுந்தீவு பிரதேச விவசாயத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்வது மற்றும் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.



தேசிய கல்வி நிறுவகத்தின் தலைமைத்துவப் பயிற்சி மையத்தில் அண்மையில் நடைபெற்ற பாடசாலைத்திட்டமிடல் தொடர்பான கருத்தரங்கில் பங்குபற்றிய அதிபர் ஒருவருக்கு இக்கற்கை நெறியின் தமிழ்மொழிப் பிரிவு இணைப்பாளர் செல்வி எஸ்.ஜெனீறா சான்றிதழ் வழங்குவதையும், அதில் கலந்து கொண்ட அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்களையும் காணலாம். (06)

## யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தால் உபகரணம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் மாற்று வலுவுடையோர் தினத்தை முன்னிட்டு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலுவிழந்தோருக்கு நடமாட உதவும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவன தலைவர் டாக்டர் திருமதி கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார வேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் க.நந்தகுமாரன், சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் இ.கனகரத்தினம், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜி.செந்தூரன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.விநோதன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மெதுவாகப் பேசு. அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும் நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.

- *வள்ளலார்.*


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.thinamurasu.net**


## அழிவுகளில் ஆனந்திக்கும் சிறுமை!

விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் என்ற தொடரை தனக்குக் கிடைத்த ஆவணங்களின் அடிப்படையில் அர்ச்சுணன் தினமுரசில் எழுதிவருவதைப் படித்திருப்பீர்கள். ஆனால் உள்ளூர் தமிழ்ப் பத்திரிகைகளையும் புலம்பெயர் தமிழ் இணையத் தளங்களையும் பார்க்கும்போது இந்த ஊடகங்களின் அழிப்பு வேட்கை இவ்வளவுக்குப் பிறகுந் தீரவில்லை என்றே தெரிகிறது. தமிழ் மக்களையும் முற்றாய் அழித்து முடித்தால்தான் திருப்தி என்றே இயங்கிவருகிறார்கள்.

இவர்களது பரபரப்புத் தேடுகையும் இனவாத அரசியல் தினவும் இங்கே ஏதாவது அசம்பாவிதங்களும் சீரழிவுகளும் இருந்து கொண்டேயிருக்க வேண்டும் என்று ஆவலாதிப்படும் வக்கிர ஆசைகளுக்கே தள்ளியிருக்கிறது. யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்று தனது ஆங்கில இணையத்தளத்தில் யாழ்ப்பாணத்தில் கலாசாரம் சீரழிந்து நாசமாகிக்கொண்டு போவதைப் பற்றி மிகுந்த ஆரவாரத்துடன் எழுதியிருக்கிறது. புள்ளிவிவரங்கள் மற்றவர்களை அதிர்ச்சிப்படுத்த வேண்டும் என்ற பேரவாவில் யாழ்ப்பாணமும் மக்களும் நாசமாவவதை உச்சபட்சத்திற்கு எடுத்தியம்பியிருக்கிறது.

ஒரு உதாரணம், யாழ்ப்பாணத்தில் கலாசாரச் சீரழிவினால் பாடசாலை மாணவியரில் 90 வீதமானோர் கர்ப்பமாகியிருக்கிறார்கள் என்றொரு புரளியைக் கூசாமல் தனது இணையத்தில் எழுதியிருக்கிறது அப்பத்திரிகை. இவர்கள் வெறும் ஊடக வியாபாரிகளே தவிர, இந்த மண்ணுக்கோ மக்களுக்கோ எந்த சொந்தமுமற்றவர்கள் என்பதையே காட்டிக்கொள்கிறார்கள். மக்கள் அதிகம் சாகச் சாகத்தான் நாங்கள் பலம் பெறுவோம் என்று நினைத்து அழித்ததின் எச்ச சொச்ச வக்கிரம்தான் இதுவும்.

இதேபோலத்தான் இராணுவத்திடமிருந்து திரும்பிவந்த தமிழ் பெண்களின் விஷயத்திலும் இந்த ஊடகங்களும் அரசியல்வாதிகளும் மிகக் கீழ்த்தரமாக நடந்துகொண்டார்கள். சுற்றிவளைத்து அவர்கள் இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற தங்கள் ஆசையையே உண்மையாக்க முனைந்து நின்றார்கள். அல்லாமல் எப்படி உணர்ச்சிகர அரசியலில் மீன்பிடிப்பது?

"உண்மையில் தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற வகையில் ஊடகங்களில் வரும் செய்திகள் தம்மை மிகவும் மோசமாகப் பாதித்திருப்பதாகவும், உண்மையில் அப்படியான நிகழ்வுகள் எதுவும் தமக்கு ஏற்படவில்லை என்றும் அந்தப் பெண்கள் தன்னிடம் கூறியதாகவும், அதை தமிழ் மக்களுக்கு கூறும்படி அந்த பெண்கள் கேட்டதாக" கூறிய உளநல மருத்துவர் சிவதாஸ், உண்மைநிலையை மன்றாட்டமாக வெளிப்படுத்தி அந்தப் பெண்களின் கௌரவத்தைக் காப்பதற்கு கடும் முயற்சி செய்ய வேண்டியதாயிற்று.

இந்த ஊடகங்களோ அந்தப் பெண்கள் சீரழிக்கப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்ற தங்கள் ஆசையை நிரூபிப்பதில் விடாப்பிடியான மூர்க்கத்துடன் நின்றதைப் பார்க்க முடிந்தது. என்ன ஒரு வக்கிரத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இந்த ஊடகங்களும் சமூக மேல்தட்டினரும்! அந்தப் பெண்களுக்காக உண்மையைச் சொல்பவர்களெல்லாம் இராணுவத்தினரையும் இலங்கை அரசையும் காப்பாற்ற நினைக்கிற தமிழ்த் துரோகிகள்தான் என்று எழுதுமளவுக்கு குரூரங்களையே விதைத்து குரூரங்களையே அறுவடை செய்து நம் சமூகத்தின் மீது சவாரி செய்து வருகிறார்கள் இவர்கள்!

இயக்கங்களில் இருந்தவர்களுக்குத் தெரியும், பயிற்சிக்கென்று முகாம்களுக்கு வந்துவிட்டால் அவர்கள் பயிற்சியின் கடுமை தாங்காமலோ அல்லது குடும்ப நினைவிலோ வெளியேறி ஓடிவிடாதிருப்பதற்காக எவ்வளவு கட்டுக் காவல்களெல்லாம் போடப்பட்டிருக்குமென்று! இராணுவத்தினரும் நினைத்திருந்தால் அந்தப் பெண்களை வெளியே விடாமல் வைத்திருக்கலாம், அல்லது எங்காவது அனுப்பிவிட்டிருக்கலாமே என்ற எந்தத் தர்க்கரீதியான சிந்தனைகளும் இன்றி உணர்ச்சிகர ஆட்டம் போட ஒரு வாய்ப்பு என்ற அளவிலேயே எல்லாவற்றையும் கொச்சைப்படுத்திக் கூத்தாடுகின்றன ஊடகங்கள்.

- ஆசிரியர்

# ஆட்டோ சாரதிகள் குறித்து 220முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

முச்சக்கரவண்டிச் சாரதிகள் குறித்து 220 முறைப்பாடுகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக யாழ். போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மத்தியகல்லூரியிலுள்ள தம்பர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள முச்சக்கரவண்டிச் சாரதிகள் குறித்து பதிவுசெய்யப்பட்ட 220 முறைப்பாடுகளில், 14 முறைப்பாடுகள் தவறான செயல்களில் ஈடுபடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது, தவறான செயற்பாடுகளை முச்சக்கரவண்டி சாரதிகள் திருத்திக்கொள்ள வேண்டும், பொது மக்களுக்கு, சேவை செய்யவே நீங்கள் இருக்கின்றீர்கள்.

அந்த வகையில், உங்கள் குடும்பங்களின் நலனைக் கருத்திற் கொண்டு, சாரதிகள் மீதான முறைப்பாடுகளையும் குற்றச் செயல்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் மேலும் கூறினார்.

# வழிதவறிய பல்கலை மாணவர் படையினரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கண்டி ஹந்தானை பிரதேசத்தில் கல்விச் சுற்றுலா மேற்கொண்டிருந்தபோது வழிதவறிய 460 பல்கலைக்கழக மாணவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டாக மேற்கொண்ட தேடுதலின்போது நள்ளிரவு வேளையில் மாணவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர, பேராதனை மற்றும் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் நேற்றுமுன்தினம் பிற்பகல் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு ஹந்தானைக்கு சென்றிருந்தபோது வழிதவறியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதேசத்தில் நிலவும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக தாம் உள்ளிட்ட குழுவினர் அசௌகரியத்திற்கு உள்ளானதாக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர் ஒருவர் கூறினார்.

இந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட மாணவர்களில் சிலர் உடல் நலக் குறைவு காரணமாக கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், எனினும் குறித்த மாணவர்களின் உடல் நிலைகுறித்து கவலை கொள்ளத் தேவையில்லை என வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் டபிள்யூ.ஜி.ஏ.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# கல்வி நிறுவனங்களில் 'திருத்தங்கள் தினம்'

(கொழும்பு)

பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் பிரிவேணாக்களில் சுற்றாடல் சுத்தம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு எதிர்வரும் 30ஆம் திகதி மேற்கொள்ளப்பட வேண்டிய சிரமதானப் பணிகளுக்கு "திருத்தங்கள் தினம்" என கல்வியமைச்சினால் பெயரிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ஜயரட்ண நாட்டிலுள்ள அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள் மற்றும் மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

டிசம்பர் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு பெற்று அரச மற்றும் தனியார் பாடசாலைகள் மற்றும் கல்விக் கல்லூரிகளில் விசேட வேலைத் திட்டம் மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த சில நாட்களில் பல்வேறு பிரதேசங்களில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நிலவிய விரும்பத்தகாத நிலைமை மாணவர்களிடையே நெருக்கடியை உருவாக்கக் கூடியது. சுகாதார அதிகாரிகள் எதிர்பார்ப்புக்கு அமைய, சுகாதாரம் தொடர்பாக பாடசாலை அறிவுரைகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்களின் ஊடாக மாணவர்களுக்கு அறிவுறுத்தவும் தேவையான அறிவுரைகளை உரிய முறையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், பாடசாலை சுற்றாடலைச் சுத்தமாகப் பேணிவர போதிய அக்கறை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் போராளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து முறையிடலாம்

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகளுக்கு, அவ் இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு பெறாது சமூகத்தில் இருப்பவர்களினால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து முறையிடுமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு ஆணையாளர் உப அலுவலகங்களில் இது குறித்து முறைப்பாடு செய்யுமாறு அவ் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு, ஏனைய முன்னாள் போராளிகள் தொந்தரவு கொடுப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்விடயம் குறித்து புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் தர்சன கெட்டி ஆராச்சி தெரிவிக்கையில்,

முன்னாள் போராளிகள் பிரச்சினைகளை எதிர்கொள்வார்களாயின் புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகங்களில் முறையிடுமாறு தெரிவித்தார்.

# முல்லைமாவட்டத்தில் நவம்பர்வரை 38,960 குடும்பங்கள் மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து மெனிக்பாம் நலன்புரி முகாம் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்த மக்களில் கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதி வரை 38ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த 1 இலட்சத்து 24 ஆயிரத்து 424 பேர் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி பிரதேச செயலக பிரிவு ரீதியாக துணுக்காயில் 3 ஆயிரத்து 554 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 78 பேரும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 649 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 400 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 5 ஆயிரத்து 414 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 564 பேரும், மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 12ஆயிரத்து 222 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 725 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 585 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 868 பேரும்,

வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 536 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 789 பேரும் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(04)

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 13






**வே. அர்ச்சுணன்**

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் அனுமதியுடன் படைத்துறையினருடன் தொடர்புகளை ஏற்படுத்தி செய்தி சேகரிக்கும் அனுமதி யாழ்ப்பாணத்தில் இயங்கிய உதயன், வலம்புரி, தினக்குரல் போன்ற பத்திரிகைகளுக்கும் சுயாதீனமாக இயங்கிய ஊடகவியலாளர்களில் தயாபரன், நவம், நிமலராஜன், தவச்செல்வன் ஆகியோருக்கே இந்த அனுமதி புலிகளால் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ வழங்கப்பட்டிருந்தது. புலிகளின் ஆசீர்வாதத்துடன் தாங்கள் படைத்துறையினருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதாகக் கூறி சிலர் படைத்துறையினருடன் தனிப்பட்ட ரீதியான உறவுகளை வளர்க்க முற்பட்டதுடன் படைத்துறையினருடன் மேலதிகமான நெருக்கத்தை ஏற்படுத்தி வன்னித் தகவல்களையும் வழங்க முற்படுகின்றனரா என்ற சந்தேகம் புலிகள் மட்டத்தில் அடிக்கடி மேலெழுவது வழமையான தொன்றாக இருந்தது.

இந்த நிலையில் படைத்தரப்புடன் தொடர்புகளைப் பேணுவதை கூடுதலான ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களும் தவிர்த்திருந்தபோதிலும் பலாலியில் இயங்கிய படைத்துறை செய்தித் தொடர்பாளரை தொடர்பு கொள்ளவேண்டிய தேவை நிமலராஜன், தவச்செல்வன் போன்றவர்களுக்கு அன்றைய நாட்களில் தேவையான ஒன்றாக இருந்தது. ஏனெனில் இவர்கள் தங்களது ஊடகங்களில் தங்களது குரல்வழியான தகவல்களை செய்தியாக வெளியிடுகின்ற காரணத்தால் புலிகளுக்கு சார்பான செய்திகளை கூடுதலாக வெளியிட்டவாறு தாங்கள் செய்திகளை நியூட்டலாக வெளியிடுகிறோம் என்று காட்டுவதற்காக, படைத்துறையினருடன் தொடர்பு கொண்டு அவர்கள் வழங்கும் தகவல்களையும் இறுதியாக தங்களது ஊடகங்களில் வெளியிட்டு வந்தனர்.

ஆனால் இவர்களது ஊடகங்கள் வெளியிடும் செய்திகளையே மக்கள் நம்பினார்களே தவிர படைத்துறையினரது செய்திகளை இவர்கள் நம்பமுடியாதவாறு திரித்துக் கூறிவந்ததால் மக்கள் இந்த செய்திகளை நம்ப மறுத்துவந்தனர். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இயங்கிய முன்னணிப் பத்திரிகை என்று தாங்களே மார்தட்டிக் கொள்கின்ற பத்திரிகையின் வித்தியாசமான பிரதம ஆசிரியர் பிழையான தகவல்களை செய்தியாக வெளியிட்டுவிட்டு இறுதியாக படைத்துறையினருடன் ஏற்படுத்திய தொடர்புகளையும் செய்தியாக மக்கள் நம்பமுடியாத விதத்தில் வெளியிட்டு வந்தார். இவர்கள் புலிகளுடன் இணைந்து எத்தகைய பணிகளை ஆற்றிய போதிலும் புலிகள் அனைவரையுமே சந்தேகக் கண்ணோட்டத்தில் தான் கவனித்து வந்தார்கள்.

புலிகளது ஒரு பிரிவினர் கையாளுகின்ற விடயம் இன்னொரு பிரிவினருக்கு தெரிவதில்லை. இதன் காரணமாக படைத்தரப்புடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகவியலாளர்கள் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற பொழுது இன்னொரு பிரிவினர் குறித்த ஊடகவியலாளர்கள் மீது சந்தேகம் கொண்டு அவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளையும் எடுத்துவந்தனர். இத்தகவல்களை குறித்த ஊடகவியலாளர்களும் வெளியில் விடுவதில்லை. புலிகளும் தாங்கள் குறித்த ஊடகவியலாளர்களை அச்சுறுத்துகின்ற விடயத்தை வெளியில் சொல்வதில்லை..

இதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. புலிகளைப் பொறுத்த வரையில் ஊடகவியலாளர்களை தாங்கள் அச்சுறுத்தினால் அவ் விடயம் பெரியளவில் எடுபட்டால் தமக்கு அதனால் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் இருந்தது. இவ்வாறு புலிகளால் அச்சுறுத்தப்படும் ஊடகவியலாளர்கள் தமக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் வெளியில் கூறினால் தமது கௌரவம் பாதிக்கப்படும் என அன்றைய நாட்களில் அஞ்சியதுண்டு. இதற்குக் காரணம் புலிகள் ஒரு ஊடகவியலாளரை தமது எதிர்ப்பாளர் என்று முத்திரை குத்திவிட்டால் குறித்த ஊடகவியலாளர் யாழ். பல்கலைக்கழகமோ அல்லது வேறு இடங்களிற்கோ சென்று செய்திகளை சேகரிக்க முடியாத நிலைமையே காணப்பட்டது. இதனால் புலிகள் விடும் அச்சுறுத்தல்களை மூடிமறைத்து வந்த ஊடகவியலாளர்கள், படையினர் சிறியளவிலான ஒரு அச்சுறுத்தலை விடுத்தால் கூட அதை பெரிய அச்சுறுத்தல் போன்று அன்றைய நாட்களில் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்ததை எவருமே மறுக்க முடியாது.

> **புலிகளால் அச்சுறுத்தப்படும் ஊடகவியலாளர்கள் தமக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் வெளியில் கூறினால் தமது கௌரவம் பாதிக்கப்படும் என அன்றைய நாட்களில் அஞ்சியதுண்டு. இதற்குக் காரணம் புலிகள் ஒரு ஊடகவியலாளரை தமது எதிர்ப்பாளர் என்று முத்திரை குத்திவிட்டால் குறித்த ஊடகவியலாளர் யாழ் பல்கலைக்கழகமோ அல்லது வேறு இடங்களிற்கோ சென்று செய்திகளை சேகரிக்க முடியாத நிலைமையே காணப்பட்டது. இதனால் புலிகள் விடும் அச்சுறுத்தல்களை மூடிமறைத்து வந்த ஊடகவியலாளர்கள் படையினர் சிறியளவிலான ஒரு அச்சுறுத்தலை விடுத்தால் கூட அதை பெரிய அச்சுறுத்தல் போன்று அன்றைய நாட்களில் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்ததை எவருமே மறுக்கமுடியாது.**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த வித்தியாசமான பத்திரிகைக் காரியாலயம் மீது இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்துகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் படைத்தரப்பின் மீதும் ஈ.பி.டி.பி யினர் மீதும் குறித்த ஊடகங்கள் வேண்டுமென்றே பழியைப் போடுவதில் பின்னிற்பதில்லை.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் ஊடகவிய லாளர்கள் தாக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் படையினர் மீது வழமையான குற்றச்சாட்டுக்கள் எழுவது வழமையானதாகும். இவ்வாறு யாழ்ப்பாணத்தின் முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியாகவும் பின்னர் இலங்கை படைத்தளபதியாகவும் இருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கீழ் செயற்பட்ட படைத்தளபதி ஒருவர் பலாலிப் படைத்தளத்தில் தவச்செல்வன் என்ற ஊடகவியலாளரை எச்சரித்த சம்பவத்தைப் பெரிதுபடுத்தி அதை ஊடகங்களில் செய்திகளாக வெளியிட வைத்து பிரச்சாரம் தேடிக்கொண்டனர். இந்தப் பிரச்சாரத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்த விரும்பிய புலிகள், வன்னியில் இருந்தவாறு தவச்செல்வனுடன் தொடர்பை ஏற்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி ஊடாக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு வேண்டப்பட்டார்.

இதனை அடுத்து இராணுவத் தளபதிக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவரிற்கும் எதிராக கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் தமிழ்ச்செல்வனாலும் விநாயகமூர்த்தி எம்.பி யாலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் இவ்வழக்கு விவகாரம் புலிகள் நினைத்தது போன்று அல்லது குறித்த ஊடகவியலாளர் நினைத்தது போன்று நீண்ட நாட்களுக்கு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவில்லை. இவ்வழக்குத் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகிய வழக்காளிகளும் எதிராளிகளும் தமக்குள் உடன்பாடு ஒன்றை எட்டியவாறு இவ் வழக்கை சமரசமாக தீர்த்துக் கொண்டமையால் இவ் வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததுடன் இவ்வழக்கு விவகாரம் முடிவுக்கு வந்தது.


இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தியை தொலைபேசியில் தொடர்பு கொண்ட தமிழ்ச்செல்வன் ஏன் வழக்கை முடிவுக்குக் கொண்டு வந்தீர்கள் வழக்கை நீடித்திருக்கலாமே என ஆதங்கப்பட்டதும், விநாயகமூர்த்தி தொடர்பில் ஒரு கணிப்பை புலிகள் மேற்கொண்டதும் வன்னியிலிருந்த ஊடகவியலாளர்கள் யாவரும் அறிந்த ஒரு உண்மையாகும். இவ்வாறு புலிகள் தங்களது தேவைக்காக ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும், பயன்படுத்த முற்பட்ட போதிலும் தமிழ் ஊடகங்கள் புலிகளை உச்சாரக் கொப்பில் ஏற்றியவாறு கீழே தள்ளிவிடுதற்கு தயாராகவே இருந்தன. யாழ்ப்பாணத்தில் யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் எங்காவது ஓர் இடத்தில் புலிகள் ஒரு சிறிய தாக்குதலை நடத்திவிட்டால் அந்த தாக்குதலில் படையினர் கொல்லப்படுகிறார்களோ இல்லையோ பத்திற்கும் மேற்பட்ட படையினர் பலி என்ற செய்தி மறுநாள் ஊடகங்களை அலங்கரித்து வந்தது.

இதில் ஏற்கனவே யாழ்மாநகர சபையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கும் ஊடகவியலாளர் தயாபரனிற்கும் இருந்த தொடர்புகள் குறித்துப் பார்த்த நாம், கடற்புலிகளின் தளபதி சூசைக்கும் ஊடக வியலாளர் தவச்செல்வனிற்கும் இருந்த தொடர்புகள் குறித்தும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கத்திற்கும் வித்தியாசமான யாழ்ப்பாண பத்திரிகையின் பிரதமஆசிரியரிற்கும் இடையில் எத்தகைய நெருக்கங்கள் இருந்தன? அந்த நெருக்கங்கள் எவ்வாறு ஏற்பட்டன? இத்தகைய நெருக்கமான உறவுகளை பேணியவாறு புலிகளை எவ்வாறு இவர்கள் அழிவிற்குக் கொண்டுசென்றார்கள்? என்பது தொடர்பில் மேலும் பல விடயங்கள் சொல்லப்பட வேண்டிஉள்ளன. அவற்றை முழுமையாக பார்ப்பதே பொருத்தமானதாக இருக்கும்.ஏனெனில் புலிகளை வைத்துக்கொண்டு இவர்கள் மக்களை ஏமாற்றியவாறு செய்திகளை வெளியிடும் பணியையும் புலிகளையும் ஏமாற்றி நடந்து கொண்ட விதங்களும் மக்கள் அறியாத மர்மமான விடயங்களாகும். அந்த மர்ம முடிச்சுக்களை அவிழ்க்கும் பொழுது அந்த மர்ம முடிச்சில் அப்படி என்ன இருந்தது என்பதை அறிய உங்களிற்கும் ஆவலாக இருக்குமல்லவா? தொடர்ந்து பார்ப்போம்.

**(தொடரும்)**

# அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் தண்டனை வழங்க அவசியம் ஏற்படாது

## கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு



(கொழும்பு)

அதிபர்களும், ஆசிரியர்களும், பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகிறார்கள் என்று பிள்ளைகள் விளங்கிக் கொண்டால் எந்தவொரு அதிபரோ அல்லது ஆசிரியரோ பிள்ளைகளுக்குத்தண்டனை வழங்கும் அவசியம் ஏற்பட மாட்டாது என்றும், அவ்வாறு அர்ப்பணிப்புடன் வேலை செய்யும் ஆசிரியர்களை உருவாக்கிக் கொள்வதற்கு சுய ஒழுக்க நெறி முறைமை இன்றியமையாதது எனவும் கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் ஒழுக்கம், நடத்தைகள் சம்பந்தமாக ஒழுக்க நெறி முறைமை மற்றும் பொது சட்டத் தொகுப்பு உள்ளடக்கிய சுற்றறிக்கை. தேசிய பாடசாலை அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிமுகப்படுத்தும் நிகழ்வு அண்மையில் கல்வி அமைச்சில் நடைபெற்றவேளை அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பிள்ளைகளை நேசிக்கும், பிள்ளைகளுக்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகத்தை பாடசாலைகளில் அமைக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு கௌரவம் ஏற்படும் வண்ணம் செயற்படுவதற்குத் தேவையான ஒழுக்க நெறி முறைமையை உருவாக்குவது நல்லது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

சமூக முறைமையில் செயற்படு பகுதியினராகவுள்ள ஆசிரியர் தனது கடமைகள் மற்றும் தொழிலின் தொழில்மயத் தன்மையை அடையாளம் காணவும் வழி காட்டவும் ஆசிரியர் ஒருவரிடம் இருக்க வேண்டிய சுயவழிகாட்டல் மற்றும் சுய ஒழுககம் என்பவற்றின் முக்கியத்துவத்தை அடையாளம் காணவும் பல்வேறு கால கட்டத்தில் காட்டிய உற்சாகத்தின் மூலம் பயன் பெற்று சுய ஒழுக்க நெறி முறைமைக்கு வழிகாட்டுவதற்காக இந்த ஒழுக்க நெறி முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ஒவ்வொரு ஆசிரியரும் கடைப்பிடித்து எதிர்பார்க்கப்படும் தொழில தொடர்பான சட்டத் தொகுதியொன்று ஒழுக்கநெறி முறைமை தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய தொழில் வாண்மை தொடர்பாக தனியான நிறுவனம் உருவாக்கப்படும் வரை இந்த ஒழுக்க நெறி முறைமை மற்றும் சட்டத் தொகுப்பு ஆசிரியர்களின் கணிப்பீட்டுக்கும் சன்மானத்துக்கும் பாத்திரமான கருவியாக, பாடசாலை முறைமையில் தரத்தினை வளர்த்தெடுக்கும் கருவியாகப் பயனபடுத்த முடியும். ஏற்றுக் கொள்ளப்பட்ட, ஒழுக்க நெறி மற்றும் சட்டத் தொகுப்பின் ஊடாக ஆசிரிய தொழிலின் மேன்மையை பாதுகாத்தல் அந்த சட்டதிட்டங்களை சிந்தனை மற்றும் செயல்களால் மீறுவதற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அடிப்படையைக் கட்டியெழுப்புதலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கைக்கான கடனை நிறுத்தியுள்ள சீனா

(கொழும்பு)

நீர் மின்சாரத் திட்டத்துக்காக இலங்கைக்கு வழங்கவிருந்த 8.9 பில்லியன் ரூபா கடனை சீனா நிறுத்தி வைத்துள்ளது.

சீனாவின் காப்புறுதி நிறுவனத்துக்கு அரசாங்கம் காப்புறுதிக் கட்டணமாக செலுத்தவுள்ள 627 மில்லியன் ரூபாய்கள் செலுத்தப்படும்வரை இந்தக் கடனை சீன அரசாங்கம் நிறுத்தி வைத் துள்ளது.

சீனாவின், தேசிய மின்சாரத்துறை உபகரணக் கூட்டுத்தாபனம், அங்குள்ள வங்கி ஒன்றின் ஊடாக, களனி கங்கை நீர்மின்சார திட்டத்துக்காக 69,723,605,35 டொலர்களை இலங்கைக்கு வழங்க உறுதியளித்தது.

எனினும் இதனை வழங்குவதன் முன்னர் அரசாங்கம், குறித்த தொகையில் 7 வீதமான 627 மில்லியன் ரூபாய்களை காப்புறுதிக் கட்டணமாக சீன காப்புறுதி நிறுவனத்துக்கு செலுத்த வேண்டும் என்றும் கோரியது.

இந்தநிலையில் குறித்த காப்புறுதி தொகை செலுத்தப்பட்டால் மாத்திரமே கடன்தொகையை விடுவிக்க முடியும் என்று சீன அரசாங்கம் இலங்கைக்கு அறிவித்துள்ளது.

## இலங்கைக்கு வருகிறார் இந்திய இராணுவத் தளபதி

இந்திய இராணுவத் தளபதி தலைமையிலான சிரேஷ்ட இந்திய இராணுவ அதிகாரிகள் அடங்கிய தூதுக்குழு நாளை புதன்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த தூதுக்குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு படைகளின் பிரதானி மற்றும் முப்படைகளின் தளபதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங் வவுனியாவிலுள்ள படைத்தலைமையகத்திற்கும் முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு நிலையம் அமைந்துள்ள பூந்தோட்டத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார். அதனைத் தொடர்ந்து அநுராதபுரத்திலுள்ள புராதன சின்னங்களையும் பார்வையிடவுள்ளார்.

தியத்தலாவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறுகின்ற படையினரின் அணிவகுப்பு மரியாதை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அந்த வைபவத்திலும் அவர் பிரதம அதிதியாகக் கலந்துக்கொள்வார்.

இதில் 18 பெண்கள் உட்பட 157 அதிகாரிகள் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறவுள்ளனர். பெண்களில் மாலைதீவு நாட்டைச் சேர்ந்த இருவரும் அடங்குகின்றனர்.

இந்த 157 அதிகாரிகளுக்கும் இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங்கே பதக்கங்களை அணிவிப்பார். 23 ஆம் திகதி கண்டி தலதாமாளிகைக்கு விஜயம் செய்யும் இராணுவ அதிகாரிகளின் பிரதானி தலைமையிலான குழுவினர் தங்களுடைய விஜயத்தை முடித்துக்கொண்டு அன்றைய தினமே நாடு திரும்புவர் என்றும் இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## பெற்றோல் விலை அதிகரிப்பு தொழிற் சங்கம் குற்றச்சாட்டு

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை குறைந்துள்ள நிலையிலேயே இலங்கையில் பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கம் சுமத்தியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வருமானம் பாரியளவில் அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு பெற்றோலின் விலையை அதிகரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை 110 டொலர்களால் குறைந்துள்ள நிலையில், இலங்கையில் அதன் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமை அசாதாரண நிலையாகும் என்று தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

## வட, கிழக்கில் 4 ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்பதற்கு நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மீள் குடியேறும் மக்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மேலும் உதவ முன்வந்துள்ளது. இதற்கமைய 4 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்திற்கு நிதியை வழங்க முன்வந்துள்ளது.

இதுதொடர்பான ஒப்பந்தம் அரசாங்கத்துக்கும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுவர் பேனார்ட் சவேஜ், இந்தத் திட்டம் 2006 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் நான்காவது பாரிய வீடமைப்புத் திட்டம் என்று தெரிவித்துள்ளார்.

இந்த உத்தேச திட்டம் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் நிர்மாணப் பணிகளுக்காக 190 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. இந்த நிதி சுவிட்சர்லாந்து அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் அவுஸ்ரேலிய எய்ட் அமைப்புக்களிடமிருந்தும் பெறப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ரிஷானாவின் விடுதலை தொடர்பில் சந்தேகம் கொள்ளும் சட்டமா அதிபர்

(கொழும்பு)

குழந்தை ஒன்று உயிரிழந்தமை தொடர்பாக சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த ரிஷானா நபீக், இறந்த குழந்தையின் குடும்பத்தினரின் தீர்மானத்திற்கு அமைய, தூக்கிலிடப்பட்டு கொலை செய்யப்படலாம் என சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்து திரும்பிய சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ரிஷானாவை விடுதலை செய்யும முனைப்புகளை மேற்கொள்ளும் நோக்கில், அங்கு சென்ற சட்டமா அதிபர், அந்த நாட்டின் சட்டமா அதிபர், ஆளுநர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இந்த விஜயத்தின் போது, இறந்த குழந்தையின் பெற்றோரை சந்தித்து, அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்ததாகவும் இந்த விசயத்தில் வெளியார் தலையிடுவதை அவர்கள் விரும்பவில்லை எனவும் சட்டமா அதிபர் கூறியுள்ளார்.

தனது விஜயத்தின் போது, ரிஷானா நபிக்கை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ள சட்டமா அதிபர், மனித உரிமை அமைப்புகளுக்குத் தெரியாமல் அவர் தூக்கிலிடப்படும் சந்தர்ப்பம் இருப்பதாக தான் உணர்ந்து கொண்டதாகவும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் அடுத்த சில தினங்கள் மிகவும் தீர்மானகரமானது என கூறியுள்ள சட்டமா அதிபர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு அமைய சவுதி மன்னர் இந்தப் பிரச்சினையில் தனிப்பட்ட ரீதியில் தலையிட்ட போதிலும், உயிரிழந்த குழந்தையின் பெற்றோர் தமது தீர்மானத்தில் உறுதியாக இருப்பதால், மரண தண்டனை நிறைவேற்றப்படுவது நிச்சயமாக இருக்கும் என தான் உணர்ந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## முஸ்லிம் மயமாகும் சட்டக்கல்லூரி ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)


சட்டக் கல்லூரியை முஸ்லிம் மயமாக்க முயற்சிக்கப்பட்டு வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் துணை நிறுவனமான தேசிய புத்திஜீவிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சட்டக் கல்லூரி அனுமதிக்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் மூலம் இந்த முஸ்லிம் மயமாக்கல் அம்பலமாகியுள்ளது. இம்முறை பரீட்சை வினாத்தாள் மதிப்பீடுகளில் முறைகேடு ஏற்பட்டுள்ளதா என்பது விசாரணை செய்யப்பட வேண்டும். முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் மீண்டும் பரீட்சை நடத்தப்பட வேண்டும் ஆண்டு தோறும நடைபெறும் போட்டிப் பரீட்சைக்காக 11000 பேர் விண்ணப்பித்த போதிலும், 250 முதல் 300 வரையிலான மாணவர்களே சட்டக் கல்லூரியில் இணைத்துக் கொளளப்படுகின்றனர்.

சிங்கள மொழி மூலம் 80 வீதமானவர்களும் தமிழ் மொழி மூலம் 5 வீதமானவர்களும், ஆங்கில மொழி மூலம் 12 முதல் 15 வீதம் வரையிலும் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இம்முறைப் பரீட்சையில் 309 பேர் சட்டக் கல்லூரிக்காக சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இதில் 191 சிங்கள மாணவர்களும், 40 தமிழ் மாணவர்களும், 78 முஸ்லிம் மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். தமிழ், முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை சடுதியான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

அதிகூடிய புள்ளிகளைப் பெறறுக் கொண்ட 50 மாணவர்களில் 28 பேர் முஸ்லிம்களாகும். முதல் முறையாக பிரதான இடங்களைப் பெற்றுக்கொண்ட மூன்று மாணவர்களும் முஸ்லிம்கள் என தேசிய புத்திஜீவிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற அமரர் வீரசிங்கத்தின் நினைவுதின நிகழ்வில் உடுப்பிட்டி பல நோ. கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக சிறந்த சேவை யாற்றிய சின்னத்தம்பி கணபதிப்பிள்ளைக்கு வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவ நாதன் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிப்பதனைக் காணலாம். (18)

# மாடுவளர்ப்பை ஊக்குவிக்க பயனாளிகளுக்கு உதவிகள்

(வடமராட்சி)

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் மாடு வளர்ப்போர்களை ஊக்குவித்து பசும்பாலை விருத்தி செய்யவே திவிநெகும மற்றும் வாழ்வாதா ரத் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக பருத் தித்துறை கால்நடை வளர்ப் போர் திணைக்கள அதிகாரி டாக்டர் யூலியானா தெரிவித் துள்ளார்.

பருத்தித்துறை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து உள்ளூர் நல்லின பசுமாட்டை சினைப்படுத்தல் தொடக்கம் உரிய முறையில் வளர்த்து பசுப் பாலைச் சந்தைப்படுத்தல் வரை யான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

பசுமாடுகளுக்கு திருநெல் வேலி செயற்கைமுறை சினைப் படுத்தலிலும் பார்க்க பேரா தனை குண்டகசாலையிலிருந்து பெறப்படும் செயற்கை முறை சினைப்படுத்தலில் நல்லின மாட்டுக்கன்றுகள் பெறப்பட்டு வருகின்றது.

இந்த நல்லின மாடுகளை தகுந்த முறையில் பராமரிப்ப தோடு தகுந்த மருத்துவ சிகிச் சைகளைச் செய்து வருவதுடன், உயர்ரக புல்லினங்களை மாடு களின் உணவுக்காக வளர்ப்பதற் கும் வழங்கி வருகின்றது.

திவிநெகும திட்டத்தின் கீழ் புல் வேளாண்மைத் தினத்தை முன்னிட்டு மாட்டுப்பண்ணையாளர் களுக்கு பல விதிமுறைக்கமை வாக வல்வெட்டித்துறை, பொலி கண்டி, திக்கம் போன்ற பகுதி பயனாளிகளுக்கு பசும்பாலின் உற்பத்தியை விருத்தி செய்யும் நோக்கில் இருவருக்கு இரண்டு பசுமாடு என்ற அடிப்படையில் நான்கு பசு மாடுகள் இதுவரை யில் வழங்கப்பட்டுள்ளது.

இதில் வல்லிபுர குறிச்சிப் பகுதியைச் சேர்ந்த செல்வராசா தர்சினி, பொலிகண்டிப் பகுதி யைச் சேர்ந்த ந.ரவி என்பவர் களுக்கே இவ்வாறு வழங்கப் பட்டுள்ளது.

மேலும் இருவருக்கு ஒரு மாடு வீதம் வழங்குவதற்கு தெரிவாகியுள்ளனர்.

இத்திட்டமானது மாட்டின் பெறுமதியிலிருந்து 50 சதவீத அரச மானிய அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றது எனவும் இம்மாடு வளர்ப் போகளுக்கு மாட்டுத் தொழுவங் களும் உணவுக்காக பட்டடை களும் 50 சதவீத அரச மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள் ளது.

மேலும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் திவி நெகும திட்டத்தின் கீழ் சுமார் 100 பயனாளிகளுக்கு அச்சு வேலிப் பண்ணையிலிருந்து பெறப்பட்ட 1 மாதகால கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்ட துடன், கலப்பினமான கோழிக் குஞ்சுகளும் பருத்தித்துறை கால்நடை வளர்ப்போர் கூட்டு றவுச் சங்கத்தின் ஊடாக பருத் தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்து இப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

# குண்டும் குழியுமாகக் காணப்படும் புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு - புதுக்குடி யிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் சந்தி வரையான வீதி பல காலமாக புனரமைக்கப்படாது உள்ளதால் இவ்வீதியூடாக பயணத்தை மேற்கொள்வோர் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கின்ற னர்.

குறிப்பாக 20 கிலோ மீற்றர் வரையான மேற்படி வீதி புனர மைக்கப்படாமல் குண்டும் குழியு மாகச் சேதமடைந்து காணப் படுவதால் மழை காலங்களில் இவ்வீதியூடான போக்குவரத்து பெரும் ஸ்தம்பிதம் அடைவதாக சுட்டிக்காட்டப்படுகிறத.

குறிப்பாக இங்கு பிரதான வீதியை விட கிராம வீதிகள் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கும் மக்கள் இவ்வீதிகளைப் புனர மைக்க உரியவர்கள் நட வடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# அறிவுறுத்தல் கூட்டம்

நடைபெற்று வரும் க.பொ. த. சாதாரணதர முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி யில் ஈடுபடவுள்ள பிரதம பரீட் சகர்களிற்கான அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் பரீட்சைகள ஆணையாளர் நாயகம் தலை மையில் கொழும்பு றோயல் கல்லூரியின் கேட்போர் கூடத் தில் இந்தமாதம் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம பரீட்சகர்களாக நியமனம் பெற்ற ஆசிரியர் களை மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக் கப்பட்டுள்ளனர். (06)

# அழகுக்கலைப் பயிற்சி

(வேலணை)

வேலணை கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தினூடாக நடத்தப்படவிருக்கும் தையல் மற்றும் அழகுக்கலை பயிற்சி நெறிகள் எதிர்வரும் தை மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தால், பயிற்சி பெறவிரும்பு வோர் சுயவிபரத்துடன் தலை வர் அல்லது செயலாளரிடம் பதிவு செய்துகொள்ளுமாறு மாதர் சங்க நிர்வாகம் அறி வித்துள்ளது.

இதேவேளை 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்கள் பதிவு செய்யுமிடத்து சனி, ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாட்களில் நாளாந்தம் 100 ரூபாய் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (138)

# மீள்குடியேற்ற கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களுக்காக யு.என்.ஏச்.சி.ஆர். நிறுவனத்தால் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்ப னவை பெறாத மக்களுக்கான கொடுப்பனவு இன்று செவ் வாய்க்கிழமை வழங்கப்பட வுள்ளது.

இதன்படி குறித்த பிரதேச செயலர் பிரிவிலுள்ள குமிழ முனை மேற்கு, கிழக்கு, குமிழ முனை மத்தி, மதவளசிங்கன் குளம், நீராவிப்பிட்டி மேற்கு, மாமுனை, தண்ணீரூற்று கிழக்கு குமாரபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்படி கொடுப்பனவை பெறாத மக்களுக்கு இன்றைய தினம் காலை 9.00 மணி முதல் 4.30 மணிவரை கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவைப் பெற வரும் மக்கள் குடும்ப அட்டை, அடையாள அட்டை, மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகைதந்து கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (04)



பருத்தித்துறை நகர சபையால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சனசமூக நிலையங்களுக்கிடையே நூலக தரத்தினை அறியும் வகையில் நடாத்தப்பட்ட போட்டியில் முத லிடத்தைப் பெற்ற தும்பளை மேற்கு சனசமூக நிலையத்திற்கான சான்றிதழை நிலையத் தலைவருக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் வழங்குவதைக் காணலாம். (62)

# முரசின் இன்றைய பலன்

(18.12.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 03 ஆம் திகதி. நட்சத்திரம் அவிட்டம். திதி ஷஷ்டி பின்னிரவு 4.47 வரை. சித்தம் பிற்பகல் 1.33 வரை. இராகுகாலம் 3.22 - 4.53 வரை. சுபநேரம் 10.53 - 12.23 வரை. விநாயகர் ஷஷ்டி விரதம். நாளை உதயத்துக்கு முன் திருவெம்பாவை ஆரம்பம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தவறான ஆலோசனை குழப்பம் தரும். சுயமான செயல்பாடு வெற்றி தரும். தொழில் வளர புதிய வாய்ப்பு. எதிர்பாராத வகையில் வருமானம். |
| ரிஷபம் | திட்டங்களை செயல்படுத்துவீர்கள். நண்பர், உறவினர் ஆதரவு கிடைக்கும். தொழில் அபிவிருத்திக்கு கூடுதல் மூலதனம். வெளியூரிலிருந்து சுபசெய்தி. |
| மிதுனம் | சுயதிறமைகளை வளர்ப்பீர்கள். கடின பணியும் இனிதாக நிறைவேறும். தொழில் புதிய சாதனை. உபரி பணவருமானம். பாராட்டு, வெகுமதி. சொத்து சேர்க்கை. |
| கடகம் | குறை கேட்கும் நிலைமை. நல்லதை செய்தும் மனவருத்தம். பொறுமை அவசியம். வேலைப்பளு. ஓரளவு பணவரவு. மருத்துவ சிகிச்சை. |
| சிம்மம் | நேர்மையும், கருணைக் குணமும். நண்பர், உறவினரின் தேவைக்கு உதவுவீர்கள். தொழில் அபரிமித வளர்ச்சி. பண வரவில் முன்னேற்றம். |
| கன்னி | இலட்சியத்தில் கவனம். தொழிலில் மூலதனச் சிக்கல். கூடுதல் உழைப்புக்கு நன்மை. உணவுக் கட்டுப்பாடு நல்லது. மேலதிகாரியிடம் பாராட்டு. |
| துலாம் | பெருமைப்படுவீர்கள். உதவுவீர்கள். வேலைச்சுமை குறையும். உபரி வருமானம். குடும்பத்தில் ஒற்றுமை. தேடிய பொருள் வந்து சேரும். |
| விருச்சிகம் | இளமைக்கால நினைவுகள். புதியவர்களின் நட்பு. நம்பிக்கை வளரும். தொழில் முன்னேற்றம். உபரி பணவருமானம். மங்கல நிகழ்ச்சி. |
| தனுசு | இனம் புரியாத குழப்பம் வந்து விலகும். ஆலோசனை பெறுவது நல்லது. தொழிலில் புதிய யுக்தி. எதிர்பார்த்த பணவரவு இல்லை. |
| மகரம் | உண்மை, நேர்மை செயல்கள். சமூகத்தில் வரவேற்பு. எதிர்பாராத உதவி. தொழில் தாமதம் விலகும். தாராள பணவரவு. இல்லறத்துணை அனுசரணை. |
| கும்பம் | பேச்சில் அன்பும் கனிவும். தொழில் வளர்ச்சிக்கு அனுகூலம் கிடைக்கும். கடன் வசூலாகும். பொன், பொருள் சேர்க்கை. புதிய அறிமுகம். பாராட்டு, |
| மீனம் | கூடுதல் வளம் பெற அனுகூலம். உறவினரிடம் நல்மதிப்பு. தொழில் இலக்கு நிறைவேறும். தேவை யான பணவரவு. மங்கல நிகழ்ச்சி திட்டம். |



# இலங்கையின் வெற்றியிலக்கு 393

(ஹோர்பட்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 393 என்ற வெற்றி இலக்கை நோக்கி இலங்கை அணி துடுப்பாடி வருகின்றது.


இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி அவுஸ்ரேலியாவின் ஹோர்ட்டில் நடைபெற்று வருகின்றது.

114 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி அவுஸ்ரேலிய அணி, ரங்கன ஹேரத்தின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கவான் 56, வோனர் 68, கிளார்க்க ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹேரத் 96 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், வெலகெதர 89 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

393 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் கருணரட்ண 30 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சங்கக்கார 18, மஹேல ஜெயவர்த்தன ஐந்து ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். பந்து வீச்சில் வட்சன், ஸ்ராக் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர். எட்டு விக்கெட்டுக்களை கைசவமுள்ள நிலையில் இலங்கை அணி வெற்றி பெற இன்னும் 328 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் இறுதி நாளாகும். அவுஸ்ரேலிய முதல் இனிங்ஸ் 450/5. இலங்கை முதல் இனிங்ஸ் 336.

# வோர்னுக்கு ஆதரவு

மீண்டும் டெஸ்ட் போட்டியில் விளையாட விருப்பம் தெரிவித்திருந்த அவுஸ்ரேலிய சுழல் ஜாம்பவான் ஷேன் வோர்னுக்கு, சகநாட்டைச் சேர்ந்த முன்னாள் வீரர் ஸ்டூவர்ட் மெக்கில் ஆதரவு தெரிவித்துள்ளார். மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் தகுதி வோர்னுக்கு உள்ளது. ஒவ்வொரு போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி வெற்றி பெறுவதையே விரும்புகிறேன். இதற்கு இவரைப் போன்ற திறமையான வீரருக்கு அணியில் இடம் கொடுக்க வேண்டும். இவரது ஆட்டத் திறன் குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் உடற்தகுதியை மட்டும் சோதிக்க வேண்டும். டெஸ்ட் போட்டிக்கு ஏற்றவாறு ஐந்து நாட்களில் தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் பந்துவீசும் தகுதி இவரிடம் உள்ளதா என்பதை கண்டறிய வேண்டும். தனது உடற்தகுதி குறித்து நன்கு அறிந்திருப்பதால் தான், மீண்டும் டெஸ்ட் போட்டியில் விளையாடத் தயார் என்கிறார். சமீபத்திய டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்துவீச்சு திருப்தி அளிக்கவில்லை. நாதன் லியான், ஆடுகளத்தின் தன்மை அறிந்து பந்துவீச கற்றுக்கொள்ள வேண்டும். அனைத்துப் பந்து களையும் வேகமாக வீசக்கூடாது. சிறந்த சுழற்பந்துவீச்சாளர்களை அவுஸ்ரேலிய அணி உருவாக்கும் பட்சத்தில், கிரிக்கெட் அரங்கில் ஆதிக்கம் செலுத்தலாம் எனத் தெரிவித்தார்.



# சச்சின் தீர்மானிக்கட்டும்

எப்போது ஓய்வுபெற வேண்டும் என்பதை சச்சின் டெண்டுல்கரே தீர்மானிக்க முடியும் என மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் சேர் விவியன் ரிச்சட்ஸ் தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக தொடர்ச்சியாக திறமையை வெளிப்படுத்த தவ - றிவரும் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெறவேண்டும் என பலர் கருத்துத் தெரிவித்துள்ள நிலையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 39 வயதான சச்சின் டெண்டுல்கர் இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வு முடிவினை அறிவிப்பாரா சச்சின்?



(நாக்பூர்)

நாக்பூருக்கு சச்சினின் மனைவி அஞ்சலி நேற்று முன்தினம் திடீரென சென்றுள்ளதால், ஓய்வு முடிவை சச்சின் அறிவிக்கக்கூடும் என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக அஞ்சலி கிரிக்கெட் போட்டிகளை மைதானத்திற்கு நேரில் சென்று பார்ப்பது கிடையாது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சச்சின் 50ஆவது சதத்தை அடித்தபோது கூட அதனை நேரில் காண அஞ்சலி செல்லவில்லை. தற்போது அவர் நாக்பூர் சென்றுள்ளதால், சச்சின் ஓய்வு முடிவை அறிவிக்கக்கூடும் என கிரிக்கெட் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இரண்டாவது முறையாகவும் கொரிந்தியன்ஸ் சம்பியன்

(யோகோஹோமா)

சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) கிளப் உலகக் கோப்பை கால்பந்து தொடரில் கொரிந்தியன்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

ஜப்பானில், 9ஆவது பிபா கிளப் உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் கொரிந்தியன்ஸ் (பிரேசில்), செல்சியா (இங்கிலாந்து) அணிகள் மோதின. முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சமநிலை வகித்தது. இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட கொரிந்தியன்ஸ் அணிக்கு 69ஆவது நிமிடத்தில் குயர்ரிரோ கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு செல்சியா வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் கொரிந்தியன்ஸ் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. முன்னதாக 2000ஆம் ஆண்டு பிரேசிலில் நடந்த முதலாவது தொடரில் கொரிந்தியன்ஸ் அணி பெனால்டி ஷூட் அவுட் முறையில் மற்றொரு பிரேசில் கிளப் அணியான வாஸ்கோடா காமா அணியை வீழ்த்தி, கோப்பை வென்றது. இதன்மூலம் இத்தொடரில் அதிக முறை கோப்பை வென்ற அணிகள் வரிசையில் முதலிடத்தை பார்சிலோனா (ஸ்பெயின்) அணியுடன் பகிர்ந்து கொண்டது. பார்சிலோனா அணி 2009, 2011இல் சம்பியன் பட்டம் வென்றது.

# பட்மின்ரன் தொடரில் சீன வீரர்கள் சம்பியன்



(ஷென்ஸ்ஹென்)

சூப்பர் சீரிஸ் இறுதி பட்மின்ரன் ஒற்றையர் பிரிவில், சீன வீரர்கள் சம்பியன் பட்டம் வென்றார்.

சீனாவில் உள்ள ஷென்ஸ்ஹென் நகரில், சூப்பர் சீரிஸ் இறுதி பட்மின்ரன் தொடர் நடந்தது. இதில் சர்வதேச பட்மின்ரன் தரவரிசை முதல்- 8 இடத்தில் உள்ள வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் சீனாவின் சென் லாங், சகவீரர் பெங்கு டுவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய சென் லாங் 21 - 12, 21 - 13 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

பெண்கள் ஒற்றையரில் சீனாவின் ஷிஜியன் வாங், சகநாட்டைச்சேர்ந்த ஜியுருய் லியை சந்தித்தார். இதன் முதல் செட்டை ஜியுருய் லி 21 - 9 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் ஆதிக்கம் செலுத்திய இவர் 15 - 4 என முன்னிலை வகித்திருந்த போது, ஷிஜியன் வாங் காயம் காரணமாக விலகிக் கொள்வதாகத் தெரிவித்தார். இதனால் ஜியுருய் லி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, சம்பியன் பட்டம் வென்றார்.

# 28 வருடங்களின் பின் இந்திய மண்ணில் தொடரை வென்றது இங்கிலாந்து



(நாக்பூர்)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நாக்பூர் டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 28 வருடங்களின் பின்னர் இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றிக் கொண்டுள்ளது. இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று நாக்பூரில் நடைபெற்றது.

இதில் வெற்றியைப் பெற்றுத் தொடரை சமப்படுத்தும் முனைப்பில் இந்திய அணியும், போட்டியை வெற்றி தோல்வியின்றி நிறைவடையச் செய்து, இந்திய மண்ணில் தொடரை வெல்லும் முனைப்புடன் இங்கிலாந்து அணியும் களமிறங்கின.நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, போட்டியை சமப்படுத்தும் வகையிலும், நாளைக் கட்த்தும் வகையிலும் தற்காப்பு ஆட்டத்தை மேற்கொண்டது. இருப்பினும் இந்திய அணியின் பந்து வீச்சாளர்களின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. முதல் நான்கு விக்கெட்டுக்களையும் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் இழந்த இந்திய அணிக்கு தொடரைச் சமப்படுத்தும் கனவுக்கு இங்கிலாந்து அணியால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இந்நிலையில், சரிவிலிருந்து மீளவேண்டிய நிலைக்கு இந்திய அணியும் தள்ளப்பட்டது. இறுதியில் இந்திய அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. நான்கு ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி, முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 94 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து சற்றுத் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ட்ரொட், இயன் பெல் இணை மிகவும் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியதுடன் போட்டி தமது அணிக்குச் சாதகமாக அமையும் வகை யில் மாற்றிக் கொண்டனர். இறுதியில் போட்டி நிறைவுக்கு வந்தவேளை, இங்கிலாந்து அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த பெல், ட்ரொட் 208 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இதில் ட்ரொட் 310 பந்துகளை எதிர்கொண்டு 18 பவுண்டரிகள் அடங்கலாக 143 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் இயன் பெல் 306 பந்துகளை எதிர்கொண்டு 16 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 116 ஓட்டங்களைப்பெற்றார். பந்து வீச்சில் அஸ்வின் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக அண்டர்சன், தொடர் நாயகனாக குக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.இதன் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில், இந்திய மண்ணில் 28 ஆண்டுகளின் பின்னர் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளது.



# யாழ். லீக் அங்கத்துவ அணிகளுக்கிடையிலான கால்பந்து
# கிண்ணம் வென்றது ஞானமுருகன்




(குருநகர்)

யாழ்ப்பாண கால்பந்து லீக்கின் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மயிலங்காடு ஞானமுருகன் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவ அணிகள் பங்குபற்றிய இப்போட்டித் தொடரில் பெருமளவிலான அணிகள் பங்குபற்றின. விலகல் முறையில் இடம்பெற்ற இத்தொடரின் இறுதிப்போட்டிக்கு நாவாந்துறை சென். நீக்கிலஸ் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் அணிகள் தகுதிபெற்றன.

யாழ். மாவட்டத்தில் இரு அணிகளுமே பல சாதனை வெற்றிகளைப் பதிவாக்கியிருந்தமையால் இறுதிப் போட்டி பெரும் பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் இருக்கும் என நம்பப்பட்டது.

மைதானத்தின் நான்கு திசைகளும் இரு அணி இரசிகர்களால் சூழப்பட்ட நிலையில் இரு அணி வீரர்களும் களமிறங்கினர். இரசிகர்களின் எதிர்பார்ப்புப்போல் இரு அணி வீரர்களும்முற்பாதி ஆட்டத்தில் நான், நீ என போட்டி போட்டுக்கொண்டு களத்தில் செயற்பட்டனர். இரு அணிளுமே ஒன்று கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முற்பாதி ஆட்டம் கோல் எதுவும் பெறப்படாது நிறைவடைந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் தமது வியூகத்தை மாற்றியமைத்த ஞானமுருகன் அணி,சிறப்பான பந்துப் பரிமாற்றத்தை மேற்கொண்டது. இதன் பயனாக 56ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் முன்கள வீரர் ஜெகனால் சிறப்பானதொரு கோல் அடிக்கப்பட்டதுடன், அணியும் முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் செயற்பட்ட, சென். நீக்கிலஸ் அணி, கைக்கெட்டியும் வாய்கெட்டாதது போல், தமக்குக் கிடைத்த அரிய இரு வாய்ப்பை அடுத்தடுத்து கோட்டைவிட்டது. இதனிடையே ஆட்டத்தின் 74ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் யஸ்சின் அற்புதமானதொரு கோலைப் போட்டு அணியின் ஸ்திரத் தன்மையை வலுவாக்கினார். இதன் பின்னர் விறுவிறுப்படைந்த ஆட்டம் நீறு பூத்த நெருப்பாக மாறியது. இரசிகர்களின் கரகோசம்,நடுவரின் விசில் சத்ததையும் மீறி ஒலித்தது.போட்டி நிறைவடைய ஒரு நிமிடம் இருக்கும் நிலையில் சென் நீக்கிலஸ் கோல் காப்பாளர், எச்சரிக்கப்பட்டு,பெனால்ட்டி வாய்ப்பு ஞானமுருகன் அணிக்கு வழங்கப்பட்டது. இதனை உரிய முறை யில் பயன்படுத்திய ஞானமுருகன் வீரர் சேகர், அதனை கோலாக்கி தனது அணியின் வெற்றியை உறுதி செய்தார்.இறுதியில் ஞானமுருகன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி ஞானமுருகன் அணி ஆதரவாளர்களுக்குப் பெரு விருந்தாக நிச்சயம் அமைந்திருக்கும்.

இவ்வெற்றியின் மூலம் ஞானமுருகன் அணி இந்த வருடம் மூன்றாவது கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டித் தொடரில் அதிக கோல்களை அடித்த வீரருக்கான விருதை சென். அன்ரனீஸ் அணியைச் சேர்ந்த கஜானன், தொடரின் சிறந்த வீரருக்கான விருதை அதே அணியைச்சேர்ந்த திலீபன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இப்போட்டியின் பிரதம நடுவராக கொலின், பக்க நடுவர்களாக சுரேஸ், ஜொனிஆகியோர் கடமையாற்றினர். இப்போட்டியின் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடக்கு உதவிப்பொதுமுகாமையாளர் கே.டி. சுமணசிறி, சிறப்பு விருந்தினராக லண்டன் தமிழ்பாடசாலைகள்விளையாட்டுச் சங்கத்தைச்சேர்ந்த கெங்காதரன், மற்றும் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட செயலாளர் அன்ரனிப்பிள்ளை, அங்கத்துவஅணிகளின் நிர்வாகிகள்,அணி வீரர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (எஸ்.பி.)

## விளையாட்டுச் செய்திகள்

# யாழ். இந்துவை வென்றது சென். ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான சிநேக பூர்வமான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இரு கல்லூரிகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

யதுசன், செரேபன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய யாழ். இந்துக் கல்லூரி அணி மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 31 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இதில் எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. பந்துவீச்சில் செரோபன் 10 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், யதுசன் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 47 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 15 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுபிசன் 16, டனுசன் 14 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இதேவேளை, யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான சிநேகபூர்வ ஒரு நாள் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# உருவானது கைப்பந்து சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கைப்பந்தாட்டச் சங்கம் வடமாகாணத்திற்கான கைப்பந்தாட்டச் சங்கம் ஒன்றினைத் தெரிவு செய்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப் பொன்ராஜா, செயலாளராக வணபிதா பி.பெருமாள் புவனேந்திரா, பொருளாராக ஷாம் துஷாந்தன், அங்கத்தவர்களாக கிருபானந்தன், நிசாந்தன், விமல்ராஜ், எஸ்.ரூபன், ரி.நாகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

வடமாகாணத்தில் கைப்பந்தாட்டம் விளையாடும் பாடசாலைகளும், கழகங்களும் மிகக் குறைந்தளவிலேயே இருக்கின்றன. இதனால் கைப்பந்தாட்டத்தினை வளர்ச்சி பெறச் செய்வதற்காகவும், வடமாகாண வீரர்கள் கைப்பந்தாட்டத்தில் தேசிய ரீதியில் பங்குபற்றுவதற்காகவும் வடமாகாண கைப்பந்தாட்டச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இதுவரையிலும் 5 பாடசாலைகள் கைப்பந்தாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட கைப்பந்தாட்ட சங்கம் எதிர்வரும், ஜனவரி மாதம் கைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றினை வடமாகாண ரீதியில் நடத்தவுள்ளது.

# தேசிய அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன்

(கொச்சி)

உள்ளூர் போட்டிகளில் திறமையை நிரூபித்து, மீண்டும் தேசிய அணியில் இடம் பிடிப்பேன் என இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் தெரிவித்துள்ளார்.

கால் விரல்களில் அடுத்தடுத்து சத்திரசிகிச்சை செய்து கொண்டதால், நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. வீல்சேரை பயன்படுத்தி ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு செல்ல வேண்டியதாயிற்று. இதனால் எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்தது என நினைத்தேன். இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) மற்றும் கேரள கிரிக்கெட் சங்கம் (கே.சி.ஏ.) உதவியுடன் முன்னேற்றம் கண்டுள்ளேன்.

ஒரு ஆண்டுக்கு மேலாக இந்திய அணியின் சீருடை அணிந்து, போட்டியில் பங்கேற்க முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. உள்ளூர் போட்டிகளில் திறமையை நிரூபித்து மீண்டும் தேசிய அணியில் இடம் பிடிப்பதே இலக்கு எனவும் அவர் தெரிவித்தார்.

# வென்றது போலந்து

(அன்டல்யா)

துருக்கியில் நடந்த நட்பு கால்பந்து போட்டியில் போலந்து அணி அசத்தல் வெற்றி பெற்றது.

போலந்து, மாசிடோனியா அணிகள் மோதிய நட்பு கால்பந்து போட்டி, துருக்கியின் அன்டல்யா நகரில் நடந்தது. போட்டியின் 12, 23ஆவது நிமிடங்களில் போலந்தின் மிலிக், பவ்லோஸ்கி தலா ஒரு கோல் அடித்தனர். தொடர்ந்து ஆர்டுர், சொபோடா ஆகியோர் 63, 79ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினர்.

மாசிடோனியா சார்பில் 87ஆவது நிமிடத்தில் தேஜான் மட்டும் ஆறுதல் கோல் அடித்தார். முடிவில் போலந்து அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# புலிகளின் மாவீரர் நாளும் தமிழர்களின் தற்போதைய நிலையும்

எல்.ரீ.ரீ.ஈயின் போராட்டத்தில் 1982 நவம்பர், 27இல் முதலாவதாக உயிர்நீத்த சங்கர் என்கிற சத்தியநாதனின் மறைவை நினைவுகூரும் வகையில் நிறுவப் பட்டதுதான் இந்த மாவீரர் நாள். அதற்கடுத்து வந்த அடுத்த 20 வருடங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், தங்கள் இயக்கத் தின் நிறுவனரான தலைவர் பிரபாகரனின் கனவை நிறைவேற்று வதற்காக தங்கள் உயிர்களை தியாகம் செய்துள்ளார்கள். அவர்களை விழா எடுத்து உளமார நினைவுகூர்வதற்காக எல்.ரீ.ரீ.ஈ இந்த நாளை பயன்படுத்தி வந்தது. ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர் களின் மரணங்கள் அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்ததோடு, அவர்களின் சொந்தக் கனவுகளையும் கொன்று பங்கு போட்டுக் கொண்டது.

ஆனால் எல்.ரீ.ரீ.ஈ யின் கைகளி னால் தங்கள் உயிர்களை இழந்த ஆயிரக்கணக்கான தமிழர், முஸ்லிம்கள், மற்றும் சிங்களவர்களின் குடும்பத்தினரும் துக்கம் அனுட்டிப்பார் கள். இங்கு யுத்தத்தில் இறந்த படைவீரர்களைப்பற்றி நான் குறிப்பிடவில்லை, ஆனால் பலியான மற்றவர்கள், எல்.ரீ.ரீ.ஈ யின் தற்கொலை குண்டுதாரி தாக்குதல் நடத்தியபோது

- கேணல். ஆர்.ஹரிஹரன் பேட்டிக்கட்டுரையிலிருந்து.



தவறான நேரத்தில், தவறான இடத்தில் இருந்தது, அல்லது தலைவர் பிரபாகரனுக்கு அவர்களைப் பிடிக்காமல் போனது, அல்லது அவர்களின் கருத்துக்களோடு முரண்பட்டது என்பதுதான் அவர்கள் செய்த ஒரே தவறு.

இந்த நேரத்தில் எல்லா இடத்திலும் உள்ள இலங்கையர்கள் அனைவரும், இறந்தவர்களுக்காக மட்டும் துக்கம் அனுட்டிப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் உயிரோடிருப்ப வர்களைப் பற்றியும் ஒரு உள்முக ஆய்வையும் மேற்கொள்ளவேண்டும். சகல சமூகங்களும் தங்கள் அரசியல் நோக்கங்களுக்கு தீர்வு காண்பதற்கு அல்லது தங்கள் உரிமைகளுக்காக போராடுவதற்கு ஒரு கருவி யாக வன்முறைகளை பயன் படுத்தப் போவதில்லை என்கிற உறுதிமொழிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அரசாங்கம் மற்றும் ஆட்சியாளர்கள் இதற்கு உதவி செய்யவேண்டும். இது யதார்த்தமாவதற்கு அரசாங்கத்திடமும் மற்றும் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களிடத்தும் நல்லெண்ண முயற்சி களை மேற்கொள்ள வேண்டிய ஒரு பாரிய பொறுப்பு தங்கியுள்ளது. ஆனால் துரதிருஷ்டவசமாக அனைத்துப் பங்காளர்களாலும் இதற்காக இதுவரை மேற்கொண்ட முயற்சிகள் மிகக் குறைவாகவும் மிகவும் அற்பமாகவுமே உள்ளன. ஒரு நாடு என்கிற தனது கருத்தை நிறைவேற்றுவதாக சபதம் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி ராஜபக்ஷ இதுவரை தனது செயல்களை மக்களுக்கு காண்பிக்கவில்லை.

இந்த ஆண்டு முழுவதும் மோதல் அரசியல்தான் சுவை நிறைந்ததாக இருந்தது.

மறுபக்கத்தில் வசீகரமான வாய்பேச்சுக்களால் தமிழீழப் போர் தொடுப்பது பற்றி பேசிவந்த, தமிழ் புலம் பெயர்ந்தவர்களில் ஒரு பகுதி யினரும் மற்றும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும், இலங்கையின் தமிழ் பகுதிக- ளில் உள்ளவர்களின் யதார்த்த நிலைபற்றி சிறிது அக்கறை கொண்டுள்ளது போலத் தெரிகிறது. போரின் கடுமை யால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றிப் பேசிவரும் அவர்களின் பேச்சு அவர்கள் தங்கள் முன்னுரிமைகளை சற்று திசைமாற்றியுள்ளார்கள் என்று



காட்டுகிறது. அவர்களது எண்ணிக்கையை கருத்தில் கொள்ளும் ஒருவர், போரில் உயிர்பிழைத்துள்ள மற்றும் உயிர்வாழ்வுப் போராட்டத்தில் சிக்கி அவதியுறும் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை கூடிய விரைவில் மறுசீரமைத்துக் கொள்வதற்கு ஏற்ற உதவி களைச் செய்வதற்கு அது பொருத்தமான ஒன்று என்று எண்ணுவார்.

தமிழீழத்துக்கான எல். ரீ.ரீ.ஈ யின் 30 வருடத் தேடல் விளக்குவது, போரில் வெற்றி பெறுவதற்கு வன்முறை வழிகள் மட்டும் போதாது என்பதையே. அதற்கு அரசியல் உத்திகள் அதே போல இராணுவ உத்திகள் என்பன தேவையாக உள்ளன. ஒத்திசைவான அரசியல் வியூகங்கள் இல்லாமல் போனது பிரபாகரனின் மிகப்பெரிய பலவீனம்.

இரண்டாவது முக்கிய அம்சம் ஒரு தலைவர் சூழலின் இயக்கவியலுடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம், அப்போதுதான் அதற்கு ஏற்றவிதத்தில் தனது தந்திரோபாயங்களை மாற்றிக்கொண்டு அவர் செயற்படுவார். வரலாற்றில் இப்படியான ஒரு வெற்றியை அடைந்ததற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்பவர் பீல்ட் மார்ஷல் டிட்டோ. பிரபாகரன் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டு, உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் இருந்த சிறிய ஒரு சிறப்புக்குழுவினர் வழங்கும் ஆலோசனைகளையே சார்ந்திருந்தார். அதனால் செப்டம்பர், 11 அல்கைதா தாக்குதல்களின் பின்னர், அமெரிக்கா உலகளாவிய ரீதியில் கிளர்ச்சிக்கு எதிராக மேற்கொண்ட போரைத் தொடர்ந்து, பயங்கரவாதம் பற்றி மாற்றமடைந்து கொண்டிருந்த உலகத்தின் மனநி லையை அவர் சரி யாகக் கணிப்பிடத் தவறிவிட்டார். அதன் விளைவாக எல்.ரீ.ரீ.ஈ 33 நாடுகளில் தடை செய்யப்பட்டதுடன், மற்றும் போரின்போது அதன் சர்வதேச உதவி வலையமைப்புகளால் திறமையாகச் செயற்பட முடியவில்லை.

இரண்டாவதாக, சமாதான நடவடிக் கைகள் மூலமாக குறித்த இலட்சியத்தை எட்டுவதற்கான வாய்ப்புகள் கிளர்ச்சிப் போராட்டத்தின் மத்தியில் வரலாம், ஒட்டு மொத்த இலட்சியத்தை அடைவதற்காக இவைகளை சரியான வகையில் இனங்கண்டு தகுந்தபடி பயன்படுத்திக் கொள்ளவேண்டும். 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான நடவடிக்கை, தமிழீழம் என்று அழைக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலும் கணிசமானவற்றை எல். ரீ.ரீ.ஈ தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது, கிடைத்த அப்படியான ஒரு நல் வாய்ப்பு ஆகும். தனது போராட்டத்துக்கு ஒரு அமைதியான முடிவை அணுகத்தக்க விதத்தில் பிரபாகரன் இந்த வாய்ப்பை மாற்றிக் கொண்டிருக்கலாம். உலகக் கண்ணோட்டத்தை பற்றிய குறைபாடுகள் காரணமாகக் உலகத்தில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை பிரபாகரன் அறியவில்லை. அவரது ஆலோசகரும் நண்பருமான அன்ரன் பாலசிங்கத்தின் கட்டளைப்படி ஒரு கூட்டாட்சித் தீர்வுக்கு பிரபாகரன் ஒப்புதல் அளித்த போதிலும்கூட, அவரது உள்மனது அதற்கு இணங்கவில்லை. உண்மையில் அவர் துப்பாக்கிகளுடன் சேர்ந்து கொண்டு அந்த நல்வாய்ப்பை விரயமாக்கி விட்டார்.

---

## பயந்தால் முன்னேற்றமில்லை

அரசன் ஒருவன் தன் நாட்டு மக்களுக்கு வித்தியாசமான ஒரு போட்டியை அறிவித்தான்.

அந்தப் போட்டி இதுதான்.

"போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்களுக்கு ஆடு ஒன்று வழங்கப்படும். அந்த ஆட்டை முப்பது நாட்கள் கழித்துத் திரும்பக் கொண்டு வர வேண்டும்.



திருப்பிக் கொண்டு வரப்படும் ஆடு எடை கூடினாலோ அல்லது குறைந்தாலோ மரண தண்டனை விதிக்கப்படும். அதே எடையுடன் தந்தால் அவர்கள் கேட்கும் செல்வம் அளிக்கப்படும்"

அரசனின் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளப் பலரும் பயந்து போய் இருந்தனர். ஒருவர் கூட இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முன்வரவில்லை.

இந்நிலையில் மலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவன் அரசனின் நிபந்தனையை ஏற்று ஆட்டை வளர்க்க முன் வந்தான்.

அரசனும் தனது நிபந்தனைகளைத் தெரிவித்து, ஆட்டை அவனிடம் கொடுத்து அனுப்பினான்.

முப்பது நாட்கள் கழிந்தன. அவன் ஆட்டுடன் திரும்ப வந்தான்.

அரசன் அந்த ஆட்டை எடை போடச் சொன்னான். என்ன ஆச்சரியம்! அந்த ஆடு எடை கூடவுமில்லை, குறையவுமில்லை. அதன் எடை அப்படியே இருந்தது.


அரசன் ஆச்சரியமடைந்தான். "இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?"

உடனே அவன், "இது மிகவும் சாதாரணமான விசயம். நீங்கள் என்னிடம் கொடுத்த ஆட்டை ஒரு கூண்டில் அடைத்தேன். கூண்டின் மறுபகுதியில் ஒரு புலியை அடைத்து வைத்தேன். ஆட்டிற்கு வழக்கம் போல் உணவிட்டேன். அதைச் சாப்பிட்ட ஆடு, புலியைப் பார்த்து, இது நம்மைக் கொன்று விடுமோ என்று பயந்து கொண்டே இருந்தது. அதனால், ஆட்டின் எடை கூடவுமில்லை, குறையவுமில்லை. பயமிருப்பவனுக்கு வாழ்க்கையில் முன்னேற்றம் இருப்பதில்லை." என்றான்.

அரசனுக்குப் புரிந்தது.

---

## நுளம்பு



- நுளம்புகளுக்கு வெள்ளை, மஞ்சள் நிறத்தைக் கண்டால் பிடிக்காது.
- நுளம்புகளில் பெண் நுளம்புகள் மட்டுமே நம்மைக் கடிக்கும்.
- ஆண் நுளம்புகளுக்கு செடி, இலை, தழைகளே உணவாகின்றன.
- நுளம்பு நம்மைத் தேடி வரும்போது விநாடிக்கு 250 முதல் 600 தடவைகள் வரை அதன் சிறகுகளை அடித்துக் கொள்ளும்.
- உலகில் 2700 வகை நுளம்பு இனங்கள் உள்ளன.
- நுளம்பு இனங்களில் சில பகல் நேரங்களிலும், சில மாலை நேரத்திலும், மற்றவை இரவு நேரத்திலும் கடிக்கக் கூடியவை.
- ஒரு சொட்டு இரத்தம் 20 நுளம்புகளுக்கு உணவாகிறது.

சீனாவின், பீஜிங் நகரில், ஒரே கையில், அதிக அளவு, வைன் கிளாஸ்களை வைத்திருப்பது தொடர்பான போட்டி நடத்தப்பட்டது. இதில், பிலிப் ஒசென்டன் என்பவர், ஒரே கையில், அதிகபட்சமாக, 51 கிளாஸ்களை தூக்கி வைத்திருந்து, சாதனை படைத்தார்.


இந்த சாதனையை படைப்பதற்கு, அவருக்கு மூன்று முயற்சிகள் தேவைப்பட்டன. முதல் முயற்சியில், 40 கிளாஸ்களையும், இரண்டாவது முயற்சியில், 45 கிளாஸ்களையும், மூன்றாவது முயற்சியில், 51 கிளாஸ்களையும், தூக்கி, இந்த சாதனையை நிகழ்த்தினார்.

இறுதியாக, 52 கிளாஸ்களை வைத்துக் கொள்வதற்கான சாதனையில் ஈடுபட்டபோது, கிளாஸ்கள், ஒன்றன் பின் ஒன்றாக, தவறி விழுந்தன. "ஸ்பெயினில், 2007இல், நிகழ்த்தப்பட்ட சாதனை, கடந்த ஐந்தாண்டுகளாக முறியடிக்கப்படாமல் இருந்தது. இறுதியில், அந்த சாதனையை, நான் முறியடித்து விட்டேன். இதற்காக, நான்காண்டுகள் கடுமையாக உழைத்தேன்..." என்கிறார், பிலிப்ஸ்.

## ஒரே கையில் 51 கிளாஸ்கள்!



## முகமது அலியின் தீப்பெட்டி!



20ஆம் நூற்றாண்டின் இணையற்ற விளையாட்டு வீரரும் மிகச்சிறந்த குத்துச்சண்டை வீரருமான முகமது அலிக்கு இப்போ வயது 70. அமெரிக்காவில் ஒரு பெயின்டருக்கு மகனாகப் பிறந்தவர். இவர் குத்துச்சண்டை வீரர் மட்டுமல்ல.... ஒரு கவிஞரும் கூட! கறுப்பு இன மக்களின் உரிமைக்காக போராடுபவர்... கொடை வள்ளல். ஒன்பது குழந்தைகளுக்கு தந்தை, ஆறு குழந்தைகளுக்கு தாத்தா! கிறிஸ்தவ மதத்திலிருந்து இஸ்லாமுக்கு மாறியவர்.

ஒசாமா பின்லேடன் திடீரென்று புகழ் பெற்றதற்கு முன் வரை, உலகிலேயே மிகவும் அறியப்பட்ட, அனைவருக்கும் உடனே அடையாளம் தெரிகிற பிரபலமான இஸ்லாமியராக இருந்தவர். கிறிஸ்தவராக இருந்தபோது, இவரது பெயர் காஷியஸ் க்ளே. இவரைப் பற்றி இதுவரை மூன்று திரைப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ரீடர்ஸ் டைஜஸ்ட் ஆசிரியர் குழு, இவரைப் பேட்டி எடுக்கச் சென்ற தினம் செப். 11ஆம் திகதி. பேட்டி ஆரம்பிப்பதற்கு முன் தான், தீவிரவாதிகள் தாக்குதலால் நியூயோர்க் நகரத்தின், 110 மாடி கட்டடம் தகர்க்கப்பட்டு, தரை மட்டமானது, "டிவி"யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அந்த சூழ்நிலையிலும் பேட்டி அளித்துள்ளார் அலி. ஆனால், அவ்வப்போது, "டிவி". ஸ்கிரீனை நம்ப முடியாதவராக பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்.

அப்போது அவர், "இந்த மாதிரி கொலைகளை எப்போதுமே நியாயப்படுத்த முடியாது. நம்பவே முடியவில்லை. ஏதும் அறியாத ஆண்கள், பெண்கள், குழந்தைகளை கொல்வதை நான் ஆதரிக்கவே மாட்டேன்! இஸ்லாம், அமைதியின் மதம். தீவிரவாதத்தையோ, மக்களை கொல்வதையோ இஸ்லாம் அனுமதிக்காது... இவ்வளவு பெரிய அளவில் தாக்குதல்கள் நடத்தி, ஆயிரக்கணக்கான உயிர்களை கொலை செய்தவர்கள், உண்மையான முஸ்லிம்கள் கிடையாது. இஸ்லாமியர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும் தகுதி கிடையாது..." என்று கூறினாராம்!

அதே பேட்டியில், அவர் மேலும் சொல்கிறார்... "காஷியஸ் க்ளேயாக இருந்த நான், 1964இல், இஸ்லாமிய மதத்திற்கு மாறி, முகம்மது அலி ஆனேன். அப்போது நான் முஸ்லிம் என்றால் அமெரிக்காவில் அது நகைச்சுவையாக இருந்தது. என்னுடைய மதம், என் நம்பிக்கை. நாம் அனைவரும் ஒரு நாள் இறக்கப் போகிறோம். நாம் செய்திருக்கும் நல்லவை அதிகமாக இருந்தால் சுவர்க்கம், கெட்டவை அதிகமாக இருந்தால் நரகம்..." என்று கூறினாராம்.

பெண்களிடம் இவருக்குள்ள ஈடுபாடு பற்றி கேட்டபோது, "நான் விருந்துகளுக்குச் செல்லும்போது, ஒரு தீப்பெட்டியை கண்டிப்பாக எடுத்துச் செல்கிறேன். உன்னத அழகிகளை மதிக்கிறேன். அவர்களுடன் உடலுறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்று எனக்கு எண்ணம் வந்தால், அது பாவம் என எண்ணி, உடனே ஒரு தீக்குச்சியை கொளுத்தி விரலில் பிடித்துக் கொள்வேன். எவ்வளவு நேரம் எரியுமோ அதுவரை தீக்குச்சியை பிடித்துக் கொள்வேன். நகம், எண்ணமாகி சுடும்! அப்போது, அந்த உஷ்ணம் ஓடிப்போய் விடும்!" என்றார்.

நரம்புத் தளர்ச்சி நோயால் இப்போது முகமது அலி பாதிக்கப் பட்டிருக்கிறார். "எனக்கு மட்டும் ஏன் இந்த வியாதி என்று நான் யோசிப்பதில்லை. எல்லாமே கடவுள் கொடுப்பது. பல நல்லவையும் கொடுத்திருக்கிறார். அவர் நடத்தும் சோதனை இது..." என்றாராம் அலி!

---

## எம்.ஜி.ஆர் படங்கள்!



**- R.P. ராஜநாயஹம் -**

எம்.ஜி.ஆரை வைத்து படம் எடுப்பது கத்தி மேல் நடப்பது போல. கொஞ்சம் கணக்கு தப்பிவிட்டால் பெரும் நஷ்டம் தான். அவர் சனீஸ்வரன் போல. இலாபம் அள்ளிக்கொடுத்தாலும் உண்டு. படம் எடுக்கும்போதே பெருங்கஷ்டம் ஆகி ஆயுள் முழுவதும் மீள முடியாத நஷ்டம் ஆகவும் வாய்ப்பு. மரண அடி தான்.

படம் எடுக்கும்போது ஏற்படும் சிரமங்கள், தொடர் மாறுதல்கள், எதிர்பாரா மாற்றங்கள் போன்றவற்றை ஹொலிவுட்டில் Development Hell என்று சொல்வார்கள். ஜாம்பவான்களுக்கு கூட இந்த Development Hell சமாச்சாரங்கள் எம்.ஜி.ஆர் படங்களில் நிறைய எதிர்கொள்ள வேண்டிய நிலை தான். படம் develop MtNj hell என்கிற நிலை.

படம் ஓரளவு வளர்ந்த பின் சிக்கல் ஆரம்பித்து விடும். அவருடைய அண்ணன் சக்ரபாணியை சமாளிப்பதே பெரும்பாடு என்பார்கள். எம்.ஜி.ஆர் நேரடியாக தான் பேச விரும்பாத விஷயங்களையெல்லாம் அண்ணன் மூலம் தயாரிப்பாளர்களிடம் பேசி படாத பாடு படுத்தி விடுவார். அதாவது தயாரிப்பு காலத்தில் எம்.ஜி.ஆருக்கு அண்ணன் சக்ரபாணியே டப்பிங் பேசி "உண்டு இல்லை" யென்று ஆக்கி விடுவார். சந்திரபாபு "மாடி வீட்டு ஏழை" படம் எடுத்த போது நாற்காலியை தூக்கி சக்கரபாணியை தாக்கப் போகிற அளவுக்கு ரசாபாசமாகியிருக்கிறது.

ஐய்யோ பெரியவரை பகைத்து விட்டோமே என்று கவலையில் சந்திரபாபு அளவுக்கு மீறி குடித்து விட்டு படுத்து விட்டார். ஓரிரண்டு நாள் கழித்து எழுந்து ஒரு முக்கிய விருந்து நிகழ்ச்சிக்கு போனார். அங்கே எம்.ஜி.ஆர் இவரைப் பார்த்து அழகாக சிரித்து "பாபு சார்!" என்றார். இது தான் எம்.ஜி.ஆர்! His beaming smile!

"எம்.ஜி.ஆர் படம்" எடுப்பது Herculean Task.

ஒரு எம்.ஜி.ஆர் படம் எடுத்து சம்பாதித்தை எல்லாம் அடுத்த எம்.ஜி.ஆர் படத் தயாரிப்பின் போதே இழந்து "உள்ளதும் போச்சு நொள்ளை கண்ணா" என்று தவித்து தக்காளி விற்கும் நிலை பலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

சாண்டோ சின்னப்பா தேவர் "தாய்க்குப்பின் தாரம்" எடுத்து விட்டு எம்.ஜி.ஆர் சங்காத்தமே வேண்டாம் என்று அடுத்து ரஞ்சனை வைத்து நீலமலைத்திருடன், கன்னட உதயகுமாரை வைத்து செங்கோட்டை சிங்கம், ஜெமினி கணேசனை வைத்து வாழவைத்த தெய்வம், ஆனந்தன் நடித்த கொங்கு நாட்டு தங்கம் என்று எடுத்த நிலை. அதன் பின் தாய் சொல்லைத் தட்டாதே தொடங்கி காதல் வாகனம் வரை எம்.ஜி.ஆருடன் இணைந்து தொழில்செய்த பின் பிரிந்து, மீண்டும் "நல்ல நேரம்" படத்தில் எம்.ஜி.ஆர் நடித்தது வரை "தேவர்-எம்.ஜி.ஆர் love and hate relationship" பற்றி ஒரு பெரிய புராணமே பாடலாம்.

விஜயா - வாஹினி அதிபர் நாகிரெட்டி எம்.ஜி.ஆரை வைத்து "எங்கவீட்டுப்பிள்ளை" படம் எடுக்கப் போவதை சொன்னபோது சினிமாவுலகில் "எம்.ஜி.ஆரை வைத்தா!" என்று தான் கேட்டிருக்கிறார்கள்.

யு.ஆர்.ஜீவரத்தினம் என்று ஒரு பழம்பெரும் நடிகை. பி.யு.சின்னப்பா நடித்த "ஜகதல பிரதாபன்"(1944) படத்தில் நடித்த கதாநாயகியரில் ஒருவர். எம்.ஜி.ஆரை கதாநாயகனாகப் போட்டு "சிரிக்கும் சிலை" என்ற படம் எடுக்க திட்டம் போட்டார். அவர் அந்த அனுபவத்தைப் பற்றி பிற்காலத்தில் சொல்வாராம்: "எம்.ஜி.ஆரை வைத்து 'சிரிக்கும் சிலை' என்று ஒரு படம் எடுக்க ஆசைப்பட்டு பிறர் சிரிக்கும் நிலைக்கு ஆளானேன்."



கண்ணாம்பாவின் கணவர் நாகபூஷணம் தயாரித்து இயக்கிய எம்.ஜி.ஆர் படம் தாலிபாக்கியம்.

அசோகமித்திரன் சொல்கிறார் : கண்ணாம்பா அவர்களுக்கு தாலி, வீடு, வாசல் எல்லாம் போய் திடீரென்று இறந்து விட்டார்.

எம்.ஜி.ஆரின் மெய்க்காப்பாளர் கே.பி.ராமகிருஷ்ணன் சொல்வது: மைசூரில் தங்கியிருந்த தாலி பாக்கியம் யூனிட் படப்பிடிப்பிற்கு ஸ்ரீரங்கபட்டினம் கிளம்ப ஆயத்தமான போது நாகபூஷணம் "படப்பிடிப்புக்காக கொண்டு வந்திருந்த மூன்று லட்சம் ரூபாய் தொலைந்து போய் விட்டது" என்று எம்.ஜி.ஆரிடம் சொல்லியிருக்கிறார். எம்.ஜி.ஆர் உடனே மூன்று இலட்சம் ரூபா சென்னையிலிருந்து எடுத்து வரச்செய்து உதவியதுடன் அந்தப் பணத்தை திருப்பித் தரவேண்டாம் என்று சொல்லவும் நாகபூஷணம் தன்னை விட இளையவரான எம்.ஜி.ஆர் காலிலேயே விழுந்திருக்கிறார்.

அடிமைப்பெண் படத்தில் சந்திரபாபு நடிப்பதற்கு சம்பளமாக எம்.ஜி.ஆருக்கு அவர் கடனாகத் தரவேண்டியிருந்த சில லட்சங்களை பெருந்தன்மையாக கழித்துக்கொண்டிருக்கிறார்.

அசோகன் "நேற்று இன்று நாளை" எடுத்து பட்ட அவதிக்கு எம்.ஜி.ஆரின் தீவிர அரசியல் கட்சி நடவடிக்கையை மீறியும் காரணங்கள் இருக்க முடியும்.

ஏ.பி.என் "நவரத்தினம்" எம்.ஜி.ஆர் படம் எடுத்த பின் இறந்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர் மீது முதலீடு செய்யும்போது அவரை வைத்து வாரிக்கொட்டி விட முடியும் என்ற நம்பிக்கை இருந்த அளவுக்கு சரியான திட்டமிடல் இருந்திருக்க வேண்டும். பட தயாரிப்பின் விளைவுகளை தாங்கக்கூடிய பொருளாதார பின்புலம் இருந்திருக்க வேண்டும்.

எம்.ஜி.ஆர் 1977இல் முதல்வரான போது, தான் நடித்து நின்று போன "அண்ணா என் தெய்வம்" படத்தயாரிப்பாளருக்கு சாவகாசமாக பாக்யராஜின் "அவசர போலீஸ்" மூலம் நிவாரணம் காண நடவடிக்கை எடுத்தார். ஆனால் பாக்யராஜ் படம் ரிலீஸ் ஆனபோது எம்.ஜி.ஆரே உயிருடன் இல்லை. 1987இல் அவருடைய பத்து வருட ஆட்சியே முடிவுக்கு வந்திருந்தது. 1990இல் தான் "அவசரபோலீஸ் 100" ரிலீஸ் ஆனது.

# அம்பாறையில் கண்டறியப்படாத நில அதிர்விற்கான காரணிகள்



(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் ஏற்படும் நில அதிர்வுகளுக்கான காரணத்தை கண்டறிவதற்காக அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் இதுவரை அவற்றுக்கான காரணம் கண்டறியப்படவில்லை என புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

தமன, வடினகால உட்பட 30 கிலோ மீற்றர் பிரதேசத்திற்கு உட்பட்ட 6 கிராமங்களிலேயே இந்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.பி.வி.விஜயானந்த பி.பி.சி. தமிழோசைக்கு தெரிவித்தார்.

காரணத்தை கண்டறிவதற்காக புவி அதிர்வு கணிப்பு பொறிகள் அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டு, நிபுணர் ஒருவர தலைமையிலான குழுவொன்று அந்தப் பகுதியில் தற்போது ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறிய அளவில் தொடர்ந்தும் அந்தப் பகுதியில் நில அதிர்வு உணரப்பட்டாலும் பெரும்பாலனவை ஆய்வு மையங்களில் பதிவாகவில்லை.

இதுவரை இரண்டு தடவைகள் மட்டுமே நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன. அது மட்டுமல்ல மூன்று சனிக்கிழமைகளில் தொடர்ந்தும் பகல் நேரம் நில அதிர்வு அந்தப் பகுதியில் உணரப்பட்டுள்ளதாகவும் மனித செயறபாடுகள் அல்லது இயற்கை நிகழ்வு இதற்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரிவித்தார்.

அனுபவ ரீதியாக நோக்கும் போது மனித செயற்பாடுகள் இதற்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகித்தாலும் அவை இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் சில வாரங்களுக்கு முன்பு கொழும்பிலும் இவ்வாறு சிறிய அளவில் ஒரு அதிர்வு உணரப்பட்டது என்றும் பின்னர் அது துறைமுக அபிவிருத்தி நடவடிக்கையின் போதே ஏற்பட்டதாக கண்டறியப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.


அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமங்களில் உணரப்படும் நில அதிர்வு மாதுறு ஓயா வனப் பிரதேசதிலேயே ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளதால் அந்தப் பகு திகளில் சென்று ஆய்வுகள் மேற்கொள்ள வன ஜீவராசிகள் துறை மற்றும் பாதுகாப்பு துறை உட்பட சம்பந்தப்பட்ட துறையினரின் ஒத்துழைப்பை நாட உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுற்றுலா விசாக்கள் மூலம்வந்த ஆயிரம் பேர் நாடு கடத்தல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்த சுற்றுலா விசாக்களின் மூலம் நாட்டுக்குள் பிரவேசித்த 1000 பேர் இந்தவருடம் நாடுகடத்தப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன், நாடு கடத்தப்பட்ட அனைவரும் சுற்றுலா விசாக்கள் மூலம் நாட்டுக்குள் வந்து பாலியல் தொழில்களில் ஈடுபட்டவர்களும், கையடக்க தொலை பேசிகளை வீடு வீடாக சென்று விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர்களுமென தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டவர்களில் அதிகமானவர்கள் வெளிநாட்டில் இருந்து சட்டவிரோதமான முறையில் பெண்களை வரவழைத்து அவர்களை 25 ஆயிரம் ரூபாவுக்கும் மேலாக பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்யும் ஒரு குழுவும் அடங்குவதாக குறிப்பிட்டுள்ளது.




இவர்கள் அனைவரும் தமக்கு வழங்கப்பட்ட வீசா நடைமுறைகளை மீறியவர்கள் என்ற வகையில் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதிக தண்டனை வழங்கப்பட்டு நாடு கடத்தப்படுவார்கள் என குடி வரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# தாதிய உத்தியோகத்தர்கள் நாளை வேலைநிறுத்தம்

(கொழும்பு)

அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் நாடு தழுவிய ரீதியில் நாளையதினம் 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளது.

உயிர்பாதுகாப்பு சேவைகள், அத்தியாவசிய சேவைகள், அதிதீவிர சிகிச்சை கண்காணிப்புச் சேவைகள், அவசர சத்திர சிகிச்சைகள் ஆகியவற்றுக்குப் பாதிப்புக்கள் ஏற்படா வண்ணம் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

லேடி ரிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரி காசல் வீதி பிரசார ஆஸ்பத்திரி, டி சொய்ஸா பிரசவ ஆஸ்பத்திரி ஆகியவற்றில் மனிதாபிமானத்தின் பேரில் வேலை நிறுத்தம் நடைபெற மாட்டாது.

600 சுகாதார நிலையங்களில் 25,000 தாதிமார் வேலை நிறுத்தங்களில் பங்கு கொள்வர். தமது தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அதிகாரிகள் செயற்படுவார்களானால், வேலை நிறுத்தம் தொடர்பாக பரிசீலனை செய்ய முடியுமென சங்கத் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

# இலஞ்ச, ஊழல்சட்டத்தில் வருகிறது திருத்தம்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பான சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சட்டங்களில் திருத்தம் கொண்டு வரும் நோக்கில் குழுவொன்றை நியமித்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1954ஆம் ஆண்டில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பான சட்டம் முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்டது.

தனியார் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகளைத் தடுத்து நிறுத்த சட்டத்தில் சந்தர்ப்பம் கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே தனியார் துறையில் இடம்பெறும் ஊழல் மோசடிகளைத் தடுக்கும் நோக்கில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# சிறுவர் இல்லங்களில் சோதனை

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள சிறுவர் இல்லங்களை 3 மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இதனைத் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் அனோமா திஸாநாயக்க இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது, கடந்த வாரம் சில சிறுவர் இல்லங்களை பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னர், இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டார்.

சிறுவர் இல்லங்களில் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சூழ்நிலை குறித்து ஆராயும் பொருட்டே இந்த பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

# திருவாவடுதுறை ஆதீன சீர்வளர்சீர் சிவப்பிரகாச ஒலி மௌனமானது

*(நேற்றைய தொடர்ச்சி.)*



2003 ஆம் ஆண்டு இந்து சமய கலாசார அமைச்சரின் அழைப்பை ஏற்று உலக இந்துமாநாட்டுக்கு வருகை புரிந்து யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் மேற்கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் அனேகமான இடங்களுக்கு அவருடன் கூடப்போகும் வாய்ப்பும் சுவாமிகளின் பூசை வேளைகளிலும் திருமுறை இசைக்கும் பாக்கியமும் பெற்றவன் நான்.

இரண்டாம் முறை சுவாமிகள் யாழ்ப்பாணம் வருகை தந்தது காரைநகர் ஈழத்து சிதம்பர ஆலய அருகே உருவாக்கப் பெற்ற அறக்கொடை நிலைய மடாலயத்தைத் திறந்து வைப்பதற்காக திறப்பு விழா அன்று ஈழத்து சிதம்பர நடராஜப்பெருமான் தேவஸ்தான தரிசனத்திற்கு வருகை தந்தார்.

மூன்றாவது முறை கொழும்பில் நடைபெற்ற 50ஆவது சைவ சித்தாந்த பொன்விழாவிற்கு வருகை தந்தார்.

சுவாமிகள் அகில இலங்கை திருமுறை மன்றத்துடன் நெருங்கிய தொடர்புடையவர். அவர்களின் அருளாணையின் வண்ணம் நமது மன்றத்திற் ஐம்பொன்னால் ஆன நாயன்மார் நால்வர் சிலைகள், பன்னிரு திருமுறை நூல்கள் அன்பர் திரு. இரத்தின சபாபதி அவர்கள் மூலம் வழங்கியிருந்தார்கள். அதனை பெற்றுக் கொண்ட அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்கள் நலமுடன் வாழவேண்டுமென பிரார்த்தித்து மாதம் ஒரு கோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என பன்னிரு திருமுறை முழுவதும் வருடாந்தம் முற்றோதி வருகின்றது.

சி.கிருஷ்ணமூர்த்தி,
அமைப்பாளர்,
அகில இலங்கைத்திருமுறை மன்றம்,
யாழ்ப்பாணம். (முற்றும்.)

வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா கலந்து கொண்டு யாழ்.பொலிஸாரின் அணிவகுப்பை பார்வையிடுவதையும், அவர்களின் திறமைகளை பரிசோதித்து பார்ப்பதையும், அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதையும் காணலாம். (படம்:ஆர்.ராஜகுமார்)

# கடற்கரையில் கொட்டப்படும் குப்பைகள் சூழல் மாசடைவதாக விசனம்



வல்வெட்டித்துறை நகர சபையினர் கடற்கரை ஓரத்தில் கழிவுப்பொருட்களை கொட்டுவதனால் கடல்வளம் அழிக்கப்படுவதோடு பொதுமக்களுக்கு பல இடையூறுகளும் ஏற்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் கேட்பார் அற்ற நிலையில் கழிவுப் பொருள் கொட்டப்பட்டுவருவதால் இரசாயனப்பதார்த்தங்கள் கடல் நீருடன் கலந்து மீனினங்கள் அழியும் அபாயம் உள்ளதெனவும் பொலித்தீன்கள் வீதியோரத்தில் காற்றோடு காற்றாக பறந்து செல்வதனால் வைத்தியசாலைக்கு வருவோர் வீதியால் பயணிப்போர்க்கு சிறுவிபத்துக்களுக்கு உள்ளாவதாகவும் பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வல்வெட்டித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட தொண்டைமானாறு தொடக்கம் பொலிகண்டி மேற்கு வரையான ஊர்மனைகள்தவிர்ந்த பிரதான வீதியோர வீடுகளின் முன்பாக பைகளில் கட்டி வைக்கப்படும் கழிவுப்பொருட்கள் நகரசபைக்கு சொந்தமான உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டு கடற்கரை ஓரத்தில் கொண்டுவந்து கொட்டப்படுகிறது

இதனால் மழைகாலத்தில் டெங்கு பரவும் அபாயமும் கோடை காலத்தில் கழிவுப்பொருட்களை ஏரியூட்டுவதனால் இரசாயனப்புகை அருகில் உள்ள ஊர் மனைகளுக்கு செல்வதனால் பல்வேறு உபாதைகளுக்கு ஆளாவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் நகர சபை எல்லை பிரதான பகுதிகளில் எடுக்கப்படும் கழிவுப் பொருட்களை பிரித்தெடுத்து குப்பைகளை உரப்பசளையாக்கும் திட்டத்தை மயிலியதனை தொண்டைமானாறு பகுதியில் செயற்படுத்த திட்டமிட்ட நிலையில் பொது மக்களின் எதிர்ப்பின் காரணமாக செயற்படுத்தப்படாமல் இருப்பதாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதில் குப்பைகளை மக்கள் நடமாட்டம் அற்ற கரவெட்டி பிரதேச பகுதியில் கொட்ட தீர்மானித்திருந்த நிலையில் நகர சபையின் வருமானத்தை கருத்தில் கொண்டு அந் நடவடிக்கையும் நிறுத்தப்பட்டதாகவும் தற்போது கடற்கரைப் பகுதியில் இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவது தடுக்கப்படவேண்டும் எனவும் இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (116)

# நாவலர் எழுச்சிவிழா

அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு இந்து மா மன்றம் அண்மையில் நாவலர் எழுச்சி விழாவை மிகவும் சிறப்புறக்கொண்டாடியது. அக்கரைப்பற்று விபுலானந்தர் இல்லத்திலிருந்து நாவலர் பெருமானின் உருவச்சிலை ஊர்வலமாக அக்கரைப்பற்று நகர் வழியாகப் புறப்பட்டு ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தையடைந்து விழா நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் யோகோஸ்வரன், நல்லை ஆதீன முதல்வர், செஞ் சொற்செல்வர் ஆறு திருமுருகன், அகில இலங்கை இந்து மாமன்ற செயலாளர் மு. கதிர்காமநாதன், உபதலைவர் சின்னத்துரை தனபாலா, பேராசிரியர் எஸ். பத்மநாதன் உட்படப் பலரும் உரையாற்றினர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள இந்துப் பாடசாலைகள், சைவ சமய அமைப்புக்கள் அறநெறிப் பாடசாலைகள் எனப் பெரும் கூட்டம் இவ்விழாவில் கலந்து கொண்டிருந்தது. (137)

# தற்காலிகமாக திருத்தப்பட்ட உதயபுரம் வீதி

(குருநகர்)

மணியந்தோட்டம் சந்தியில் இருந்து கடற்கரையோரமாக உதயபுரம் செல்லும் வீதி மாணவர்களின் போக்குவரத்து தேவைகளுக்காக தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் நிரந்தர புனரமைப்புப் பணிகள் ஜனவரி மாதம் முன்னெடுக்கப் படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளருமான ஆர். இரவீந்திரதாஸன் தெரிவித்துள்ளார்.

குறித்த வீதி முன்னர் புனரமைக்கப்படாமல் இருந்த நிலையில் மாணவர்களின் நலன்கருதி கிரவல் மண் போடப்பட்டு சமப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இவ்வீதியின் நிரந்தர புனரமைப்பு 2013ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தார்ஊற்றி புனரமைப் பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(68)



# லண்டனில் ஒரே மேடையில் நடன, மிருதங்க அரங்கேற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

லண்டன் கொறைடோனில் வசிக்கும் புலோலி உபயகதிர்காமத்தைச்சேர்ந்த செல்வி. நவிலா கிருஸ்ணராஜாவின் பரதநாட்டிய அரங்கேற்றமும், செல்வன். சயன் கிருஸ்ணராஜாவின் மிருதங்க அரங்கேற்றமும் லண்டன் அஸ்றோபற்கலாசார மண்டப ஒரேமேடையில் நடைபெற்றன.





இவ் அரங்கேற்றங்களில் லண்டன் கீழைத்தேய நுண்கலைக்கல்லூரி பிரதம பரீட்சகர் ஜெயலகி அருணகிரிநாதன் பிரதமவிருந்தினராகவும் நர்த்த கரணமணி பட்ட மங்கலம் எம். ஆர் மணிகண்டன் சிறப்பு விருநதினராகவும் கலந்து கொண்டனர்.

லண்டன் சிவகுமாரன் தமிழ்ப் பாடசாலை தமிழ்க்கல்வி கலாசார மன்றத்தலைவர் அருட்திரு. எக்ஸ் சூசைநாயகம் அடிகளார் ஆசியுரை வழங்கினார்.(01)

# பதிவிறக்கப் பெட்டகம்

**கணவன்:** குழந்தை அழுதால் அழட்டும். தயவுசெய்து நீ தாலாட்டுப் பாடாதே...
**மனைவி:** ஏங்க?
**கணவன்:** ரெண்டு பேரும் சேர்ந்து அழுற மாதிரி கேக்குது!

*** *** *** ***

**ரமா:** எங்கள் வீட்டில் என்னை கிறுக்கி, மக்கு, மண்டு என்றெல்லாம் சொல்றாங்கள்... உங்கட வீட்டில்?
**சுமா:** எங்கள் வீட்டில் உன்னைப் பற்றி அவ்வளவா தெரியாது...

*** *** *** ***

**ஆசிரியர்:** திருக்குறளை எழுதியவர் யார்?
**மாணவன்:** நம்ம ஆசிரியருக்கு என்னடா ஆச்சு?
**மற்றொரு மாணவன்:** ஏன்ரா..?
**மாணவன்:** இப்பதான்ரா, சேர் கரும்பலகையில திருக்குறள் என்று எழுதினார். அதுக்குள்ளே திருக்குறளை எழுதினவர் யாரென்று கேட்கிறார் பார்!

*** *** *** ***

**ஆசிரியர்:** மாணவர்கள் சொல்லுகிற அதிகமான பதில் எது தெரியுமா?
**மாணவர்கள்:** தெரியாது சேர்...
**ஆசிரியர்:** சரியான பதில்!

*** *** *** ***

"தனியா இருந்தால், நான் பாட ஆரம்பிச்சிடுவேன்"
"நாலு பேர் இருக்கும்போது பாட ஆரம்பிச்சால் கூட தானாகவே நீ தனியாகிவிடுவாய்"

*** *** *** ***

**ஒருவர்:** பாம்புகளுக்கு கடிதம் வந்தால், தபால்காரர் கஷ்டப் படுவாரா, ஏன்..?
**மற்றவர்:** எந்தப் புத்துல எந்தப் பாம்பு இருக்குமோ..?

*** *** *** ***

**ஆசிரியர்:** கணக்குப் பாடத்தில், ஏண்டா சைபர் மார்க் எடுத்திருக்கிறாய்..?
**மாணவன்:** கணக்கிலே சைபருக்குத்தான் மதிப்பு அதிகம் என்று நீங்கதானே சேர் சொன்னீங்க.. அதனாலதான்...

*** *** *** ***

"தலைவருக்கு பொதுஅறிவு குறைவுதான் என்று எப்படிச் சொல்கிறாய்?"
"ஃபேஸ்புக் எந்தக் கடையில் கிடைக்கும் என்று கேட்கிறார்"

*** *** *** ***

"அப்பா – அம்மா செய்யும் தப்பு பிள்ளைகளைப் பாதிக்கும் என்கிறது சரிதான் போலிருக்கு"
"எப்படிச் சொல்றாய்?"
"என் அப்பா – அம்மா தப்புத் தப்பா சொல்லித் தாற கணக்குக்கு வகுப்பில் எனக்குத்தானே அடி விழுது"

*** *** *** ***

"நாம தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தலாமா தலைவரே?"
"எதுக்கப்பா?"
"நாம் இப்ப எந்தக் கட்சியில் இருக்கிறோம் என்று தெரிஞ்சு கொள்ளத்தான்!"

*** *** *** ***

**மகன்:** அப்பா, நீச்சல் குளம் கட்டுறதுக்கு நன்கொடை கேட்டு வந்து இருக்காங்க...
**அப்பா:** அப்படியா, ஒரு சொம்பு தண்ணீர் கொடுத்து அனுப்பு..!

*** *** *** ***

**தொண்டர் 1:** தலைவர் திடீரென்று ஆஸ்பத்திரி கட்டுறாரே, என்ன விஷயம்?
**தொண்டர் 2:** அவருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கிறாங்களாம்.. தொழிலை ஆரம்பித்துவிடலாம் என்று பார்க்கிறார்...

*** *** *** ***

(மருத்துவமனை ஒன்றில்)
"நடக்கவே முடியேல்லை டாக்டர்..."
"துணைக்கு உங்க மனைவியை அழைச்சிட்டு வர வேண்டியதுதானே?"
"கால் வலியோட நான் வந்ததே பெரிய விஷயம். இதுலே தலைவலி வேறயா?"

*** *** *** ***

"டேய் மச்சான் ஒரு பொண்ணை லவ் பண்ணிக்கொண்டிருந்தியே... அந்த லவ் இப்ப எப்படிப் போய்க்கொண்டிருக்கு?"
"நாளைக்குக் கல்யாணமடா"
"என்னடா சொல்றாய்... கல்யாணத்துக்கு எனக்குச் சொல்லவே இல்லை"
"எனக்கே அவ சொல்லேல்லை"

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்**

ஆசிரியர் : S.ஞானசீலன் (B.com)

1) வியாபார நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதற்கு ஆதாரமாக, அத்தாட்சியாக அமைவது
1) மூலப்பதிவேடு 3) பேரேடு
3) மூல ஆவணம் 4) பரீட்சை மீதி (.............)

2) மூலப்பதிவேடுகளானவை
1) எட்டு 2) ஆறு
3) ஒன்பது 4) நான்கு (.............)

3) மூல ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு முதன் முறையாகப் பதியப்படும் இடம்
1) துணையேடு 2) துணைப்பேரேடு
3) பேரேடு 4) பொதுத்தினசேரி (.............)

4) மூலப்பதிவேட்டில் முக்கியமான ஏடாகக் கருதப்படுவது
1) காசேடு 2) சில்லறைக் காசேடு
3) உட்திரும்பல் நாளேடு 4) விற்பனை நாளேடு (.............)

5) மூலப்பதிவேடாகக் கருத முடியாதது
1) விற்பனை நாளேடு 2) வெளித்திரும்பல் நாளேடு
3) விற்பனைப் பேரேடு 4) பொதுத்தினசரி (.............)

6) நாளேடுகள்... வகைப்படுத்தப்படும்
1) நான்கு 2) ஆறு
3) ஐந்து 4) மூன்று (.............)

7) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற பணப் பெறுவனவுகளையும் பணக் கொடுப்பனவுகளையும் மட்டும் பதிவுசெய்து கொள்வதற்காக பராமரித்துக் கொள்ளப்படும் ஏடு
1) ஒருநிரல் காசேடு 2) இருநிரல் காசேடு
3) மூன்றுநிரல் காசேடு 4) சில்லறைக் காசேடு (.............)

8) காசேடானது .... வகைப்படுத்தப்படும்
1) இரண்டு 2) ஐந்து
3) நான்கு 4) மூன்று (.............)

9) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசுதொடர்பான பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும் மட்டும் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படுவது
1) காசேடு 2) இருநிரல் காசேடு
3) சில்லறைக் காசேடு 4) ஒருநிரல் காசேடு (.............)

10) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசுதொடர்பான கொடுக்கல் வாங்கல்களுடன் வங்கி தொடர்பான கொடுக்கல் வாங்கல்களையும் மட்டும் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படுவது
1) முற்பணமுறைச் சில்லறைக் காசேடு 2) இருநிரல் காசேடு
3) காசேடு 4) நிரல்முறைச் சில்லறைக் காசேடு (.............)

11) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசு, வங்கி, காசுக்கழிவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைச் சேர்த்துப் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படும் காசேடு
1) சில்லறைக் காசேடு 2) முற்பணமுறைச் சில்லறைக் காசேடு
3) மூன்றுநிரல் காசேடு 4) இருநிரல் காசேடு (.............)

12) உட்திரும்பல் நிகழ்விற்கான மூலஆவணம்
1) வரவுத்தாள் 2) செலவுத்தாள்
3) அடியிதழ் 4) விற்பனைப் பட்டியல் (.............)

13) வெளித்திரும்பல் நிகழ்விற்கான மூலஆவணம்
1) வரவுத்தாள் 2) செலவுத்தாள்
3) கொள்வனவுப் பட்டியல் 4) அடியிதழ் (.............)

14) விற்பனைப் பட்டியலை மூல ஆவணமாகக்கொண்ட கொடுக்கல் வாங்கல்
1) காசு விற்பனை 2) காசோலை மூலம் விற்பனை
3) விற்பனை 4) கடன் விற்பனை

15) வங்கிக்கூற்றை மூலஆவணமாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்
1) கடன்பட்டோன் வங்கியில் நேரடி வைப்பு
2) வங்கி செலுத்திய மின்சாரம்
3) வங்கி வசூலித்த பங்குலாபம்
4) மேற்கூறிய அனைத்தும் (.............)

16) சம்பளம் செலுத்திய இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) சம்பளப் பட்டியல் 2) பற்றுச்சீட்டை
3) கச்சாத்து 4) அடியிதழ் (.............)

17) காசோலை மூலம் கொடுப்பனவு இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) பற்றுச்சிட்டை 2) அடியிதழ்
3) கச்சாத்து 4) பட்டியல் (.............)

18) காசு பெறுவனவிற்கான மூலஆவணம்
1) கச்சாத்து 2) பட்டியல்
3) பற்றுச்சிட்டை 4) செலவுத்தாள் (.............)

19) காசுக்கொடுப்பனவிற்கான மூல ஆவணம்
1) கச்சாத்து 2) வரவுத்தாள்
3) பற்றுச்சிட்டை 4) அடியிதழ் (.............)

20) பிரயாணம் செலுத்தியது, சிறிய செலவுகள், அறவிடமுடியாக்கடன் இவற்றுக்கான சரியான மூலஆவணத் தொடர்
1) வழிச்செலவுத்துண்டு, சிறிய செலவுகள் கச்சாத்து, நாட்குறிப்புச் கச்சாத்து
2) பற்றுச்சிட்டை, கச்சாத்து, விற்பனைப்பட்டியல்
3) வரவுத்தாள், செலவுத்தாள், அடியிதழ்
4) செலவுத்தாள், அடியிதழ், வரவுத்தாள் (.............)

21) வங்கியில் வைப்பு இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) செலவுத்துண்டு 2) வரவுத்துண்டு
3) செலவுத்தாள் 4) வரவுத்தாள் (.............)

22) மூலப்பதிவேடாகவும் பேரேட்டுக் கணக்கில் ஒன்றாகவும் தொழிற்படும் துணையேடு
1) விற்பனை நாளேடு 2) கொள்வனவு நாளேடு
3) காசேடு 4) முறையான நாட்குறிப்பு(.............)

23) காசேட்டின் வங்கிநிரலில் வரவில் பதியப்படும் பொருத்தமான ஓர் கொடுக்கல் வாங்கல்
1) காசு விற்பனை 2) காசோலைமூலம் விற்பனை
3) கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை
4) வங்கி வசூலித்த பங்குலாபம் (.............)

24) காசேட்டில் எதிர்ப்பதிவு எனக் கூறப்படும் மிகமுக்கியமான கொடுக்கல் வாங்கல்
1) காசுவிற்பனை 2) வங்கியில் வைப்பு
3) வங்கி செலுத்திய காப்புறுதி 4) மின்சாரம் (.............)

25) காசேட்டில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்
1) கவிக்கு விற்பனை 2) கொடுக்க வேண்டிய வாடகை
3) சுகந்தனிடம் கொள்வனவு 4) மேற்கூறிய அனைத்தும்

26) காசேட்டில் பதிவு செய்துகொள்ளப்படும் கழிவு
1) காசுக்கழிவு 2) கணியக் கழிவு
3) வியாபாரக் கழிவு 4) பருவகாலக் கழிவு (.............)

27) காசேட்டின் ஞாபக நிரலாகக் கருதப்படும் நிரல்
1) வங்கி நிரல் 2) காசு நிரல்
3) கழிவு நிரல் 4) எவையுமல்ல (.............)

28) காசேட்டின் பெறுவனவுப் பக்க (வரவுப்பக்க) கழிவு நிரல்
1) காசுக்கழிவு 2) கொடுத்த கழிவு
3) பெற்றகழிவு 4) வியாபாரக் கழிவு (.............)

29) காசேட்டின் கொடுப்பனவுப்பக்க (செலவுப்பக்க) கழிவு நிரல்
1) பெற்றகழிவு 2) கணியக்கழிவு
3) வியாபாரக்கழிவு 4) பருவகாலக்கழிவு (.............)

30) காசேட்டின் வரவுப்பக்க கழிவுத்தொகை
1) காசுக்கழிவுக்கணக்கில் பதியப்படும்
2) கொடுத்த கழிவுக்கணக்கில் வரவில் பதியப்படும்
3) பெற்றகழிவுக்கணக்கில் செலவில் பதியப்படும்
4) வியாபாரக் கழிவுக்கணக்கில் பதியப்படும். (.............)

31) காசேட்டின் செலவுப் பக்க கழிவுத்தொகை
1) வியாபாரக்கழிவுக்கணக்கில் பதியப்படும்
2) கணியக்கழிவுக் கணக்கில் பதியப்படும்
3) பெற்றகழிவுக் கணக்கில் பதியப்படும்
4) கொடுத்தகழிவுக் கணக்கில் பதியப்படும் (.............)

32) காசேட்டின் செலவுப்பக்க வங்கி நிரலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லாதது
1) வங்கி செலுத்திய மின்சாரம் 2) வங்கிக்கட்டணம்
3) காப்புறுதி 4) காசோலைப் புத்தகக் கட்டணம் (.............)

33) காசேட்டின் வரவுப்பக்க வங்கி நிரலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லாதது
1) கடன்பட்டோனின் வங்கியில் நேரடி வைப்பு
2) வங்கி வசூலித்த பங்குலாபம்
3) வங்கியிலிட்ட பணம்
4) காசோலை மூலம் விற்பனை (.............)

34) நிறுவனக் கணக்குப் புத்தகங்களில் பதிவு இடப்படாத கழிவு
1) காசுக்கழிவு 2) கணியக்கழிவு
3) வியாபாரக்கழிவு 4) பருவகாலக்கழிவு (.............)

35) பட்டியல் விலையிலிருந்து குறைத்து வழங்கப்படும் கழிவு
1) வியாபாரக் கழிவு 2) கணியக்கழிவு
3) காசுக்கழிவு 4) பருவகாலக்கழிவு (.............)

36) 'நன்றி மீண்டும் வருக' எனும் வியாபாரப்புள்ளியில் 'ண்ண்க' எனும் குறி குறிக்கும் விலைப்பெறுமதி யாது?
1) ரூபா 580 2) ரூபா 250
3) ரூபா 620 4) ரூபா 520 (.............)

37) பட்டியல் விலையானது எது சேர்ந்த விலையாகக் காணப்படும்?
1) கொள்விலை + இலாபம்
2) விற்பனை விலை + இலாபம்
3) உற்பத்திச் செலவு + இலாபம்
4) விற்பனைவிலை + கொள்விலை (.............)

38) விற்பனை நாளேட்டில் ................. பதியப்படும்
1) காசு விற்பனை 2) நிலையான் சொத்து கடன்விற்பனை
3) நாளாந்த கடன்விற்பனை 4) காசோலை மூலம் விற்பனை (.............)

39) விற்பனை நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது ...... பதியப்படும்
1) விற்பனைக் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்பட்டோர் கணக்கின் வரவுப்பக்கம்
3) விற்பனைக் கணக்கின் செலவுப்பக்கம்
4) கடன்பட்டோர் கணக்கின் செலவுப்பக்கம் (.............)

40) கொள்வனவு நாளேட்டில் ........... பதியப்படும்
1) காசோலை மூலம் கொள்வனவு
2) காசுக் கொள்வனவு
3) நிலையான சொத்து கடன்கொள்வனவு
4) மீள் விற்பனைக்கான பொருட்களின் கடன்கொள்வனவு (..............)

41) கொள்வனவு நாளேட்டில் இறுதி மொத்தத் தொகையானது
1) கொள்வனவுக் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்கொடுத்தோர் கணக்கின் செலவுப்பக்கம்
3) கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப்பக்கம்
4) கொள்வனவுக் கணக்கின் செலவுப்பக்கம் (..............)

42) உட்திரும்பல் நாளேட்டில் ......... பதியப்படும்
1) காசுக்கு விற்ற தளபாடம் திரும்பிவரின்
2) கடனுக்கு விற்ற சரக்கிருப்பு திரும்பிவரின்
3) காசுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின்
4) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின் (..............)

43) உட்திரும்பல் நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது .... பதியப்படும்
1) உட்திரும்பல் கணக்கின் செலவுப் பக்கம்
2) உட்திரும்பல் கணக்கின் வரவுப் பக்கம்
3) கடன்பட்டோர் கணக்கின் செலவுப் பக்கம்
4) கடன்பட்டோர் கணக்கின் வரவுப் பக்கம் (..............)

44) வெளித்திரும்பல் நாளேட்டில் .......... பதியப்படும்
1) காசுக்கு கொள்வனவு செய்த தளபாடம் திருப்பியனுப்பின்
2) கடனுக்கு விற்ற சரக்கிருப்பு திரும்பிவரின்
3) காசுக்கு விற்பனை செய்த சரக்கிருப்பு திரும்பிவரின்
4) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின் (..............)

45) வெளித்திரும்பல் நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது ... பதியப்படும்
1) கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்கொடுத்தோர் கணக்கின் செலவுப்பக்கம்
3) வெளித்திரும்பல் கணக்கின் வரவுப்பக்கம்
4) வெளித்திரும்பல் கணக்கின் செலவுப்பக்கம் (..............)

46) சில்லறைக்காசாளன் தலைமைக்காசாளனிடமிருந்து ஆரம்பத்தில் பெற்ற தொகை 9000 ரூபா சில்லறைக்காசாளன் குறிப்பிட்ட காலப்பகுதியில் செலவிடப்பட்ட தொகை 640 ரூபா எனின் கட்டுநிதி மீளளிப்பு இடம்பெறும் தொகை
1) 640 ரூபா
2) 8360 ரூபா
3) 9640 ரூபா
4) 9000 ரூபா (..............)

47) பொதுத் தினசேரியில் பதிவிடப்படும் கொடுக்கல் வாங்கல்
1) ஆரம்பப் பதிவு
2) செம்மையாக்கல்கள்
3) மூடும் பதிவு
4) மேற்கூறிய அனைத்தும் (..............)

48) பல இன பேரேட்டுக் கணக்குகளும் உள்ளடங்கிய ஓர் தொகுதி
1) மூலப்பதிவேடு
2) பேரேட்டுக் கணக்கு
3) பேரேடு
4) பொதுப்பேரேடு (..............)

49) பேரேட்டின் வகைகள்
1) துணைப் பேரேடு, பொதுப் பேரேடு
2) விற்பனைப் பேரேடு, கொள்வனவுப் பேரேடு
3) வருமானப் பேரேடு, செலவினப் பேரேடு
4) சொத்துப் பேரேடு, பொறுப்பேரேடு (..............)

50) துணைப்பேரேட்டில் உள்ளடங்குபவை
1) விற்பனைப் பேரேடு, விற்பனை நாளேடு
2) விற்பனைப் பேரேடு, கொள்வனவுப் பேரேடு
3) வருமானப் பேரேடு, செலவினப் பேரேடு
4) உப பேரேடு,பொதுப் பேரேடு (..............)

51) விற்பனைப் பேரேட்டில் ........... பதியப்படும்
1) கடன்பட்டோர் பெயர்கள் மட்டும்
2) கடன்கொடுத்தோர் பெயர்கள் மட்டும்
3) விற்பனைக் கணக்குகள் மட்டும்
4) கொள்வனவுக் கணக்குகள் மட்டும் (..............)

52) மீள்விற்பனைக்கான கடன்கொள்வனவின் போது எழுகின்ற தனிநபர் கடன்கொடுத்தோர் பெயர்களை உள்ளடக்கும் பேரேடு
1) விற்பனைப் பேரேடு
2) விற்பனைக் கணக்கு
3) கொள்வனவுக் கணக்கு
4) கொள்வனவுப் பேரேடு (..............)

53) இரட்டைப் பதிவு விதி என்பது
1) கொடுக்கல் வாங்கலுக்கு வரவுப் பதிவுக்கு சமமான செலவுப் பதிவு ஒன்று இடல்வேண்டும்.
2) கொடுக்கல் வாங்கலுக்கு வரவுப் பதிவுக்கு சமமான செலவுப் பதிவு இடல் வேண்டும்.
3) கொடுக்கல் வாங்கலுக்கு இரண்டு பதிவுகள் இடல்வேண்டும்.
4) கொடுக்கல் வாங்கலுக்கு வரவில் அல்லது செலவில் இரண்டு பதிவு இடல் வேண்டும். (..............)

54) இரட்டைப்பதிவுத் தத்துவத்தின் தந்தை
1) இத்தாலி நாட்டைச் சேர்ந்த லூகா பெசியோலி
2) இஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த லூகாபெசியோலி
3) இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜோய்
4) இஸ்ரேலியநாட்டைச் சேர்ந்த ஜோய் (..............)

55) இரட்டைப் பதிவுத் தத்துவம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
1) 1449 ஆம் ஆண்டு
2) 1049 ஆம் ஆண்டு
3) 1494 ஆம் ஆண்டு
4) 1944 ஆம் ஆண்டு (..............)

56) கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவினை பூரணப்படுத்துவதற்காக பராமரித்துக் கொள்ளப்படுவது
1) பேரேடு
2) பேரேட்டுக் கணக்கு
3) மூலப்பதிவேடு
4) பரீட்சைமீதி (..............)

57) பேரேட்டுக் கணக்கின் சரியான வகைப்படுத்தல்
1) வருமானக் கணக்கு, செலவீனக் கணக்கு
2) மெய்க் கணக்கு, பேரளவுக் கணக்கு
3) பெயருள் கணக்கு, பெயரளவுக் கணக்கு
4) ஆட்குறிக்கும் கணக்கு, ஆட்குறியாக் கணக்கு (..............)

58) பெயருள் (ஆட்குறிக்கும்) கணக்கின் பிரிவுகள்
1) கடன்பட்டோர் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
2) வருமதியாளர் கணக்கு, வாடிக்கையாளர் கணக்கு
3) வழங்குனர் கணக்கு, விநியோகஸ்தர் கணக்கு
4) வருமதியாளர் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு (..............)

59) பெயரில் (ஆட்குறியாக்) கணக்கின் பிரிவுகள்
1) பேரளவுக் கணக்கு, பெயரளவுக் கணக்கு
2) பேரளவுக் கணக்கு, மெய்க் கணக்கு
3) கடன்பட்டோர் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
4) பெயருள் கணக்கு, மெய்க் கணக்கு (..............)

60) வருமானம், செலவீனம், நட்டம் என்பவற்றின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு
1) பெயரளவுக் கணக்கு
2) மெய்க்கணக்கு
3) பெயருள் கணக்கு
4) பெயரில் கணக்கு (..............)

61) சொத்துக்களின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு
1) பெயருள் கணக்கு
2) பேரளவுக் கணக்கு
3) பெயரளவுக் கணக்கு
4) மெய்க் கணக்கு (..............)

62) பெயரளவுக் கணக்கினை கொண்டுள்ள தொகுதி
1) தளபாடக் கணக்கு, சம்பளக் கணக்கு, விற்பனைக் கணக்கு
2) விற்பனைக் கணக்கு, விளம்பரக் கணக்கு, காப்புறுதிக் கணக்கு
3) மோட்டார்க் கணக்கு, காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
4) வங்கிக் கணக்கு, வங்கிக்கடன் கணக்கு, வங்கிக் கட்டணக்கணக்கு (..............)

63) மெய்க் கணக்கினை கொண்டுள்ள தொகுதி
1) மின்சாரக் கணக்கு, விளம்பரக் கணக்கு. காசுக் கணக்கு
2) பெற்றவாடகைக் கணக்கு, பெற்ற வட்டிக் கணக்கு, விற்பனைக் கணக்கு
3) மின்சாரக் கட்டுப்பணக் கணக்கு, காசுக் கணக்கு, பெறவேண்டிய வாடகைக் கணக்கு
4) காசுக் கணக்கு, காப்புறுதிக் கணக்கு, மின்சாரக் கட்டணக் கணக்கு (..............)

64) வரவு மீதியைக் கொண்டுள்ள கணக்குகள்
1) வாடகைக் கணக்கு, தளபாடக் கணக்கு, காசுக் கணக்கு
2) பெற்ற கழிவுக் கணக்கு, தளபாடக் கணக்கு, வங்கிக் கணக்கு
3) பெற்றவாடகைக் கணக்கு, மோட்டார் கணக்கு, விற்பனை கணக்கு
4) மின்சாரக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு (..............)

65) செலவு மீதியைக் கொண்டுள்ள கணக்குகள்
1) முதலீட்டுக் கணக்கு, காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
2) பெற்றவட்டிக் கணக்கு, பங்குலாபக் கணக்கு, விற்பனைக் கணக்கு
3) தளபாடக் கணக்கு, சம்பளக் கணக்கு, வங்கிக் கணக்கு
4) மோட்டார் கணக்கு, மின்சாரக் கணக்கு, பங்குலாபக் கணக்கு (..............)

66) வருமானக் கணக்குகளின் தொகுதி
1) பெற்றவாடகைக் கணக்கு, பெறவேண்டிய வாடகைக் கணக்கு
2) மோட்டார் திருத்தச் செலவுக் கணக்கு, சில்லறை வருமானக் கணக்கு
3) சம்பளக் கணக்கு, பெற்றதரகுக் கணக்கு
4) பெற்றவட்டிக் கணக்கு, பெற்றவாடகைக் கணக்கு (..............)

67) செலவீனக் கணக்குகளின் தொகுதி
1) காப்புறுதிக் கட்டுப்பணக் கணக்கு, சம்பளக் கணக்கு
2) மின்சாரக் கணக்கு, மின்சார வைப்புக் கணக்கு
3) வங்கிக்கூலிக் கணக்கு, இறைவரிக் கணக்கு
4) காசாளன் பிணைப்பணக் கணக்கு, காசோலைப் புத்தகக் கணக்கு (..............)

68) சொத்துக் கணக்குகளின் தொகுதி
1) மோட்டார்ப் பெறுமானத் தேய்வுக் கணக்கு, தளபாடக் கணக்கு
2) வங்கிக்கடன் கணக்கு, வருமதி உண்டியல் கணக்கு
3) சென்மதி உண்டியல் கணக்கு, காசுக் கணக்கு
4) சேமிப்பு சான்றிதழ் கணக்கு, நன்மதிப்புக்கணக்கு (..............)

69) பொறுப்புக் கணக்குகளின் தொகுதி
1) அட்டுறு செலவுகள் கணக்கு, முற்பணமாகப் பெற்ற கடன்கணக்கு
2) பெறவேண்டிய வாடகைக் கணக்கு, பெற்றவாடகைக் கணக்கு
3) மின்சார வைப்புப்பணக் கணக்கு, மின்சாரக் கணக்கு
4) காசுக் கணக்கு, வங்கிக்கூலிக் கணக்கு (..............)

70) உடமைக் கணக்குகளின் தொகுதி
1) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, பங்குலாபக் கணக்கு
2) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு
3) மூலதனக் கணக்கு, தேறியலாபக் கணக்கு, பற்றுக் கணக்கு
4) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, பற்றுக் கணக்கு (..............)

71) மூல ஆவணம், மூலப்பதிவேடு, பேரேட்டுக் கணக்கு இவற்றின் தொடர்ச்சியாகத் தயாரிக்கப்படுவது
1) நாளேடு 2) தொங்கல் கணக்கு
3) நிதிக்கூற்றுக்கள் 4) பரீட்சைமீதி (.............)

72) பரீட்சைமீதியின் வரவுப்பக்கத்தில் ...... பதியப்படும்
1) சொத்து, பொறுப்பு 2) சொத்து செலவீனம்
3) வருமானம், செலவீனம் 4) சொத்து வருமானம் (.............)

73) பரீட்சை மீதியின் வரவுப்பக்கத்தில் ..... பதியப்படும்
1) சொத்து, வருமானம் 2) சொத்து, பொறுப்பு
3) பொறுப்பு, வருமானம் 4) பொறுப்பு, செலவீனம் (.............)

74) பரீட்சை மீதி சமப்படும் போது எடுக்கும் முடிவு
1) முழுவதும் பதிந்தது சரியானது
2) எந்தவித வழுவும் இல்லை
3) ஓரளவு இரட்டைப் பதிவு முறை பின்பற்றப்பட்டுள்ளது.
4) 100 வீதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பதிவு இடம்பெற்றுள்ளது (.............)

75) கடன் விற்பனைக்கான இரட்டைப் பதிவு
1) கடன்பட்டோர் கணக்கு வரவு விற்பனைக் கணக்கு செலவு
2) விற்பனைக் கணக்கு வரவு கடன்பட்டோர் கணக்கு செலவு
3) காசுக் கணக்கு வரவு விற்பனைக் கணக்கு செலவு
4) காசுக் கணக்கு வரவு கடன்பட்டோர் கணக்கு செலவு (.............)

76) கடன்கொள்வனவிற்கான இரட்டைப் பதிவு
1) கொள்வனவுக் கணக்கு வரவு வாடிக்கையாளர் கணக்கு செலவு
2) காசுக் கணக்கு வரவு கடன்கொள்வனவுக் கணக்கு செலவு
3) வழங்குனர் கணக்கு வரவு கொள்வனவுக் கணக்கு செலவு
4) கொள்வனவுக் கணக்கு வரவு சென்மதியாளர் கணக்கு செலவு (.............)

77) உட்திரும்பலுக்கான இரட்டைப் பதிவு
1) உட்திரும்பல் கணக்கு வரவு விற்பனைக் கணக்கு செலவு
2) விற்பனைக் கணக்கு வரவு உட்திரும்பல் கணக்கு செலவு
3) உட்திரும்பல் கணக்கு வரவு வருமதியாளர் கணக்கு செலவு
4) வருமதியாளர் கணக்கு வரவு உட்திரும்பல் கணக்கு செலவு (.............)

78) வெளித்திரும்பலுக்கான இரட்டைப் பதிவு
1) வெளித்திரும்பல் கணக்கு வரவு கடன்பட்டோர் கணக்கு செலவு
2) வெளித்திரும்பல் கணக்கு வரவு கடன்கொடுத்தோர் கணக்கு செலவு
3) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வெளித்திரும்பல் கணக்கு செலவு
4) கடன்பட்டோர் கணக்கு வரவு வெளித்திரும்பல் கணக்கு செலவு (.............)

79) கொடுத்தகழிவுக்கான இரட்டைப்பதிவு
1) கடன்பட்டோர் கணக்கு வரவு கொடுத்தகழிவுக் கணக்கு செலவு
2) கொடுத்தகழிவுக் கணக்கு வரவு கடன்பட்டோர் கணக்கு செலவ
3) கொடுத்தகழிவுக் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு
4) கொடுத்தகழிவுக் கணக்கு செலவு வங்கிக் கணக்கு (.............)

80) காசுக்கழிவானது
1) கடன்விற்பனையின் போது வழங்கப்படுகின்றது
2) கடன்கொள்வனவின் போது வழங்கப்படுகின்றது
3) பணக்கொடுக்கல் வாங்கலின்போது வழங்கப்படுகின்றது
4) பணக்கொடுக்கல் வாங்கலை விரைவுபடுத்த கையாளப்படுகின்றது (.............)

81) பெற்றகழிவுக்கான இரட்டைப் பதிவு
1) காசுக் கணக்கு வரவு பெற்றகழிவுக் கணக்கு செலவு
2) பெற்றகழிவுக் கணக்கு வரவு கடன்கொடுத்தோர் கணக்கு செலவு
3) பெற்றகழிவுக் கணக்கு செலவு காசுக் கணக்கு செலவு
4) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு பெற்ற கழிவுக் கணக்கு செலவு (.............)

82) வியாபாரக் கழிவுக்கான இரட்டைப்பதிவு
1) காசுக் கணக்கு வரவு வியாபாரக் கழிவுக் கணக்கு செலவு
2) பதிவு இடம்பெறுவதில்லை
3) வியாபாரக்கழிவுக் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு
4) காசுக் கணக்கு வரவு விற்பனைக் கணக்கு செலவு (.............)

83) முற்பணம் என்பது
1) சொத்து 2) வருமானம்
3) செலவீனம் 4) கூறமுடியாது (.............)

84) நிறுவன உண்மையான இலாபமாகக் கருதப்படுவது
1) தேறியலாபம் 2) மொத்த இலாபம்
3) மிகைலாபம் 4) உண்மை இலாபம்

85) மொத்த இலாபம் பின்வருமாறு பெற்றுக்கொள்ளப்படும்
1) விற்க இருந்த சரக்கிருப்ப - விற்பனை
2) விற்பனைக்கிரயம் - விற்க இருந்த சரக்கிருப்பு
3) தேறிய விற்பனை - விற்பனைக் கிரயம்
4) விற்பனை - விற்பனைக் கிரயம்

86) இறுதி இருப்புக்கான நாட்குறிப்புப் பதிவு
1) வியாபாரக் கணக்கு வரவு இறுதி இருப்புக் கணக்கு செலவு
2) வியாபாரக் கணக்கு வரவு ஐந்தொகை கணக்கு செலவு
3) வியாபாரக் கணக்கு வரவு கொள்வனவுக் கணக்கு செலவு
4) இறுதி இருப்புக் கணக்கு வரவு வியாபாரக் கணக்கு கணக்கு செலவு

87) கொடுக்க வேண்டிய செலவுக்கான நாட்குறிப்புப் பதிவு
1) செலவினக் கணக்கு வரவு
கொடுக்கவேண்டிய செலவுக் கணக்கு செலவு
2) கொடுக்கவேண்டிய செலவுக் கணக்கு வரவு
செலவினக் கணக்கு செலவு
3) கொடுக்கவேண்டிய செலவுக் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு
4) கொடுக்கவேண்டிய செலவுக் கணக்கு வரவு
அட்டுறு செலவுகள் கணக்கு செலவு

88) முற்பணமாக செலுத்தப்பட்ட செலவீனத்துக்கான நாட்குறிப்புப்பதிவு
1) முற்பணமாக செலுத்தப்பட்ட செலவீனக் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு
2) காசுக் கணக்கு வரவு
முற்பணமாக செலுத்தப்பட்ட செலவீனக் கணக்கு செலவு
3) செலவீனக் கணக்கு வரவு
முற்பணமாக செலுத்தப்பட்ட செலவீனக் கணக்கு செலவு
4) முற்பணமாக செலுத்தப்பட்ட செலவீனக் கணக்கு வரவு
செலவீனக் கணக்கு செலவு.

89) பெறவேண்டிய வருமானத்திற்கான நாட்குறிப்புப் பதிவானது
1) பெறவேண்டிய வருமானக் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு
2) காசுக் கணக்கு வரவு
பெறவேண்டிய வருமானக் கணக்கு செலவு
3) பெறவேண்டிய வருமானக் கணக்கு வரவு
பெற்றவருமானக் கணக்கு செலவு
4) பெற்றவருமானக் கணக்கு வரவு
பெறவேண்டிய வருமானக் கணக்கு செலவு

90) முற்பணமாக பெற்றுக்கொண்ட வருமானத்திற்கான நாட்குறிப்புப்பதிவு
1) பெற்றவருமானக் கணக்கு வரவு
முற்பணமாக பெற்றுக்கொண்ட வருமானக் கணக்கு செலவு
2) முற்பணமாக பெற்றுக்கொண்ட வருமானக் கணக்கு வரவு
பெற்றவருமானக் கணக்கு செலவு
3) காசுக் கணக்கு வரவு
பெற்றவருமானக் கணக்கு செலவு
4) காசுக் கணக்கு வரவு
முற்பணமாக பெற்றுக்கொண்ட வருமானக் கணக்கு செலவு

91) காசுப் பற்றுக்கான நாட்குறிப்புப்பதிவு
1) காசுக் கணக்கு வரவு பற்றுக் கணக்கு செலவு
2) பற்றுக் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு
3) பற்றுக் கணக்கு வரவு கொள்வனவுக் கணக்கு செலவு
4) மூலதனக் கணக்கு வரவு பற்றுக் கணக்கு செலவு

92) பொருள்பற்றுக்கான நாட்குறிப்புப்பதிவு
1) பற்றுக் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு
2) கொள்வனவுக் கணக்கு வரவு பற்றுக் கணக்கு செலவு
3) பற்றுக் கணக்கு வரவு கொள்வனவுக் கணக்கு செலவு
4) பற்றுக் கணக்கு வரவு மூலதனக் கணக்கு செலவு

93) அறவிடமுடியாக் கடனுக்கான நாட்குறிப்புப் பதிவானது
1) அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு
அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு
2) அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு
இலாபநட்டக் கணக்கு செலவு
3) இலாபநட்டக் கணக்கு வரவு
அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு
4) அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு
கடன்பட்டோர் கணக்கு செலவு

94) அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டிற்கான நாட்குறிப்புப் பதிவு
1) அளவிடமுடியாக் கடன் கணக்கு வரவு
அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு
2) அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு
கடன்பட்டோர் கணக்கு செலவு
3) அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு
இலாபநட்டக் கணக்கு செலவு
4) இலாபநட்டக் கணக்கு வரவு
அறவிடமுடியாக் கடன் கணக்கு செலவு

95) பெறுமானத்தேய்விற்கான நாட்குறிப்புப் பதிவானது (பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கினை பராமரிக்காத போது)
1) உரிய சொத்து பெறுமானத் தேய்வு கணக்கு வரவு
உரிய சொத்து பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு கணக்கு செலவு
2) உரிய சொத்து பெறுமானத்தேய்வு கணக்கு வரவு
உரிய சொத்து பெறுமானத்தேய்வு கணக்கு செலவு
3) உரிய சொத்துக் கணக்கு வரவு
உரிய சொத்து பெறுமானத்தேய்வு கணக்கு செலவு
4) உரிய சொத்து பெறுமானத்தேய்வு கணக்கு வரவு
உரிய சொத்துக் கணக்கு செலவு

96) பெறுமானத் தேய்விற்கான நாட்குறிப்புப் பதிவானது
1) உரிய சொத்து பெறுமானத் தேய்வு கணக்கு வரவு
உரிய சொத்துக் கணக்கு செலவு
2) உரிய சொத்து பெறுமானத் தேய்வு கணக்கு வரவு
உரிய சொத்து பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு செலவு
3) உரிய சொத்து கணக்கு வரவு
உரிய சொத்து பெறுமானத்தேய்வு கணக்கு செலவு
4) உரிய சொத்துக் கணக்கு வரவு
உரிய சொத்து பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு செலவு

97) சொத்தின் வகைகளாக கருதக்கூடியது
1) உருவமுள்ள சொத்து, உருவமில்லாத சொத்து
2) நிலையான சொத்து, நடைமுறைச் சொத்து
3) அருவச்சொத்து, கற்பனைச் சொத்து
4) நிலையான சொத்து, அருவச் சொத்து

98) உருவமுள்ள சொத்தின் வகைகள்
1) நிலையான சொத்து, நடைமுறைச் சொத்து
2) அருவச்சொத்து, கற்பனைச் சொத்து
3) நிலையான சொத்து, அருவச் சொத்து
4) நடைமுறைச்சொத்து, கற்பனைச் சொத்து.

**இவ் வினாக்களுக்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை (22.12.2012) வெளிவரும்**

# இந்திய இராணுவத்தின் ஆயுதங்கள் மியான்மருக்கு எப்படிச் சென்றன?

## தீவிரமாக இடம்பெறும் விசாரணை



(புதுடில்லி)

சுவீடன் நாட்டிடமிருந்து, இந்திய இராணுவத்துக்காக வாங்கப்பட்ட ஆயுதங்கள் மியான்மர் இராணுவத்திடம் சென்றது எப்படி என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக இந்தியா கூறியுள்ளது. மியான்மர் நாட்டுக்கு (முன்பு பர்மா) ஆயுதம் ஏற்றுமதி செய்ய தடை விதித்து, ஐரோப்பிய யூனியன் கடந்த 1996இல் ஆணை பிறப்பித்தது. அதிலிருந்து ஐரோப்பிய யூனியன் நாடுகள் அந்நாட்டுடன் ஆயுத வர்த்தகம் வைத்துக்கொள்வதில்லை.

இந்நிலையில், சுவீடன் நாட்டிலிருந்து இந்திய இராணுவத்துககாக வாங்கப்பட்ட ஆயுதங்கள் மியான்மர் நாட்டு இராணுவத்திடம் இருப்பதாக, சுவீடன் நாட்டு ஊடகம் ஒன்றில் கடந்த வாரம் படத்துடன் செய்தி வெளியானது. கார்ல்கஸ்டா.:.ப் எம்-3 ரக பீரங்கி எதிர்ப்பு துப்பாக்கி மற்றும் படைக்கருவிகளின் படங்கள் அதில் பிரசுரமாகி இருந்தன. இதையடுத்து, இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட அந்த ஆயுதங்கள் மியான்மருக்கு எப்படிச் சென்றது என்ற கேள்வி அங்கு எழுந்தது.

அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் இப்பிரச்சினை எழுப்பப்பட்டது. அதற்கு கடந்த வியாழக்கிழமை பதிலளித்த வர்த்தகத் துறை அமைச்சர் ஈவா பஜோர்லிங், சுவீடனின் ஆயுதப்பரவல் தடை மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் ஆணையம், இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட ஆயுதங்கள் மியான்மர் இராணுவத்திடம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தனக்கு தகவல் தெரிவித்தது என்று விளக்கமளித்தார்.

பின்னர் ஸ்டாக்ஹோமில் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், ஐரோப்பிய யூனியனின் தடையை மீறி சுவீடன் தயாரிப்பு ஆயுதங்கள் மியான்மருக்கு எப்படிச் சென்றன என்று தெளிவுபடுத்துமாறு, இந்தியாவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிலையில், இதுபற்றி சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில், சுவீடன் அரசு இந்தப் பிரச்சினையை இந்தியாவிடம் எழுப்பியுள்ளது. நாம் ஒருபோதும் மியான்மருக்கு ஆயுதம் அனுப்ப வில்லை. எனினும், நமக்கான சுவீடன் ஆயுதம் மியான்மருக்கு எப்படி கிடைத்தது என்பது குறித்து விசாரித்து வருகிறோம் என்றார்.

# சந்திராயன் இரண்டினை 2014இல் ஏவத்திட்டம்

(புதுடில்லி)

சந்திராயன் 2 செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்படுவதற்கான ஆயத்தப் பணிகள் தீவிரமடைந்துள்ளது என இஸ்ரோ தலைவர் ராதா கிருஷணன் கூறியுள்ளார்.

சென்னையில் நடை பெற்ற விழா ஒன்றில் கலந்து கொண்டு பேசிய இஸ்ரோ தலைவர் ராதா கிருஷணன், வரும் 2014ஆம் ஆண்டில் சந்திராயன் 2 செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்படும்.

அதற்கான ஆயத்தப் பணிகளை விஞ்ஞானிகள் மும்முரமாக செய்து வருகின்றனர்.

சந்திராயன் 1 முழுக்க முழுக்க இந்தியாவின் தயாரிப்பில் உருவானது என்றும், அதே போன்று இப்போது சந்திராயன் 2 உம் உருவாகும் எனக் கூறினார்.

வரும் பெப்ரவரி மாதத்தில், பி.எஸ்.எல்.வி.சி 20 செயற்கை கோளும் ஜிஎஸ்எல்வி டி 5 செயற்கைகோளும் ஏவப்படும் என்றும் அதோடு செவ்வாய் கிரகத்தை சுற்றி ஆய்வு செய்யும் செயற்கைகோளும் திட்டமிடப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இராணுவ அதிகாரிகளுக்கு பணிச்சுமையால் மனஅழுத்தம்


(புதுடில்லி)

இராணுவத்தில் உள்ள, இளம் அதிகாரிகளுக்கு, பணிச் சுமையால் ஏற்படும் மன அழுத்தத்தை போக்குவது குறித்து ஆய்வு செய்து, அறிக்கை தாக்கல் செய்யும்படி, இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டி.ஆர்.டி.ஓ.வுக்கு, இராணுவ அமைச்சர் அந்தோணி உத்தரவிட்டுள்ளார்.

டி.ஆர்.டி.ஓ. உயரதிகாரி செல்வமூர்த்தி கூறியதாவது; இராணுவ வீரர்கள் நீண்ட நாட்களாக, குடும்பத்தை பிரிந்து பணியாற்றுவதால், மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர். இதனால், பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இராணுவத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், வீரர்களுக்கும், தகராறு ஏற்படுகிறது.குறிப்பாக, இராணுவத்தில் அதிகாரிகளாக பணியாற்றும் இளைஞர்கள், தங்கள் பணியின் துவக்க காலத்தில், மன உளைச்சலால் பாதிக்கப்படுகின்றனர். இந்த



பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கவும், இதை தடுக்கவும், இதுகுறித்து, விரிவான ஆய்வு நடத்தி, அடுத்த மாதத்துக்குள் அறிக்கை தாக்கல் செய்யும்படி இராணுவ அமைச்சர் அந்தோணி உத்தரவிட்டுள்ளார்.



**பாகிஸ்தானுக்கு எதிரான போரில் உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி மற்றும் இராணுவத்தளபதி பிக்ரம் சிங்கை காணலாம்.**

# போலி கடவுச்சீட்டில் பிரான்ஸ்சென்ற யாழ். பொறியியலாளர் கைது

(சென்னை)


சென்னையில் இருந்து போலி கடவுச்சீட்டில் பிரான்ஸ் சென்ற பொறியியலாளரை அதிகாரிகள் சென்னைக்கு திருப்பி அனுப்பியதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணத்தை சேர்ந்த இந்திர குமார் 2006ஆம் ஆண்டு அகதியாக தமிழகம் வந்தார். இராமேஸ்வரம் மண்டபம் முகா மில் தங்கினார். பின்னர் சாப்ட் வேர் இன்ஜினியரிங் முடித்த இவர் பிரான்ஸ் செல்ல முடிவு செய்தார்.

ஏஜென்ட் மூலம் சென்னை கே.கே.நகரில் வசிப்பவர் போல் போலி கடவுச்சீட்டு வாங்கி, பிரான்ஸ் விசா' பெற்றார். கடந்த 14ஆம் திகதி சென்னையில் இருந்து அபுதாபி வழியாக பாரீஸ் சென்றார்.

போலி கடவுச்சீட்டில் இந்திர குமார் வந்ததை கண்டுபிடித்த குடியுரிமை அதிகாரிகள் அவரை சென்னைக்கு திருப்பி அனுப்பினர். நேற்று முன்தினம் காலை சென்னை வந்த இந்திர குமார், அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு விமானநிலைய பொலிஸில் ஒப்ப டைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

இந்தியச் செய்திகள்

# ஜனாதிபதி மாளிகையில் ஹெலிகொப்டர் தளம்



(புதுடில்லி)

தலைநகர் புதுடில்லியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் ஜனாதிபதி மாளிகையில் ஹெலிகொப்டர் தளம் அமைக்க மத்திய அரசு முடிவு

டில்லியில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வி.வி.ஐ.பி.க்கள் பயணம் செய்யும் போது அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. குறிப்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் விமான நிலையத்துக்கு செல்லும் போதும் வரும் போதும் அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் உண்டாகிறது. வி.வி.ஐ. பி.க்கள் வருகையால் பொது மக்கள் எரிச்சல் அடையும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

இதற்கு முற்றுப் புள்ளி வைக்க மத்திய அரசு புதிய திட்டம் ஒன்றை தீட்டியுள்ளது. அதன்படி ஜனாதிபதி மாளிகையில் புதிய ஹெலிகொப்டர் தளம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. விமானப்படை கட்டுப்பாட்டில் இந்த ஹெலிகொப்டர் தளம் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் ஹெலகொப்டர் தளம் அமைந்ததும், வி.வி.ஐ. பி.க்கள் அனைவரும் ஹெலிகொப்டரில் ஏறி விமான நிலையத்துக்கு செல்வார்கள். இதனால் டெல்லி நகருக்குள் போக்குவரத்து நெரிசல் கணிசமாக குறைந்து விடும். சமீப காலமாக வெளி நாடுகளில் இருந்து வரும் முக்கிய பிரமுகர்கள் மகாத்மா காந்தி நினைவிடம் உள்ள ராஜ் காட்டுக்கு தவறாமல் செல்கிறார்கள். இதனால் அந்த பகுதியிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படு கிறது. இதை கருத்தில் கொண்டு காந்தி நினைவிடம அருகேயும் ஒரு ஹெலகொப்டர் தளம் கட்ட மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

# வெளிப்படையான ஆட்சியை தமிழக அரசு அளிக்கிறது

## முதல்வர் ஜெயலலிதா தெரிவிப்பு

அப்பழுக்கற்ற, வெளிப்படையான நல்லாட்சியை தமிழக அரசு அளித்து வருவதாக முதல்வர் ஜெயலலிதா நேற்று தெரிவித்தார் சென்னையில் நடைபெறும் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகளுடனான மாநாட்டைத தொடக்கி வைத்துப் பேசினார் முதல்வர் ஜெயலலிதா. மாநில மக்களுக்கு அப்பழுக்கற்ற, வெளிப்படையான, கடமையுடன், பொறுப்புணர்ந்து செயற்படும் ஆட்சியை அளித்து வருகிறேன். மக்களுக்குத் தேவையான உதவிகள் உடனடியாக கிடைக்க வழிவகைகாண வேண்டும்.

நல்ல ஆட்சியைத் தர வேண்டும் என்று நமக்கு நாமே ஒரு இலட்சியத்தை வகுத்துக் கொண்டு, அரசை முன்னின்று நடத்துகிறோம். மாநிலத்தின் உட் கட்டமைப்புகளை சரியாக செய்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதே நமது இலக்கு. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டு வந்த நிலையில், எனது அரசின் சிறப்பான நடவடிக்கையால், 2012ஆம் ஆண்டு ஒரு தமிழக மீனவரும் கொல்லப்படவில்லை என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். இதே பாதுகாப்பு நிலையை தொடர்ந்து பேண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் 2015இல் செயற்படத் தொடங்கும். மழை நீர் சேகரிப்பு போல, பொதுமக்களும் சூரி ஒளியில் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிகாரத்தைப் பயன்படுத்தி சூட்டுச் சம்பவங்களுக்கு முடிவு

## – ஜனாதிபதி ஒபாமா உறுதியளிப்பு

(நியூடவுன்)

தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி அமெரிக்காவில் நடக்கும் துப்பாக்கிச்சூட்டுச் சம்ப வங்களுக்கு ஒரு முடிவு கட்டப் போவதாக அதிபர் ஒபாமா உறுதி அளித்துள்ளார். அமெ ரிக்காவில் உள்ள நியூ இங்கி லந்து மாகாணத்தில் உள்ள கனக் டிகட் என்ற இடத்தில் உள்ள சாண்டி ஹுக் ஆரம்ப பள்ளியில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் பலி யான 20 குழந்தைகளின் பெற் றோரை அதிபர் ஒபாமா நேற்று முன்தினம் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்த துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களுக்காக நடத்தப்பட்ட பிரார்த்தனை கூட் டத்திலும் அவர் கலந்து கொண் டார். அப்போது அவர் பேசிய தாவது, இது போன்ற துயர சம பவங்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டும். அவற்றை முடிவுக்கு கொண்டு வர நாம் மாற வேண் டும். இந்த துயரச் சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பத் தாருக்கு ஆதரவாக அமெரிக்க மக்கள் உள்ளனர். உங்கள் துய ரம் இந்த உலகத்தையும் தாக்கி யுள்ளது. நாங்களும் உங்களின் இழப்புக்காக கண்ணீர் சிந்தி னோம். நியூடவுன் நீங்கள் தனி யாக இல்லை. நாங்கள் அனை வரும் இருக்கிறோம். நான் அதி பரான பிறகு இதுபோன்ற துப் பாக்கிச்சூட்டில் பலியானவர் களின் குடும்பத்தாருக்கு ஆறு தல் சொல்வது இது நான் காவது முறையாகும். மேலும் நாடு முழுவதும் ஆங்காங்கே துப் பாக்கிச்சூடு நடந்து கொண்டி ருக்கிறது. இதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது.




இது போன்ற சம்பவங்கள் இனியும் நடக்காமல் இருக்க எனக்குள்ள அனைத்து அதிகா ரத்தையும் பயன்படுத்துவேன் ஏன்றார்.

உலகச் செய்திகள்

# திடீரென மயங்கி விழுந்த ஹிலாரி கிளின்டன்

(வோஷிங்டன்)



அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் திடீர் என்று மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கடந்த 4 ஆண்டுகளில் 112இற்கும் மேற்பட்ட நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ளார். தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் ஹிலாரி நேற்று முன்தினம் திடீர் என்று மயங்கி விழுந்தார். அவரது வயிற்றில் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டதால் மயங்கியதாக மருத்துவர்கள் தெரிவித்ததோடு உடனடியாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. உடல் நலம் சரியாகும் வரை அவர் வீட்டில் இருந்தே பணிபுரிவார் என்று கூறப்படுகிறது. அவரை தினமும் மருத்துவர்கள் கண்காணித்து வருவார்கள் என்று தெரிகிறது. மருத்துவர்களின் பரிந்துரையின்பேரில் தான் அவர் வீட்டில் இருந்தே பணி புரிகிறார். அவர் விரைவில் அலுவலகத்திற்கு செல்ல ஆர்வமாக உள்ளதாக அதிகாரிகள் வட்டாரம் தெரிவித்துள்ளன. ஹிலாரி ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்து விட்டு கடந்த வாரம் அமெரிக்கா திரும்பியதும் அவரது வயிற்றில் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் கடந்த வாரம் பணி யாற்றவில்லை. இந்த பிரச்சினையால் அவர் தனது வட ஆபிரிக்க பயணத்தை இரத்து செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


# நைஜீரிய ஹெலிவிபத்தில் மாகாண ஆளுநர் பலி



ஆபிரிக்கா நாடான நைஜீரியா வில் கடுனா மாகாண ஆளுநராக இருந்தவர் பாட்ரிக் இப்ராகிம் யகோவா. இவர் தென்மேற்கு பயெல்கா மாகாணத்தில் உள்ள போர்ட் ஹார்கோர்ட் என்ற இடத் துக்கு கடற்படை ஹெலிகொப்ட ரில் புறப்பட்டு சென்றார். அவ ருடன் தேசிய பாதுகாப்பு முன் னாள் ஆலோசகர் ஜெனரல் ஆண்ட்ரூ அஷாஷி உள்பட அரசு அதிகாரிகளும் சென்றனர்.

இவர்களது ஹெலிகொப்டர் பயெல்காவில் உள்ள நெம்பே என்ற இடத்தில் சென்றபோது தரையில் விழுந்து நொருங்கியது. இதனால் ஹெலிகொப்டர் தீப்பிடித்து எரிந்தது. அச்சம்பவத்தில் ஆளுநரான பாட்ரிக் இப்ராகிம் யகோவா உயிரிழந்தார். அவருடன் தேசிய பாதுகாப்பு முன்னாள் ஆலோசகர் ஆண்ட்ரூ அஷாஷியும் பலியானார். விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது

# குறுங்கோளை நெருங்கிச் சென்று படம் பிடித்துள்ள சீன விண்கலம்



70 இலட்சம் கி.மீ. தூரத்துக்கு அப்பால் உள்ள குறுங்கோள் ஒன்றின் புகைப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளது சீனா வின் சாங்கி-2 விண்வெளி ஓடம். விண்வெளித் துறையில் இது ஒரு மிகப்பெரிய சாதனை யாகக் கருதப்படுகிறது. இதற்கு முன், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் ஆகியவை மட்டுமே விண்வெளி ஓடங் களைச் செலுத்தி, இது போன்ற குறுங்கோள் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளன.

சீன அறிவியல், தொழில் நுட்ப தேசிய பாதுகாப்பு அமைப்பு சார்பில் அனுப்பப்பட்ட சாங்கி -2என்ற ஆளில்லாத விண் வெளி ஓடம், சந்திரனை பல கோணங்களில் புகைப்படம் எடுத்து அனுப்பியது. அதன் பின், சூரியனைச் சுற்றி வரும் குறுங் கோள்களை புகைப்படம் எடுக் கும் பணியில் அந்த விண்வெளி ஓடத்தை சீனா ஈடுபடுத்தியது.

இதில், பூமியிலிருந்து 70 இலட்சம் கி.மீ. தூரத்தில் சென்று கொண்டிருந்த "தெடாட்டிஸ்" என்ற குறுங்கோளை, சீன விண் வெளி ஓடம் டிசம்பர் 13ஆம் திகதி புகைப்படம் எடுத்து அனுப் பியது. குறுங்கோளிலிருந்து 3.2 கி.மீ தூரத்தில் இருந்தபடி எடுக்கப்பட்ட அந்தப் படங்கள் துல்லியமாக இருந்தன. வரும் ஜனவரிக்குள் பூமியிலிருந்து ஒரு கோடி கி.மீ. தூரம் வரை உள்ளவற்றை புகைப்படம் எடுக் கும் பணியில் சாங்கி-2 ஈடுபடுத் தப்படும் என்று சீன விண்வெளி ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

2010 அக்டோபர் 1ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட சாங்கி-2 ஓடம், சந்திரனைச் சுற்றி வந்து அதன் அனைத்துப் பகுதிகளையும் புகைப்படங்கள் எடுத்து அனுப்பியது. இப்போது 70 இலட்சம் கி.மீ. தூரத்துக்கு அப் பால் உள்ள குறுங்கோள் ஒன் றையும் புகைப்படம் எடுத்து அனுப்பியுள்ளது. இதன் மூலம், பிற கோள்களுக்குச் செல்லும் திறனுள்ள விண்வெளி ஓடங் களைச் சீனா பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

5 கி.மீ. தூரம் நீளமுள்ள தெடாட்டிஸ் குறுங்கோள், பூமி மீது மோதினால் கடும் அழிவு களை ஏற்படுத்திவிடும். எனி னும், இப்போது வெகுதூரத்தில் சுற்றிவருவதால், பூமியைத் தாக் கும் வாய்ப்பு மிகவும் குறைவு என்று விஞ்ஞானிகள் தெரிவிக் கின்றனர்.

# ஹிலாரியின் இடத்திற்கு கெர்ரி அடுத்தவாரம் பரிந்துரைப்பார் ஒபாமா

அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் பதவிக்கு செனட் டர் ஜோன் கெர்ரியை ஜனாதி பதி ஒபாமா பரிந்துரைக்க போவ தாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண் டன் ஓய்வு பெறுவதையடுத்து, அவரது பதவிக்கு செனட் வெளி விவகார குழுவின் தலைவராக் வும், மசாசுட்டஸ் செனட்டராகவும் இருக்கும் ஜோன் கெர்ரியை (வயது 69) ஜனாதிபதி ஒபாமா பரிந்துரைக்கவிருக்கிறார்.

தனக்கு பேருதவியாக உள்ள கெர்ரியை வெளிவிவகாரத் துறை அமைச்சராக அடுத்த வாரம் ஒபாமா பரிந்துரைப்பார் என்று தெரிகிறது.



ஒபாமாவின் பரிந்துரையை செனட் ஏற்றுக் கொண்டால் வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி கெர்ரி வெளிவிவகாரத் துறை அமைச்சராவார்.

# ஜப்பானில் ஆட்சி அமைக்கும் பழமைவாத ஜனநாயகக்கட்சி

(டோக்கியோ)



ஜப்பானில் நடந்த நாடாளுமன்ற தேர் தலுக்கு உடனடியாக முடிவுகள் அறிவிக் கப்பட்டன. இதில் மூன்று வருட காலம் எதிர்க்கட்சியாக செயற்பட்டு வந்த பழமை வாத சுதந்திர ஜனநாயக கட்சி மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் ஷின்சோ ஏப் இரண்டாவது முறையாக நாட்டை வழிநடத்தி செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

கடந்த 6 1/2 வருடங்களில், ஜப்பானின் ஏழாவது பிரதம மந் திரியாக இவர் இருப்பார் என்று சொல்லப்படுகிறது. இந்த வெற்றி சீனாவுடனான பிரச்சினையை அதிகப்படுத்தும் என எதிர் பார்க் கப்படுகிறது. பொருளாதாரத்தில் பின்னடைவும், தேர்தல் பிரச்சார வாக்குறுதிகளை நிறைவேற்றாமையும் ஆளும் ஜப்பான் ஜனநாயக கட்சியின் யாஷிஹிகோ நோடாவின் இந்த தோல்விக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது.

# வானொலி அறிவிப்பாளர்களே எனது சாவிற்கு காரணம்

## இந்திய தாதி கடிதத்தில் தெரிவிப்பு



ஜெசிந்தா

லண்டனில் தற்கொலை செய்து கொண்ட இந்திய தாதி ஜெசிந்தா, சாகும் முன் எழுதி வைத்த 3 கடிதங்கள் வெளியாகியுள்ளது. இதில், அவரது சாவுக்கு அவுஸ்ரேலிய ரேடியோ ஜாக்கிகளே காரணம் என்பது உறுதியாகியுள்ளது.

லண்டனில் ஜெசிந்தா சாகும் முன்பு எழுதிய 3 கடிதங்களை பொலிஸார் கைப்பற்றி விசாரித்து வருகின்றனர். இந்த க்டிதங்கள் குறித்து டெய்லி மெயில் பத்திரிகையில் வெளியான செய்தி வருமாறு:

ஜெசிந்தா 3 கடிதங்களை எழுதியுள்ளார். முதல் கடிதத்தில், ரேடியோ அறிவிப்பாளர்கள் பற்றி மிகவும் கோபத்துடன் குறிப் பிட்டு தனது சாவுக்கு அவர்களே காரணம் என கூறியுள்ளார். 2ஆவது கடிதத்தில் இளவரசி சிகிச்சை விவரங்கள் வெளியான விவ காரத்தில் மருத்துவமனை அதிகாரிகள் தன்னையும், இன்னொரு தாதியையும் தனிமைப்படுத்தி திட்டியதாக கூறப்பட்டுள்ளது. 3ஆவது கடிதத்தில் தனது உடலை சொந்த கிராமமான சிர்வாவில் அடக்கம் செய்ய வேண்டுமென எழுதியுள்ளார். இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# பசுபிக் கடலில் சூறாவளி குட்டித்தீவுகள் மூழ்கும் அபாயம்

பசுபிக் கடலில் உருவாகி யுள்ள சூறாவளி புயல், பிஜி தீவை மிக கடுமையாகத்தாக்கி உள்ளது.

பசுபிக் கடலில் மையம் கொண்டுள்ள புயலால் பிஜி தீவில் 300 கிலோமீற்றர் வேகத் தில் சூறாவளி காற்று வீசுகிறது. இதனால் அந்நாட்டின் விமான சேவை இரத்து செய்யப்பட் டுள்ளது.

புயல் வீசத்தொடங்கியதும் ஏராளமான மரங்கள் சாய்ந்து விட்டன. பெரும்பாலான பகு திகளில் மின் இணைப்பு துண்டிக கப்பட்டுவிட்டது.

இப்புயலுக்கு இதுவரையி லும் 4 பேர் பலியாகி உள்ள னர், 8 பேரை காணவில்லை.

புயலைத் தொடர்ந்து பலத்த மழை பெய்வதால் மலை பகுதி களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள் ளன. தாழ்வான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால மக்கள் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிஜி தீவை சுற்றியுள்ள குட்டித் தீவுகள் இந்தப் புயலால் மூழ்கும் அபாயம் உள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையத்தினர் தெரி வித்துள்ளனர்.

இந்த பயங்கர புயலை சமா ளிக்க தேவையான உதவிகளை வழங்கும் படி, பிரான்ஸ் மற்றும் நியூசிலாந்து நாடுகளின் உத வியை பிஜி தீவின் இராணுவத் தலைவர் வொரிக் பைனிமராமா கோரியுள்ளார்.

# பூநகரியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் துரிதம்

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள்



(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுக் காலை 10.00 மணிக்கு பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் ஆரம்பமான பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேசத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டிருக்கின்றன.

இதில் மீள்குடியேற்றம், மீள்குடியேறிய மக்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டம் தொடர்பாக ஆராயப்பட்டபோது இன்னமும் 3258 வரையான வீடுகள் தேவையாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து ஜெயபுரம் மக்கள் எதிர்கொள்ளும் மருத்துவப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அப்பகுதியில் சுற்றையல்கூறு மருத்துவமனையை அமைப்பதெனவும் அதுவரை நடமாடும் மருத்துவ சேவை யினை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டபோது கரியாலை நாகபடுவான்குளம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதன் காரணமாக முழுமையாக புனரமைக்கப்பட முடியாதுள்ளதாகவும் இதனால் குறிப்பிட்ட ஏக்கர் நெற்காணிகளுக்கு நீர் வழங்கமுடியாதுள்ளமையும் வெளிப்படுத்தப்பட்டது. அத்தோடு பூநகரிப் பிரதேசத்தில் புனரமைப்பிற்கு உட்படுத்தப்பட்டு வரும் பத்து சிறுகுளங்களின் பணிகளை துரிதப்படுத்துமாறும் மேலதிகமாக இரு குளங்களையும் புனரமைக்குமாறும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரால் அதிகாரிகளுக்கு பணிப்பு விடுக்கப்பட்டது.

முழங்காவில் கமநலசேவை நிலையத்தில் இயங்கிவரும் பொலிஸ் நிலையம் இடம்மாறறப்பட்டு 2013 ஆம் ஆண்டு முதலாம் திகதிக்குள் கமநல சேவை நிலையம் மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் பொலிஸாருக்கு பணிப்பு விடுத்தார்.

மேலும் மீன்பிடிப்படகுகளுக்கு எரிபொருள் மானியத்தினை பெறாத பயனாளிகளுக்கு அதனை வழங்க அதிகாரிகள் துரிதமாக செயற்பட வேண்டுமெனவும் அவர் பணித்தார். இதேவேளை முட்கொம்பன் பகுதியில் காட்டு மரங்கள் வெட்டப்படுவதை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினரால் பணிப்பு விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் குறித்தும் பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களை விரைவுபடுத்துவது குறித்தும், அரசகாணிகளை பகிர்ந்தளித்தல், காணி அனுமதிப பத்திரங்களை வழங்குதல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்தோடு, பாதுகாப்பு, மதுபாவனையைக் கட்டுப்படுத்தல் விவசாயச் செய்கையினை ஊக்குவித்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டதோடு மேலும் பல விடயங்களும் ஆராயப்பட்டு செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பான தீர்மானங்களும் எட்டப்பட்டன.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், பூநகரி பிரதேசசபைத் தலைவர் சிறீஸ்கந்தராசா, ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி கார்த்திகேயன் ஆகியோரும் மற்றும் பிரதேசசபைச் செயலாளரும், திணைக்களங்களின் தலைவர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

### அரசியல்....

அவுஸ்ரேலியா, இலங்கைக்கு ஆதரவு வழங்குமா? எனக் கேட்டதற்கு பதிலளித்த பொப் கார்,

கனடா மனித உரிமைகள் பற்றிய பிரச்சினை குறித்து இலங்கையுடன் பேசவேண்டும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மையப்படுத்தி இலங்கையுடன் கனடா பேச முடியும் என்றும் கூறினார்.

மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு குறித்த பிரச் சினைகளை பேசித் தீர்க்கும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் தாம் இந்தச் செயற்பாடுகளுக்கு எமது உதவித் திட்டங்கள் மூலம் உதவி வழங்குகின்றோம் எனவும் அவர் கூறினார்.

இலங்கையிலிருந்து அவுஸ்ரேலியாவுக்கு வருவோரில் பலர் பொருளாதார நோக்கில் புலம்பெயர்வோர் எனவும் அவர்களை 72 மணித்தியா லங்களில் திருப்பி அனுப்புவதற்கான கொள்கைத் தீர்மானங்களையும், அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துவிட்டோம் எனவும் பொப் கார் மேலும் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக அவுஸ்ரேலியா 20 மில்லியன் டொலர் உதவியை வழங்கும் என்றும் கல்விக்கான உதவியாக 34 மில்லியன் அவுஸ்ரேலிய டொலர்களை வழங்கும் என்றும் குறிப்பிட்டார்.

### உயர்நீதிமன்ற....

கள் வேறு திகதிகளுக்கு ஒத்திப் போடப்பட்டன. இதனிடையே,

சட்டத்தரணிகள் சங்க உபதலைவர் அனோமா குணதிலகவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப் போவதாக சட்டத்தரணிகள் சங்கத்தினர் அறிவித்தனர்.

நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவை பதவிநீக்க அரசு முன்னெடுத்துவரும் நடவடிக்கையை விமர்சித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியபோது, அத்தீர்மானத்துக்கு உடன்பட மறுத்திருந்தவர் அனோமா குணதிலக என்பது குறிப்பிடத்தக்கது.

### உளவியல்....

சுற்றுலாவுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். ஏனைய 3 பேர் க.பொ.த சாதாரணதரத் தேர்வு எழுதுவதால், இந்தச் சுற்றுலாவில் பங்கேற்கவில்லை. கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தமிழ்ப் பெண் படையினர் அனைவரும், உளவியல் பாதிப்புகளுக்கே உள்ளானதாக மருத்துவ கலாநிதி சிவதாஸ் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### மயிலங்காட்டில்...

செய்யும் போது அங்கே மண்டியிருந்த வெடி பொருள் ஒன்று வெடித்ததின் காரணமாக காயங்களுக்குள் ளாகியுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை யோகராசா (வயது-48) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் தனது வளவில் புதர் மண்டியிருந்த பகுதியை மண்வெடியினால் வெட்டிச் சீர்ப்படுத்தும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே புதரில் மறைந்திருந்த குறித்த வெடிபொருளின் மீது மண்வெட்டி பட்டபோது அது வெடித்துள்ளது. அத்துடன் கறையான் புற்று ஒன்றின் மறைவில் இருந்து இவர் மண் வெட்டியினால் கொத்தியதன் காரணமாக வெடி பொருளின் சிதறல்களின் முழுமையான தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொண்டுள்ளார்.

நெஞ்சிலும், கைகளிலும் சிறு சிறு காயங்களுக்குள் ளாகிய அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் மேலும் வெடி பொருட்கள் காணப்படுவதாகவும் அது குறித்து அருகில் உள்ள படையினருக் குத் தகவல் கொடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

# கண்ணிவெடி அகற்றிய பிரதேசம் அரச அதிபரிடம் ஒப்படைப்பு

(ஜெயபுரம்)

கிளிநொச்சி மாட்டத்திலுள்ள ஜெயபுரம் பிரதேசத்தில் ஐநூறு ஏக்கர் பரப்பில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் பூர்த்தியான நிலையில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் குறித்த பிரதேசம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை 10.30 மணியளவில் ஜெயபுரத்தில் அமைந்துள்ள டி.டி.ஜி.என்ற கண்ணிவெடி அகற்றும் நிறுவன அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தநிகழ்வில், பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது குறித்த கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பொறுப்பதிகாரி பொன்சேகா, கண்ணிவெடியகற்றப்பட்ட பிரதேசத்திற்கான சான்றிதழை அரச அதிபரிடம் கையளித்தார்.

ஜெயபுரத்திலுள்ள தேவன் குளம் உட்பட அதனைச் சூழவுள்ள வயல் பிரதேசங்களிலேயே இக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளன. குறித்த பகுதியில் விவசாயச் செய்கையை மேற்கொள்ளும் வகையில் விரைவில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (149)

# ஜே.வி.பி.யின் போராட்டத்துடன் புலிகளை ஒப்பிடாதீர்கள்

## மனோவிற்கு ஜனாதிபதி தெரிவிப்பு

தெற்கில் ஜே.வி.பி. நடத்திய போராட்டத்திற்கும் விடுதலை புலிகள் நடத்திய போராட்டத்திற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. ஜே.வி.பி நாட்டைப் பிரிக்கப் போராட்டம் நடத்தவில்லை.

புலிகள் நாட்டைப் பிரிக்க போராட்டம் நடத்தினார்கள். எனவே, இவ்விரு தரப்பினரதும் போராட்டங்களுக்கு இடையில் இருக்கும் வேறுபாட்டை பல்கலைக்கழக மாணவர்களுக்கு எடுத்துக் கூறுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனின் பிறந்த நாளையொட்டி அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக மனோ கணேசனுக்கு நேற்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி இருந்த வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

மாண்டுபோனவர்களை நினைவுகூர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யுங்கள். கடந்த காலங்களுக்கு நாட்டை மீண்டும் இந்தச் சம்பவங்கள் அழைத்துச் செல்வதை அனுமதிக்காதீர்கள். நாட்டின் முதன் குடிமகன் என்ற அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் விவகாரத்தில் நேரடித் தலையீடு செய்யுங்கள் என மனோ கணேசன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்ததிற்குப் பதிலளித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன்,

தெற்கீல் மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி.) யினர் நடத்திய போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டத்திற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. ஜே.வி.பி. நாட்டைப் பிரிக்கப் போராட்டம் நடத்தவில்லை. புலிகள் நாட்டைப் பிரிக்க போராட்டம் நடத்தினார்கள். அத்துடன், ஜே.வி.பி. தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல.

யுத்தம் முடிந்து சில ஆண்டுகளே ஆன நிலையில் புலிகள் இன்று தடை செய்யப்பட்ட அமைப்பு. புலிகளை நினைவு கூருவதை நாம் அனுமதிக்க முடியாது. எனவே விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டத்திற்கும், ஜே.வி.பி.யினர் நடத்திய போராட்டத்திற்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டை பல்கலைக்கழக மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள் என்று ஜனாதிபதி கூறினார்.

வேலைப்பளுவின் இடையில் இந்த மாணவர் விவகாரம் தொடர்பாகத் எனக்கு முழு விபரம் இன்னமும் கிடைக்கவில்லை. இதுபற்றி எவரும் முழுமையாக விபரம் தெரிவிக்கவும் இல்லை. உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தற்சமயம் நாட்டில் இல்லை. அவர்தான் இந்த விவகாரம் தொடர்பான அமைச்சர். இன்னும் சில தினங்களில் அவர் நாடு திரும்புவார். அவர் வந்தவுடன் உடனடியாக இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கிறேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# வெளியானதா கணித வினாத்தாள்?

(கொழும்பு)

க.பொ.த சாதாரணதர பரீட்சையில் நேற்று நடைபெற்ற கணித பாட வினாத்தாள், பரீட்சைக்கு முன்னர் சில பிரதேசங்களில் தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரால் கலந்துரையாடப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பரீட்சைகள் ஆணையாளரால், பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிதுல்கல மற்றும் நாவலப்பிட்டிய போன்ற பிரதேசங்களில் நடைபெற்றதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் தொடர்பில், குறித்த ஆசிரியரிடம் விசாரணை செய்த பின்னர் வினாத்தாள் பரீட்சைக்கு முன்னர் வெளியிடப்படவில்லை எனத் தகவல் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

### விபத்தில்....

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனளிக்காது அவர் நேற்று மதியம் உயிரிழந்தார்.

# றேசிங்கார் கொள்வனவிற்கு 993 இலட்சம் எப்படி கிடைத்தது



ஜனாதிபதியின் புதல்வர்களுக்கு றேசிங் கார் வாங்குவதற்கு 993 இலட்சம் ரூபா கிடைத்தது எவ்வாறு என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அநுரகுமார திஸாநாயக்க, றேசிங் கார்களை வரி இன்றி இறக்குமதி செய்ததன் மூலம் நாட்டிற்கு 2000 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள விடயங்கள் ஏற்கனவே ஜனாதிபதியின் புதல்வர்களுக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டது. இதன் பின்னர் 19 றேசிங் கார்களை இறக்குமதி செய்வதற்கு திட்டம் தீட்டப்பட்டது. இந்த வரவு - செலவுத் திட்டத்தினால் பொதுமக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை. ஜனாதிபதி தமது புதல்வர்களுக்கு ஏற்பவே வரவு - செலவுத்திட்டத்தை தீட்டியுள்ளார். நாட்டில் பல இளைஞர் யுவதிகள் வேலை இல்லாமல் உள்ளாரென அவர் மேலும் தெரிவித்தார்.

# நட்டத்தை ஈடுசெய்யவே பெற்றோல் விலை அதிகரிப்பு

நட்டத்தை ஈடுசெய்யும் நோக்கிலேயே பெற்றோலின் விலை உயர்த்தப்பட்டதாக பெற்றோலிய வள அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோல் இறக்குமதி செய்யும் போது 10 முதல் 12 ரூபா வரையில் நட்டம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நட்டத்தை ஈடுசெய்யும் நோக்கில் விலையேற்றம் அறிவிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு லீற்றர் டீசல் இறக்குமதி செய்யும் போது 16 ரூபாவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணை இறக்குமதி செய்யும் போது 26 ரூபாவும் நட்டம் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

மசகு எண்ணெய் இறக்குமதியினால் ஒரு லீற்றருக்கு 40 ரூபா நட்டம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த நட்டங்களை ஈடு செய்வதற்காகவே விலையேற்றம் அறிவிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

# இணுவில் ஆட்டோ சாரதியை புலனாய்வுப் பொலிஸாரே கைதுசெய்தனர்

(யாழ்ப்பாணம்)

இணுவில் சந்தியில் வைத்து கடந்த வியாழக்கிழமை ஓட்டோச் சாரதியைக் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரே கைது செய்துள்ளதாகத் தமக்குத் தெரியவந்திருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு தென பகுதி இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த ஆட்டோ சாரதி குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தமக்குத் தெரியவந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேற்படி ஓட்டோச் சாரதி கடத்தப்பட்டதாகத் தமக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை அடுத்து தாம் அது தொடர்பாக விசாரணை மேற்கொண்டபோது பொலிஸ்தரப்பினரிடம் தொடர்பு கொண்டு இவ்விடயம் குறித்து கேட்டபோது குறித்த நபர் கடத்தப்படவில்லை எனவும் அவர் குறித்த கொலைச் சந்தேக நபர் என்பதனால் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாகவும் ரி.கனகராஜ் மேலும் தெரிவித்தார்.

மேலும் ஏற்கனவே வெளியாகிய செய்திகளின் படி அவர் கடததப்படவில்லை கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (யுர)

# கணிதபாட பரீட்சைக்கு 50 மாணவர்கள் தோற்றவில்லை

மாத்தளை, கும்பியங்கஹாவெல பரீட்சை மத்திய நிலையத்தைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு நேற்று நடைபெற்ற க.பொ.த சாதாரண தர கணிதப்பாடப் பரீட்சை எழுத முடியாமல் போய்விட்டதாக வலய கல்விப் பணிப்பாளர் திலக் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தற்போது நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக ஹெலிகொப்டர் மூலம் அனுப்பப்படவிருந்த வினாப்பத்திரங்களை அனுப்ப முடியாமல் போய்விட்டதாலேயே மேற்படி மாணவர்களால் பரீட்சை எழுத முடியாமல் போய்விட்டதாக அவர் கூறினார்.

அத்துடன், நாளையதினம் புதன்கிழமை நடைபெறவுள்ள பரீட்சைக்கான வினாத்தாள்களைக் கடற்படையினரின் உதவியுடன் படகு மூலம் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.

# ஜனாதிபதியை சந்தித்தார் ஆஸி.வெளியுறவு அமைச்சர்



(கொழும்பு)

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார், நேற்று முற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, சட்டவிரோத குடியேற்றம், இரண்டு நாடுகளுக்கு மிடையிலான பொருளாதார உறவு உள்ளிட்ட பல விடயங்கள், தொடர்பில் கலந்துரை யாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், வெளிவிவகாரச் செயலாளர் கருணாதிலக அமுனுகம மற்றும் ஜனாதிபதி செயலக ஊடகப் பேச்சாளர் மொஹான சமரவிக்கிரம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பட்டம் விட்ட சிறுவர்கள் விபத்தில் சிக்கினர்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் பட்டம் விட்ட சிறுவர்கள் சிலர் விபத்துக்குள்ளாகியுள்ளனர். நியூட்டன் விளையாட்டுக் கழக மைதானத்தில் பத்து அடி உயரமான பட்டத்தைப் பறக்கவிட்ட சிறுவர்களைப் பட்டம் வேகமாக இழுத்துச் சென்றதால் இந்த விபத்து நிகழ்ந்தது. இதில் சி.விதுசன் (வயது 15) என்பவர் காயமடைந்துள்ளார். (116)

# தாயும், இருபிள்ளைகளும் சடலங்களாக மீட்பு

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான கல்கிஸை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து தாயொருவர் மற்றும் அவரின் இரண்டு ஆண் பிள்ளைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை கிடைத்த தகவலின் அடிப்படையில், இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சடலங்களில் தீக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

சடலங்களாக மீட்கப்பட்டவர்களில் தாய்க்கு 31 வயதாகும். ஆண்பிள்ளைகள் 3 வயது மற்றும் ஒரு மாத வயதானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நில அளவை அதிகாரி கொலை; தகவல் அளித்தால் சன்மானம்

நில அளைவத் திணைக்கள அதிகாரி கொலை தொடர்பான தகவல்களை வழங்குவோருக்கு ஒரு மில்லியன் ரூபா சன்மானம் வழங்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். நில அளைவத் திணைக்களத்தின் அதிகாரியான நாமல் அஜ ந்த என்பவர் அண்மையில் மன்னாரில் வைத்து படுகொலை செய்யப் பட்டிருந்தார்.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் துல்லியமான தகவல்களை வழங்குவோருக்கு ஒரு மில்லியன் ரூபா சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சன்மானம் வழங்குவது தொடர்பிலான விளம்பர சுவரொட்டிகள் மன்னார் மாவட்டத்தில் ஒட்டப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது; மேலும் மூன்று முறைப்பாடுகள் பதிவு

## வடமராட்சியில் தொடரும் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து மேலும் மூவரது முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்திற்கு நேற்றுக் கிடைத்திருப்பதாக அதன் யாழ். இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார். பருத்தித்துறை, நெல்லியடி, தெல்லிப்பளை ஆகிய பகுதிகளில் இருந்து கைது செய்யப்பட்டவர்களது உறவினர்களால் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். இவர்களது முறைப்பாட்டுடன் நேற்றுவரை இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 37 பேரது முறைப்பாடுகள் தமது காரியாலயத்திற்குக் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாடு குறித்துத் தமது கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்குத் தகவல் அனுப்பிவைத்திருப்பதாகவும், ரி.கனகராச் மேலும் தெரிவித்தார். (பா)

# மண்டைதீவில் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இருந்து மண்டைதீவு நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்வண்டியொன்று வயல் வெளியில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் பயணிகள் பலர் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளார். (பா)


# கண்ணீர் அஞ்சலி

## உதயகுமார் நிஷாந்தன்

குப்பிளான் ஏழாலையைச் சேர்ந்தவரும் இலங்கை வங்கியின் உரும்பிராய் கிளையின் ஊழியரும், இலங்கை வங்கியின் சுன்னாகக் கிளை உத்தியோகத்தரான உதயகுமார் அவர்களின் மகனுமான நிஷாந்தன் 16.12.2012 அன்று அகலாமரணமடைந்த செய்திகேட்டு, ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பிற்கும் பண்பிற்கும், பணிவிர்க்கும், ஒழுக்கத்துக்கும் எடுத்துக்காட்டான நற்பண்புகளின் இருப்பிடமான நிஷாந்தனைப் பிரிந்த குடும்பத்தாருக்கும், உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மு.சிவசுந்தரலிங்கம்,
உரும்பிராய் கிழக்கு.

ந.கணேசலிங்கம்,
உரும்பிராய் வடக்கு.

க.சேனாதிராசா,
இருபாலை கிழக்கு.

ப.முருகையா,
விநாயகர் வீதி,
உரும்பிராய் வடக்கு.

கி.இறஞ்சன் (சண்)
விதானையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.

க.கணேசலிங்கம்,
உரும்பிராய் மேற்கு.

வ.நவரட்ணம்,
விதானையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.

அ.பிரபாகரன்,
உரும்பிராய் வடக்கு.

(C/1770)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அர்ப்பகன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.